ஸ்ரீ
ராஜேஸ்வரி துணை.

நவீன நவரத்தின ஒப்பாரி

என்னும்

காம சரிதைக் கக்ஷி.

இரண்டாம் பதிப்பு.

இது,

அநேக நாடக. காவிய நாவல்கள்

இயற்றமிழாசிரியன்

பு. இராஜகோபாலன்

எழுதப்பெற்று,

தி. இராஜகோபால முதலியாரவர்கள்
சென்னை
அமிர்த குணபோதினி அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை]   1930   [

Registered Copy-Right.

விவேகம் !	விகடம் !	அற்புதம் !
விநோதம் !	வித்வத்வம் !	ஆச்சரியம் !
விசித்திரம் !	அநுபவம் !	ஆநந்தம் !

அமிர்த குணபோதினி

அறிவை விளக்கி உற்சாகத்தைத் தரவல்லதான
அநுபவ விநோத நீதிகள் நிறைந்துள்ள

ஒரு நூதன உயர்தர தமிழ் மாதப் பத்திரிகை.

எஸ். ஜீ. இராமாநுஜுலு நாயுடு அவர்கள் இதன் ஆசிரியர்.

இத்தகைய நவீன மாத சஞ்சிகை இதுவரை வெளிவந்த தில்லை. இது தமிழ் அறிந்த ஒவ்வொரு அகத்துள்ளும் புகுந்து நிலவும் உன்னதம் வாய்ந்தது. சித்திரப் படங்களுடன் திகழ்வது. கல்விச்செல்வம் பொருட்செல்வம் பெருகி இன்பம் ஓங்குவதற்குரிய வியாசங்களால் ஒளிர்வது. அறிவைவிளக்கி உற்சாகத்தைக் கொடுப்பது. நன்னடக்கையும், லௌகிக யுக்தியும், பாஷா ஞானமும், தேசாபிமானமும், ஈஸ்வரபக்தியும், ஆழ்ந்த யோசனையும் உண்டாக்கக்கூடியது. எல்லா மதஸ்தர்களுக்கும், எல்லாஜாதியார்களுக்கும் ஏற்றதாய் நல்ல விஷயங்கள் இருக்கப்பெற்றது. சொல்நயம் மிகுந்து தமிழ் உலகமெல்லாம் ஜொலிக்கும்படியா யிருப்பது "அமிர்த குணபோதினி" தான். ஆடவர், மகளிர், பெரியோர், சிறியோர் எவர் கையிலும் இப்பத்திரிகையைக் காணலாம்.

இதில் "ஆநந்த தரிசனம்" "பழமொழிக் குறிப்புகள்" "பத்திரிகாசாரம்" "குழந்தைகள் பக்கம்" "பிரபஞ்ச தரிசனம்" "விகடப் பிரதாபன்" "சென்ற மாதம் என்ற தலைப்பெயர்களின் கீழ்வரும் ஒவ்வொரு விஷயங்களும் சிந்தைக்கினிய செவிக்கினிய வாய்க்கினிய, அலங்கார வசனமழையாய்" விளங்கும். இப்பத்திரிகை எவ்விதத்திலும் சிறந்ததென் பதை தங்களுடைய அனுபவத்தில் தாங்களே அறிந்துக் கொள்ளலாம். அமிர்தகுணபோதினியின் சொற்ப சந்தாவை உற்று நோக்குங்கள். வருஷச் சந்தா ரூபாய் ஒன்றே. (ரூ. 1) இன்றே எழுதுங்கள் உடனேசேருங்கள். மாதிரிகாபி இனம்.

தி. இராஜகோபாலமுதலியார், 302, தங்கசாலைவீதி, மதராஸ்.

ஸ்ரீ
ராஜராஜேஸ்வரி துணை.

நவீன

நவரத்தின ஒப்பாரி

என்னும்

காம சரிதைக் கக்ஷி.

அநேக நாடக காவிய நாவல்கள் இயற்றமிழாசிரியன்,

பு. இராஜகோபாலன்

எழுதியது.

இதில்,
உலக உற்பத்தி முதல் மதன் ரதி பிறப்பும், நாரத
மகாமுனிவர் நன்மொழியால், இந்திரன் மன்மதனை, ஈசன்
தவத்தை யழிக்க ஏவுதலும், அங்கஜன் அத்தன்மீது
ஐங்கணை தொடுத்து அனலாவதும், இரதிதேவி
ஈசனிடம் முறையிட்டுப் புலம்பலும், அந்தி
வண்ணன் அனங்கனை அருபியாய்
எழுப்பலும், சித்தஜன் எரிந்த
கக்ஷி பாடல்களும், எதிர்கக்ஷி மறுப்புப் பாடல்களும்,
அரிவையர் ஒப்பாரிகளும் அடங்கியுள்ளது.

சென்னை,
தி. இராஜகோபால் முதலியாரவர்களது
"அமிர்த குணபோதினி" அச்சுக்கூடத்தில்,
பதிப்பிக்கப்பட்டது.

1929

காபிரைட்]

PRINTED AT THE AMIRTHA GUNABODHINI PRESS,
302, MINT STREET, MADRAS.

முன்னுரை

சேந்தமிழ்ச் செல்வர்காள் !

வேதாகம சாஸ்திர புராண யிதிகாஸ வேதாந்த தத்துவசாரமாகிய மதன் சரிதையை இன்னிசைக் கருவிகளுடன் அநேகர் பாடக்கேட்டும் இதுவரை நூன்முகமாய் வெளிவந்தவைகளை வாசித்தும் ஷ மதன் ரதி சரித்திரம் கோர்வையாய் கிட்டவில்லையென பல நண்பர்கள் வேண்டுகோள் புரிந்ததின்பேரில், எனதரும் தந்தையார் தமிழ்கலைப் பாவாண ஞானுசிரியர் பு. நாராயணசாமி நாயகர் அவர்களின் அருட்பயிற்சி யானும் பாலப்பருவ முதல் அத்வைத ஜண்டமாருதம் தஞ்சைக்கரந்தை ஸ்ரீலஸ்ரீ இராமசாமி உபாத்தியார் மரபு திரிசைபட்டாராம் பிள்ளை மாணவர் தி. சின்னசாமிப் பிள்ளை 1, தஞ்சை சமஸ்தான முத்தமிழ் வித்வான் திரிசிரபுரம் ஸ்ரீலஸ்ரீ வைத்தியலிங்க தேசிகர் மரபு வாசிவானுபதேசி நாகை கோவிந்தசாமி உபாத்தியாயர் மாணவர் பா. கிருஷ்ணசாமி செட்டியார் 2 ஆக இருவரின் மாணவர் அதிவீர தீர ஜெய கா. வே. சிங்காரவேல் நாடார் அவர்கள்பாற் பெற்ற மன்மத தகனவிவாரண சாம்பிரதாயத்தானும் இயன்றவாறு இயற்றியுள்ள இச்சிறு நூலையும், முந்தி என்னுல் எழுதப்பெற்று வெளிவந்துலவும் அநேக நாடக காவிய நாவல்களைப் போல் அன்பர்கள் ஆதரித்து ஆசீர்வதிக்கக் கோருகிறேன்.

நிற்க, பரோபகாரமாய் பணச்செலவை கவனியாமற் பற்பல நூல்களை அச்சுப்பதிப்பாய் பிரசுரிக்கும் "அமிர்த குணபோதினி" அதிபர், T. இராஜகோபால் முதலியார் அவர்களுக்கும் மனமார்ந்த வந்தன கைம்மாறளிக்க கடப்பாடுடையோமாக.

பு. இராஜகோபாலன்.

அடியில் கண்ட எமது கம்பெனியில் வேதாந்த புத்தகங்கள், சிறந்த துப்பறியும் தமிழ் நாவல்கள், கதைப் புத்தகங்கள், அம்மானை தினுசுகள், (ஸ்கூல்) பாடசாலைப் புத்தகங்கள், கெடியாரங்கள், ஸ்டேஷனெரி சாமான்கள், பலவித வியாதிகளுக்கும் மருந்துகள், ஜவுளி தினுசுகள், இன்னும் இதரமான சாமான்கள் யாவும் கிடைக்கும். எமது கம்பெனி பெரிய கேட்லாக் வேண்டியவர்கள் அடியிற்கண்ட விலாஸத்திற் கெழுதி பெற்றுக்கொள்ளலாம்.

விகடர் அண்டு கோ,

தபாற்பெட்டி நெ. 164, மதராஸ்.

ஸ்ரீ
ராஜ ராஜேஸ்வரி துணை.

நவீன நவரத்ன ஒப்பாரி
என்னும்
காம சரிதைக் கக்ஷி.

காமன் எரிந்த கக்ஷி

விநாயகர் துதி விருத்தம்

ஆதியாம் பரப்ரம்ம சொரூபா போற்றி
ஆலால முண்டசிவ பாலா போற்றி
சோதியாய் விளங்கும் கஜமுகனே போற்றி
சொல்லரிய அம்பிகையின் புத்ரா போற்றி
நீதியாய் ஓங்காரத் தமைந்தாய் போற்றி
நிர்மலா எந்தனுக் கருள்வாய் போற்றி
வாதிகளை ஜெயங்கொள்ள வருவாய் போற்றி
வழுத்துமிந்த மதன்சரிதை வாழ்கப் போற்றி.

இலாவணி

ஆதிப்பிரணவமாய் அமர்ந்தக் கணபதியே வாரும்
அருளெனக்குத் தாரும்
அவையதனில் நீரும் சிவ
அத்தன் கண்ணாலே மதன் பத்தி எரிந்த கதை கூறும்

போதிலென்னுவதில் பொருந்தி யமர்ந்திருந்துக்காரும்
பொருளதனைச் சேரும்
* பொலம் பெற விச்சிரும் எந்த
பொழுதும் உன்னடியை தொழுது உரைக்கும் கவிபாரும்
(உத்) வாதியை ஜெயங்கொள்ள யானும்
இப்போ—வழுத்துங் கவியதனில் தானும்
நீதியதாயமர நிமையி லெதிரினிலே வாரும் (அரு)

(2) காமன் எரியா நூலைக் கண்டு தெளிந்தவர்போல் கூடி
கவியதனைப் பாடி
கசூிகள் செய்வோரோடி இனி
கலங்கும் படியா யெந்தன் நலம் பெறு மொழியைக் [கொண்டாடி
பூமணக்கும் வித்வ புலவர்கள் சூழ்சபையை நாடி
புனிதரடி தேடி
புகன்றென் சிரம் சூடி—வந்த
புல்லறிவோர்க்கு மதி சொல்லி எதிரிகளை ஜாடி
(உத்) நேமமுடனே ஜெயமாக
மிக்க—நேர்மையாய் நான்பெற்றுப்போக
மாமலரடியொடு மகிழ்வா யெதிரினிலே வாரும் (அரு)

(3) முத்தமிழ்க் கடலதில் மூழ்கி யெழுந்து வந்தபேரே
முடிவை யுரைப்பீரே
முறண்படாமல் நீரே உங்கள்
முன்னோர்கள் சொன்னமதன் நன்னயமாயிருந்தால் வேறே
இத்தலமீதவனை ஈன்ற தாய் தந்தைகள் யாரே
இருந்தாலவர் பேரே
இயம்பி வருவீரே நூல்
இல்லை யெனிலெழுந்து சொல்லாமலோடி ஒளிவீரே

* பொலம் அழகு

(உத்) கத்துக் குட்டிகள் வரலாமா
எங்கள்—ககூஷி அவூலமாகப் போமா
சித்தம் நொந்தழயிவர் சிறப்பா யெதிரினிலே வாரும் (அரு)

(4) பஞ்சவியற் றமிழை பாரில் தினம் பொழியும் பாலன்
பகரும் வித்வலோலன்
பண்டிதர்க் கனுகூலன் சித்ர
பதுமையதைப் போல் மோனை எதுகை யமைக்குஞ்
[ஜெயசீலன்
இரஞ்சித நவரச யாப்பில் இணையில்லா வேலன்
இன்னிசை சுகலோலன்
இராஜ கோபாலன் சொல்
இந்தச் சபையதனில் வந்த எதிரிகட்குக் காலன்
கிஞ்சுகக்கிள்ளை யென நீதம்
பெற—கிருபையுட னளித்த கீதம்
கொஞ்சவே சபைதனில் மிஞ்சி யெதிரினிலே வாரும் (அரு)

அவை யடக்கம் குரு வணக்கம்

விருத்தம்

மங்களஞ்சேர் சபையதனில் அமர்ந்திலகும்
மகிபர்களின் திருத்தாளை மனதிற் பூண்டு
துங்கமதாய் வண்ணையம் பதியில் வாழும்
துரைராஜ இராஜகோபால் செய்த பாட்டை
சங்கமதில் சவாலெனவே எடுத்துச் சாற்றி
சபாஷ் சபாஷ் என எதிரி கதறியோட
திங்களொளி போல் தங்கக் கொடியையேற்றி
திருநடன கவிமழையைப் பொழிகுவேனே.

இலாவணி

(1) பஞ்சலக்ஷ்ணங் கொஞ்சிடும்
தமிழ்—பாவலோர்க்கு வந்தனம்
ரஞ்சிதகுண ராஜஸ்ரீ
மகா—ராஜரவர்க்கு வந்தனம் (பஞ்)

(2) வந்தனம் மிகதூந்தேன் யான்
வந்த இச்சபையோருக்கும்
செந்தமிழ்க் கதிபரெங்கள்
செல்வராம சாமிக்கும் (பஞ்)

(3) அலைகடல் முகில் கலங்கிட
இந்த அண்ட மெல்லாம் நடுங்கிட
கலைபுகழும் பட்டாராமர்
கவியருட் கொண்டாடிட (பஞ்)

(4) சித்தஜன் கதை பாடவே
சின்னசாமி யருளை நாடவே
வித்தகராம் சிங்காரவேல்
விருதை யெடுத்து சூடவே (பஞ்)

உலக உற்பத்தி முதல் மதன்ரதி சரித்திர விருத்தம்

செங்கண்மால் தவமதனல் மதன் பிறந்து
செந்தணலாய் அரன் கண்ணல் எரிந்த காதை
சிங்காரந் தனையெடுத்து புராணசார
சிறப்பதனை ஓதுகிறேன் விபரமாக
இங்குள்ள சபையோர்கள் தாமறிய
இயற்றமிழ் இராஜகோபால் அருளினலே
அங்கமது நடுங்காதீர் வாதிகளே
அமைதியுடன் கவனித்துக் கேட்பீர்தாமே.

இலாவணி.

(1) மலையெனச் சிறந்தோரே
மன்மதன் சரிதையைக் கேட்பீரே
மங்களமாகமதன் பிறந்ததும் எரிந்ததும்
மாசபைதனில் நேரே
அலையாமலமர்வீரே
அறையும் நாலுயுகமதின்முன் சீரே
அகிலபுவன சராசரங்களுடனே யிந்த
* ஐம்பூதமில்லைபாரே
(உடான்) கலைவழியுணராமல் நிலையின்றி வந்தவரே
கலங்காமல் கேட்பீரே. (மங்)

வசனம் :—கேளும் கல்விக்கடலில் நீந்தி காமன் எரியாத கக்ஷியை யெடுத்து கவிபாடவந்த கவிஞரே! ஆதியில் இவ்வுலகமானது எவ்வித தோற்றமும் ஒடுக்கமுமின்றி இருள்மயமாய் இருக்குங்கால் பரம்பொருளானது அகில புவன சராசரங்களை உற்பவம் செய்த உண்மை எவ்வாறெனில்,

பாட்டு.

(2) ஆதியில் சோதியொளியாய்
அவதரித்து ஆகாயமான நிலையாய்
அமர்ந்து அதன்பின்னாலே உலவிப் பரவியதாம்
† அனிலமதாக முடிவாய்
பூதிகமாக வெளியாய்
புவனமுடன் பூரித்து கடல்மலையாய்
‡ புங்கவர் தங்களையும் அங்கமதாகச் செய்த
புதுமையைக் கேள் முடிவாய்

---

* ஐம்பூதம்-அப்பு பிரிதிவு தேய்வு வாய்வு ஆகாயம். † அனிலம்-காற்று. ‡ புங்கவர்-கடவுள்.

(உடான்) நீதியதாக யின்னம் ஒதிவருவேனந்த
நிலைகளைக் கேட்பீரே (மங்)

வசனம் :—கேளும் உத்தம கலையுணராத வித்தகரே ; அந்தப் பரபிரம்மமானது சோதியொளியாய் எழுந்து ஆகாய வடிவமாயமைந்து காற்று மயமாய்ப் பாவி ககன புவன கடல் மலைகளாகி சிருஷ்டி திதி சங்கார கர்த்தாக்களாய் சிவன் மாலயன் முதலியோரைப் படைத்த தெவ்வாறெனில்,

பாட்டு.

(3) * கய்முகன் முதல் பிறக்க
கருதி அம்மா வென்றதாலவன் துறக்க
கஞ்சமலரில் பிர்மன் தேவியெனவேவர
கனலானபோது சிறக்க
† அய்முகன் தனையழைக்க
அவதரித்தமால் தங்கையென உரைக்க
அத்தனும்அப்பொழுதேபத்தினிப்பெண்ணேயென்று
அன்புடன் மணம் முடிக்க
(உடான்) வய்யகமுய்ய விஷ்ணு அய்யனிடத்தில்பெற்ற
வரமதால் கேட்பீரே (மங்)

வசனம் :—கேளும் நற்றமிழுணரா கற்றவரோ ; அந்த சோதி சொரூபமே மாயாசத்தியாய் விளங்கி ஆண் பெண் சேர்க்கைக்குரிய ஓர் ஆளனைப்படைக்கலாமென நினைக்கையில் விநாயகன் பிர்மன் விஷ்ணு ஆகிய மூவரும் தனித்தனி உதித்து முறைதவறி யழைத்ததால் அம்பிகை தகிக்க, அத்தன் பிறந்து பத்தினியாய் மதித்து திருமணம் புரிந்த தால் உலகத்தோர் உய்யும்வண்ணம் அம்மாய்கையை தனக் குப் புத்திரனுயளிக்க வேண்டுமென மகாவிஷ்ணு வரம் பெற்றதை ஓதுகிறேன் சாதுவாகக் காதுகொடும் புலவீர்.

---

* கய்முகன்-விநாயகன். † அய்முகன்-சிவன்.

பாட்டு.

(4) ஜெயத்தமிழ் பிரகாசன்
செழிப்புறும்நற் சென்னை நகரின்வாசன்
செல்வர் மகிழக்கவி வல்லமையாய்ப் பொழியும்
செம்மலாம் ஜெகதீசன்
இயற்றமிழ்க் கதிரேசன்
இனியஉரை இசைதரும், உல்லாசன்
இராஜகோபாலனென தராதலமெலாம் புகழ்
‡ இகலற்ற விஸ்வாசன் [றேன்
(உடான்) சுயற்றமிழிதைக்கொண்டு நயமுடனுரைக்கி
சுகமுடன் கேட்பீரே (மங்)

விருத்தம்.

சத்தியினல் சிவனயன்மால் சிருஷ்டிதிதி
சங்காரத் தொழில்பெறவே மாய்கைதன்னை
உத்தமமாய் ஜீவர்கள்மேல் தொடுப்பதற்கு
உகந்தவனும் ஓர்பிள்ளை வேண்டுமென்று
அத்தனிடம் மகாவிஷ்ணு கூறக்கேட்டு
அருளியோர் மறையவனைக் காமனாக
சித்தமதில் நினைத்தபோ தங்கந்தன்னிற்
சிறப்புபெற உதியென்றார் சிவனுந்தானே

இலாவணி.

மாரன் அதற்குப்பின்னே தீரமதாகவே
மனோவதி பட்டணம் அதிற்பாரே
மங்களமாக விஷ்ணு அங்கந்தனிலே வந்து
மகவாகத் தானுதித்து கவியோரே
வீரமாய்ப் பலகலை பயிற்சிபெற்றே மதலை
விளையாடி வளர்ந்துமே ஒருவாரே

‡ இகல்-பகை.

விளங்கியே யீரைந்துவயதுள்ள பாலகனுப்
* விசுருதியுற்றதை நீரறிவீரே
(உத்) † ஆரலர்தமைவெல்ல கருப்புவில்லெடுத்து
‡ ஐங்கணை யதிற்பூட்டி வண்டுநாண் தொடுத்து
தேரது தென்றலாக புலவீரே (மங்)

வசனம் :—முன்கூறிய சத்தியாம்சமாகிய சிவன் விஷ்ணு பிர்மன் ஆகிய மூவரும் § நால்வகை யோனியால், || எழுவகை தோற்றங்களேயும் சிருஷ்டிதிதி சங்காரம் செய்வதற்கு, அனுகூலமாய், மாய்கையை எடுத்து ஜீவராசிகள்மேல் தொடுத்து இச்சையையளிக்க ஓர் மகவுவேண்டுமென, மால் அரனைக்கேட்க, அவர் சிற்றின்பப்பிரியனாகிய ஓர் மறையவனை ஆட்கொள்ளவேண்டி, மகாவிஷ்ணு சித்தமதில் நினைந்தபோதவர், அங்கந்தன்னில் அவதரிப்பாயென அருள, அவ்வாறே மனோவதிபட்டணந்தன்னில் மன்மதன் பிறந்து பலகலைகளும் பயிற்சியுற்று வளர்ந்து பாலப்பருவமாகிய பத்து வயதில் கீர்த்தியோங்க எதிரிகளை வெல்லக்கூடிய கன்னல்வில்லில் ஐங்கணைபூட்டி நாண் தொடுத்து தென்னற்றேறிலேறி வருவதைச் சொல்லுகிறேன் வல்லவரே.

பாட்டு.

(2) பச்சைக்கிளிவாகன மச்சக்கொடிபறக்க
○ பசதமேகுடை கடல்முரசாக
பகரவேகுயிற்காளம் பாவையர் படைசூழ
பசுந்துபெற வசந்தன் உடனாக

---

* விசுருதி-கீர்த்தி † ஆரலர்-பகைவர் ‡ ஐங்கணை-வனசம் சூதகம் அசோகு முல்லை நீலம். § நால்வகையோனி-வித்து அண்டம் யோனி வியர்வை || எழுவகை தோற்றம் ஊர்வன விலங்கு மரம் பறவை நீர்வாழ் ஜந்து சுரர் மனிதர். ○ பசதம்—சந்திரன்.

உச்சிதமானவேட்டை அச்சமில்லாமலாடி
† உதாரிகமதன் வரும்போதாக
உக்கிரமான தவம் பக்குவமுனிசெய்ய
உணராமற் கணையெய்தான் துணிவாக
(உத்) இச்சைக்கதிபன் கணைதொடுத்ததே பாபம்
இட்டாரேமுனியுடன் பிடியெனசாபம்
‡ கச்சுருவாயெனவே புலவீரே. (மங்)

வசனம்:—முன் கூறிய தேர்மீதாரோகணித்து பச்சைக்கிளிவாகனமுடன் மச்சக்கொடிபறக்க சந்திரனைக் குடைவிரித்து கடல்முரசறைய குயில் காளமூத பாவையர் படைசூழ வசந்த மந்திரி அருகிலிருக்க கானில் வேட்டையாடி வருங்கால் பக்குவமுனி யென்பவர் அங்கோர் விருக்ஷத்தடியில் உக்கிரமாய்த் தவசிருப்பதைக் கண்ட வில்லாளி விளையாட்டாகக் கணையை எய்யவும், யோகவானாகிய ரிஷிமீது அது தாக்கி போக விச்சையை அளிக்க அவர் சினந்து அத்தன் கண்ணால் பத்தியெரிந்து நீ அழியக் கடவா யென சபித்துவிட்டதால் இன்னும் கவனியும் புலவீர்.

பாட்டு.

(3) தேவர்கள்கூடியொன்றாய் ஆவலாய்க்கடலதை
தேசபெறக் கடையும்போதன்று
தேவிரதியுதிக்க மேவியே ¶ யாழ்முனியும்
தெரிவித்தார் யீசனிடம் பார்சென்று
காவலனே யிந்த மால்மகன் காமனுக்கு
கன்னிரதியணங்கை தானின்று

† உதாரிகம்-வீரன். ‡ கச்சுருவாய்-நெருப்பாவாய். ¶ யாழ்முனி—நாரதர்.

கல்யாணமாய்முடித்து நல்லோர்களாசிகூற
கடாக்ஷித்தருளுமென்றார் முன்நின்று
(உத்) ○ பாவகன் தந்தையிதை கேட்டுசம்மதித்து
● பாரளந்தோன்முகத்தை பார்த்ததேதுதித்து
நாவசைத்தா ரொப்பியே புலவீரே. (மங்)

வசனம்:—முன் கூறியபடி மன்மதன் சாபம் பெற்ற நின்பின், தேவர்கள் ஒன்றுகூடி திருப்பாற்கடல் கடையும் போது தேவி ரதி யுதிக்கக்கண்ட நாரதர் ஈஸ்வரனிடம் சென்று இரதிதேவியை மன்மதனுக்கு நறுமணம் முடித்து ஆசிர்வாதம் புரிந்து கடாக்ஷித்தருளுமெனக் கூறியதால் அருகிலிருந்த மகா விஷ்ணுவின் சம்மதி எப்படியென அறியும் பொருட்டு உற்றுப்பார்க்க, உலகளந்தோனும் உத்தமமென சத்தியஞ் செய்தார். பின்னுஞ் சொல்வேன் நன்னயமாய்க் கேளும் மன்னவரே.

பாட்டு.

(4) சித்திரமானசுப உத்தம லக்கினத்தில்
சிறப்புறமணஞ்செய்தா ரிதைக்கேட்டு
சிந்தைகலங்காதீர்கள் வெந்துத்தணலானதை
சிங்காரமாயுரைப்பேன் யினிபாட்டு
வித்தகன் இராஜகோபால் இத்தலத்தோர்மகிழ
விளம்பிடும் இயற்றமிழ்க் கெதிர்காட்டு
+ விகதனமாகயிது அகமதிலோங்கியே
விருதுபெற்றுலவிடும் கவி நோட்டு
(உத்) அத்தன் கண்ணாலேகாமன் அனலானகாக்ஷி
அறையுதே புராணசாரம் ஆகவேசாக்ஷி
சத்தியமென்றே கொள்ளும் புலவீரே.

○ பாவகன்—முருகன். ● பாரளந்தோன்—மகா விஷ்ணு.
+ விதகனம்—புகழ்.

வசனம்:—இவ்விதமாய் இரதியும் மன்மதனும் கலி யாணம் செய்துக்கொண்ட பிறகு சரச சல்லாபமாயிருக்கை யில் இந்திர லோகத்தின் விந்தையை யுணரும் புலவீர்.

வழிபடுகடவுளர் வணக்கம்.

குறட்பா—அத்திமுக னறுமுக னயன்மா லம்பலவன்
சத்திகிரு வாணியருட்சீர்.

(அந்தரலோகம் அமரர்கோன் கோலுவியல்.)

இந்திரன் சொல் துதி விருத்தம்.

உலகெலாம் செழித்துவாழி உம்பரென்னளும் வாழி
பலகலைகளுணர்ந்தோர்வாழி பக்தர்கள் சித்தர்வாழி
நிலவுநீள் சடையாயானும் நின்னருளால் நடத்தும்
நலமுறும் செங்கோல்வாழ நன்மைசெய்தருளுவாயே.

தேவர்கள் போற்றி விருத்தம்.

அந்தரந்தன்னில்நின்று ஐம்பூத சேர்க்கையாலே
சந்ததம் புவனசரா சரமெலாம் உஜ்ஜீவிக்க
விந்தையா யாதரிக்கும் விமலனுக் கன்பனான
இந்திர பூபாபோற்றி இணையடி பணிகின்றோமே.

தேவர்கள் சொல் வசனம்:—அமரர்க்கதிபா, அனைவ ரும் போற்றி செய்தோம்.

இந்திரன் சொல் வசனம்:—கல்யாண், கல்யாண், அமருவீர்.

நாரதரைநோக்கி இந்திரன்சொல் **வசனம்:**—சப்த லோக சஞ்சாரயாழ்முனியே, இன்றிவ் விந்திர லோகத்தின் கண், செந்தழல் வீசும் விந்தைய தென்னவென விளங்கப்பகரு வீர்.

நாரத மகாமுனி சொல் விருத்தம்.

சிலநாளாய் சனகாதி முனிவர் நால்வர்
சிற்பரனின் திருத்தாளிற் கடிமைபூண்டு
பலவாறு துதிசெய்து யோகமார்க்கம்
பக்திபெற அருளுமென பரமனின்று
நலமுடனே அஷ்டாங்க சாதகத்தை
நவின்றிடவே கல்லாலின் கீழமர்ந்து
இலகுவதா லிந்த நிலை சுவாலையாக
இருப்பதென நீயறிவாய் இந்திரபூபா.

வசனம் :—தேவர்க்கதிபா ; சனகாதியர் நால்வர் அத்தனுக்கடிமை பூண்டு அஷ்டாங்க யோகசாதனை அறிவிக்கவேண்டுமென இரங்கியதால் கர்த்தன் கல்லாலின்கீழ் கண்மூடியமர்ந்த காக்ஷியே இப்படி தகிக்கின்றது.

இந்திரன் சொல் விருத்தம்.

அன்புடைய யாழ்முனியே நன்று நன்று
அரன்வந்தால் இனிநமக்கு ஆவதென்ன
நன்மையுண்டோ தீமையுண்டோ தேவர்கட்கு
நவிலுமையா அதையெனக்கு முன்னதாக
தன்மையதாய் அதன்பின்பு தவசுநீங்க
தகுந்ததொரு யோசனை செய்துநாமும்
சின்மயா னந்தபர னருளைப் பெற்று
சிறப்புறவோம் அசுரர்களின் சிரமம்போக்கி

வசனம் :—சுவாமி ; அகிலலோக சஞ்சார அறிஞரே ; அப்பரமன் அமர்ந்த அஷ்டாங்கயோக தவசாதனையால் அந்தரவாசிகட்கு நன்மையுண்டோ ? அதற்கு யாது உபாயம் அறிவிப்பீர்.

நாரதர் சொல் விருத்தம்.

அங்கஜனு லவர் தவசைக் கலைத்துவிட்டால்
அம்மையார் வதியையுமணம் புரிந்துக்கொள்வார்
சிங்கமுகன் சூரபத்ம னுதியோரை
சீக்கிரமா யழிப்பதற்கு கடம்பநாதர்
தங்கவேலேந்திவந்து வெற்றிகொண்டு
தாக்கியே அசுரர்குல வேரறுத்து
மங்களமாய் தேவர்களைக் காப்பாரய்யா
மன்னவரே யின்பறிவீர் மகிமைதாமே.

வசனம்:—தேவரூபா; முக்கண்மூர்த்தி தவநிலையில் தங்கியிருப்பது நம்மவர்க்கு துன்பமேயாம். ஏனெனில், சிங்கமுகன் தாருகன் சூரபதுமன் முதலிய அசுர கூட்டங்களால் நாமடையும் இன்னல் தீரவேண்டுமாயின் பர்வத ராஜன் புத்திரியாய் பிறந்து வளர்ந்துவரும் பார்வதி தேவியை பரமன் மணம்புரிந்தபின்பல்லவா? சுப்ரமண்யர் உற்பவித்து சூரசம்மாரம் புரிவர். ஆகவே, ஐங்கணைக் கதிபனாகிய அங்கஜன் தவிர ஏனையோர் அவ்விடம் செல்வது அரிது. முன்பு சத்தியிடமும் பக்குவரிஷியிடமும் ஷ மன்மதன் சாபம் பெற்றிருப்பதால் அத்தன் நெற்றிக் கண்ணால் அவன் அனலாகும்பொருட்டே இன்று இரதி கேள்வனை கைலையம்பதியில் காவலின்றி வழிவிடும் பொருட்டு நந்திதேவனுக்கு நாதன் ஆக்ஞாபித்திருக்கின்றார். எனவே அதிசீக்கிரம் அனுப்புவாய்.

இந்திரன் சொல் வசனம்:—திரிகால ஞானத் திரு முனியே இதோ க்ஷணத்தில் சென்று மன்மதனை சிவபெருமான்மீது மலர்க்கணையை எய்ய ஏவுகின்றேன்.

(சபை கலைந்து தேவேந்திரன் போகின்றான்.)

மன்மதன் அரசியல்.

துதி வெண்பா.

கன்னலன்றி வேம்புநகர் காமத்துரோகியர்போல்
பின்னையொரு தெய்வத்தைப்பேசோமே—என்னாளும்
சாற்றுவதுங் காமகலை சாதிப்பதுங்கரணம்
போற்றுவதுங் காமனடிப்போது.

இரதிதேவி சொல் வசனம்:—நளினமலர் நாதா! இந் நில வுலகின்கண் தாங்கள் அற்பமாகிய வனசம், சூதம், அசோகு, முல்லை, நீலம் ஆகிய ஐந்து புஷ்பங்களைக் கணை யாகவும், கரும்பை வில்லாகவும், வண்டை நாணாகவும், தென்றலைத் தேராகவும், பச்சைக்கிளியை வாகனமாகவும், கடலை முரசாகவும், குயிலைக் காளமாகவும், சந்திரனைக் குடையாகவும், மங்கையரைப் படையாகவும், மகரத்தைக் கொடியாகவும் கொண்டு, புரியும் தொண்டு யாது?

மன்மதன் சொல் வசனம்:—அடி பேதாய்! எண் ணறுக்கற்று, எழுத்தற வாசித்தாலும் பெண்புத்தி பேதமை என நன்கு வினவினுய்.

விருத்தம்.

திருமலிகருப்பு வென்றிச்சிலையினு லுலகமெல்லாம்
பொருது செங்கோனடாத்திப் புகழ்விளையேக வீரன்
விருகடற் பிறந்ததிங்கள் வெண்குடைநீழல் வைகும்
மருமலர் மலர்க்கைவாளி மன்னனைச்சிந்தைசெய்வாம்.

என, இவ்வகில புவனமதின்கண் அழகிய ஆடவரும், அணங்கையரும் ஆக்கல், காத்தல், அழித்தல் ஆகிய முத் தொழிற்கும் வித்தாகிய முதல்வனுய் என்னை தங்கள் அறி வாகிய ஆலயத்தில் வைத்து பூசித்து வருவதால் அடையும் பலனை நீ அறியாய் போலும். (இடையில் இந்திரன் வருதல்).

அங்கஜன் ஆசனத்தினின்றெழுந்து தேவேந்திரனை அமரச் செய்து க்ஷேமலாபம் விசாரிக்கும் இலாவணி.

வாரும் வாரும் தேவர்கோனே மலரணை யாசனத்தில்
வந்து அமர்வீரன்பாய்
வந்த விபரமதை எந்தனுக்குச் சொல்லுவீர்
வஞ்சமில்லாமல் முன்பாய்
அந்தரத் தேவர்களும் அம்மை இந்திராணியும்
அஷ்டவசுக்களெல்லாம் தான் சுகமா
அதிகாரப் பாலகரும் நவக்ரகப் பூசுரரும்
அங்குள்ள அனைவரும் தான் சுகமா

இந்திரன் சொல் விருத்தம்.

மன்மதா நீகேட்ட பேர்களோடு
மற்றுமுள்ள அனைவோரும் சுகமாய்க்ஷேமம்
இன்றொரு உதவிநீ செய்யவேண்டும்
ஈஸ்வரனர் தவத்தை மலர்க்கணையினலே
நன்னயமாய் கலைத்துவிட்டால் தேவர்க்கெல்லாம்
நலமிக்க புத்துயிர்நீ அளித்ததர்கும்
உன்னருளால் பயமின்றி வாழ்ந்திருப்போம்
உதாரத்வ சித்தஜனே துணைசெய்வாயே.

மன்மதன் சொல் விருத்தம்.

இத்தனைநாளாய்யானும் இரதியவள் மனம்மகிழ
சித்தஜசொரூபனென்று சிறப்புடன் வாழ்ந்துவந்தேன்
உத்தமமல்லநீரின் றுரைத்திட்டவாக்குதானும்
பித்தன் முன்னெதிர்த்து நானும்பிழைத் துயிர்பெரு
[குவேனே

இந்திரனுக்கும் மன்மதனுக்கும் தர்க்கம்.

இலாவணி.

இந்—கன்னலைத்தநுவெனக் கர்த்தினிலேந்திவாழும்
காமராஜனேஜல்தி வாரும் வாரும்
கல்லாலின்கீழே அரன் தவமதைச் செய்வதைநீர்
கண்டுகலைத்து வந்து சேரும் சேரும்

மன்—என்ன காரணத்தினால்என்னை யித்தொழில்செய்ய
ஏவியேவிடுகுறீர் நீரும் நீரும்
எங்கும்நிறைந்தப் பரசங்கரன் நெற்றிக்கண்ணால்
எரிந்துநான் போகவேணும் பாரும் பாரும்

இந்—சிங்கமுகன் தாருகன் சூரபத்மனோ டசுரர்
சீறி வந்து தேவர்களைத் தேடிதேடி (தாலே)
சிந்தையது நொந்தழவே தொந்தரைகள் செய்வ
சீக்கிரமாய்ப் போய் வருவீர் ஓடி ஓடி

மன்—அசுரர் துடுக்கடக்க அரன் செய்யும் தவமதை
அழிப்பது நன்றல்லவே அய்யா அய்யா
அனைவோரும்கூடியே நாம் முனைவுடன் போர்புரிந்து
அடக்கி விடலாம் வாரும் மெய்யா மெய்யா

இந்—சாகாதவரங்கள் பெற்ற சண்டாளர்கள் தம்மைவெல்ல
சாயாது காண் நம்மவராலின்று இன்று
சாதுக்கள் உயிரை மாய்க்க வாதுசெய்யும் வம்பரவர்
சண்டையிலே வெற்றி கொள்வார் நின்று நின்று

மன்—அப்படி யிருப்பதாலே எப்படித்தான் யீசன் மட்டும்
அவரிடம் வெற்றி பெறவேணும் வேணும்
ஆக்கினை யளிப்பதற்கு யோக்கியதையற்ற வரம்
ஆதியிலே கொடுத்ததால் காணும் காணும்

இங்—சங்கரனுர் யுத்தமதை செய்யவேண்டுமென்று எண்ணி
சஞ்சலமடைவதை நீ நீக்கு நீக்கு
சமர்த்துள்ள புத்திரனை நமக்கவர் கொடுப்பதாய்
சாற்றியுள்ளார் முன்னமொரு வாக்கு வாக்கு

மன்—உத்தமரே அப்பொழுதே புத்திரனைப் பெற்றளிக்க
உங்களுக்கேன் காலமதைக் காட்டி காட்டி (ரை)
ஊக்கமதைத்தான் விடுத்து காக்க வைத்தாரின்றவ
உண்மையதைச் சொல்லவேண்டும் நீட்டி நீட்டி

இங்—பார்வதியாள் சாபத்தாலே நேர்படா திருந்ததாலே
பாலகனை யின்றெடுக்கக் காலம் காலம்
பக்குவமாய்க் கூடவில்லை இக்கணமே நல்லவேளை
பஞ்ச பாணகணைக் கனுகூலம்கூலம் (சொல்)

மன்—அம்பிகை யில்லாதபோதென் ஜம்பமது சாயுமோ
அறியாமல் செய்யவேண்டாம் கோபம் கோபம்
அக்காலந்தனில் முனியும் பக்குவமா யெந்தனுக்கு
அனலா யெரியெனவே சாபம் சாபம்

இங்—மலையத்துவஜனுக்கு மகளாக ஈஸ்வரியும்
மாநிலத்தில் தான் பிறந்துக் கண்டு கண்டு
மங்களமதாய் வளர்ந்து கொங்கையது பூரித்திட
மனமதில் மோகமதைக் கொண்டு கொண்டு

மன்—கண்ணையவர் திறந்ததும் கன்னியரைக் கண்டனைவார்
கவலையேன் இனிமேலே தள்ளும் தள்ளும்
கர்த்தனது சித்தப்படி நத்தி நிற்க அம்பிகையால்
கந்தனென்ற பிள்ளையதைக் கொள்ளும் கொள்ளும்

இங்—தவத்தைக் கலைத்துவிட்டால் தானே யவர்மோகம்
தாக்கும் பஞ்சபாணமதை வீசி வீசி . (மீளும்)

தயங்கியே தவித்து நீ மயங்கினல் சாபம் பெற
தந்திடுவேன் நல்லதல்ல யோசி (சாபம்)

மன்—போதும் போதும் அப்பீர முன்னே சத்தியாலே
போயவர் பதமதிலென் ஆவி ஆவி [பெற்ற
போகும்படி நானளித்து யூகமாக இராஜகோபால்
போற்றும் கவி சாற்றிடுவேன் கூவி கூவி

இரதி சொல் விருத்தம்

அன்புள்ள ப்ராணநாதா அந்தரத் தநிபன் வந்து
தன்மையா யுரைத்து சென்ற தந்திரவார்த்தை யென்ன
என் மனமதிற் கலக்கம் ஏதேதோ உண்டதாகி
துன்பமாய் தோற்றுதையோ துடிக்குதென் ஆவிதானே

மன்மதன் சொல் விருத்தம்

சந்திர சடாதரன் சனகாதியர்க்கு யோக
மந்திரமதனைக் காட்டி மவுனத்தி லிருப்பதாலே
இந்திரன் என்னைச்சென்று இமைப்போதி லத்தவசை
தந்திரமா யழிப்பாயென்று தானுரைத்தான் இரதியணங்கே.

இரதி சொல் தரு

நிச்சயமாய் பட்டதுடன் என்ற மெட்டு—ஆதி

ஆகா பிராணநாதா அழகு பொருந்தும் நீதா
அடியாள் மனம் சோருதே
ஓகோ எந்தனுயிர் உடலில் தரிக்கவில்லை
உத்தம என்மனுளா உறுதியாய்க் கேளென்சொல்லை (ஆ)

அவ்வார்த்தை கேட்டு நீர் அனலாகப் போகாதிர்
அழகலங்கார துரையே
செவ்விழி திறந்தாலீசன் செந்தணலாகுவீர்
செல்லாதீ ரெனைவிட்டு செப்பும் முறைகேட்டு (ஆ)

மன்மதன் சொல் லாவணி

அடி அன்புமிக்க ரதியே இன்பப் பயவதியே
அழகிய ரூபவதியே
அற்புத மதியே
விற்பன வதியே விடை தருவாய்
அரனை நான் வெல்லத்ததியே

தித்திக்கும் செங்கரும்பே திவ்யமலரரும்பே
திகழுமுன் சித்த மிரும்பே
செய்யாதே குரும்பே
அரனேர் துரும்பே எனமதித்து
கொண்டு என் சொல்லை விரும்பே

இரதி சொல் விருத்தம்

ஆதிசிவன் தவசழிக்க யாராலாகும்
அவர் சிரித்தா லுலகமெல்லாம் தகனமாகும்
பாதிமதி சடையணிந்தோன் பாதந்தன்னை
பக்தராகக னென்றே பணியவேண்டும்
ஓதிமதி துதித்திடவே உமையோர் பாகம்
ஒளிமிகுந்த ஜோதிதரும் சொரூபமாகும்
நீதியோ அவர் தபத்தை நீரழிக்க
நிதானமின்றி சென்று நீராவதய்யா

மன்மதன் சொல் விருத்தம்

அன்புடைய பெண்ணணங்கே இரதியேகேளாய்
ஆலோசித் துணராமல் நீட்டமாக
உன் தகப்பன் பெருமையெல்லாம் கூறிவிட்டாய்
உலகளந்த மாயனுமென் தந்தையாச்சே
துன்மார்க்க னும்பத்மா சூரனுக்கு
துய்யபரன் வரமளித் தைவேலிதன்னில்

சென்றொளித்த போது அன்று கார்த்தவரார்
செப்பிடுவாய் மாமயிலே ஜெயங்கொள்வேனே

மன்மதனுக்கும் இரதிக்கும் தர்க்கம்

துரவந்தி மெட்டு

மன்—ஈசனிட தவமதனை இமைப்போதில் சென்று—நான்
இக்ஷணம் அழித்துவாரேன் யோசியாதே நின்று

இர—மோசமதாய் தான் முடியும் மோகமத நாதா—நீர்
மோடியது செய்திட்டாலே சாகாவிநோதா

மன்—ஆபத்து நேருமென்று அஞ்சலாமோரதியே—நான்
அடைந்திருக்கும் கன்னல்வில்லின் ஆண்மையற்று நிதி

இர—சிரித்துப்புர மெரித்த சிற்பரனைப்பாரும்—நீர் (யே)
சிறியமலர்க் கணையதனல் செய்வதென்ன கூறும்

மன்—வனசம் சூதம் அசோகு வஞ்சிமுல்லை நீலம்—நான்
வளைத்த வில்லில் தொடுத்தபோது மிஞ்சிடாது காலம்

இர—ஆலமதை கண்டமதில் கொண்ட அய்யன்மீது—நீர்
அணங்கையர் படையுடனே இணங்குவதும் நீது

மன்—ஆழிமுர சொலிகள் ஆர்பரிக்க சாற்றி—நான்
ஆசையதை மூட்டிடுவேன் ஓசையுறத் தூற்றி

இர—மதியதைக் குடைவிரித்து மன்மதரே சூடி—நீர்
மங்களமாய் இங்கிருப்பீர் சங்கையறக் கூடி

மன்—தென்றலொடு பச்சைக்கிளி தேவியரே உண்டு—நான்
தெய்வலோக மெங்கும் சுற்றி உய்திடவே கண்டு

இர—பஞ்சமலர் ரஞ்சிதனே பாசமதைக் காட்டும்—நீர்
பார்த்திபனை யெதிர்க்கும் மனபூர்த்தியதை ஓட்டும்

மன்—பாசவலை விசுகின்ற நேசனடிமானே—நான்
பாரதில் பயந்தொளிய போறதில்லை தானே

இர—பித்தனென் தகப்பனலே பிராணமதை விடுவீர்—நீர்
பிரியமது கொண்ட எண்ணம் சரியல்லகாண் கெடுவீர்

மன்—அந்தரத்தோன் வாக்கியத்தை அரிவையரேவிட்டுநான்
அடைவதென்ன லாப சாபம்அன்னமே ஓர்சொட்டு

இர—உம்முடைய தலைவிதிபோல் உத்தமரே ஆகும்—நீர்
உறுதி செய்துக் கொண்டபடி ஊக்கமுடன் ஏகும்

மன்—கலங்கிடாதே கற்பகமே கண்மணி யென்சேடி--நான்
கண்டுவாரேன் இராஜகோபால் கவியிதனைப் பாடி

விருத்தம்

திருவளரும் மன்மதன் இரதிவார்த்தைக் கேளாமல்
திரிபுராந்தகனை வெல்ல
திரமாய்ச் செல்வோமென சாரதி வசந்தனை
திடசித்தமாய் ரதத்தை
பெருமை சேர் முத்துநவ ரத்தினக் கற்களால்
பெட்பாகவே யமையென
பேசுமுன் சொர்னமய மானதோர் தென்றல் ரதம்
பேதமில்லால் பூட்டி
அருமைசேர் பஞ்சவர் ணக்கிளி வாகனம்
அழகாகவே தொகுத்து
அங்கஜன் முன்கொண்டு வந்து நின்றபோ
தலங்கிர் தங் கண்டுமாரன்
தருணமே ஆடையா பரணமெல்லாஞ் சூடி
தன்கையில் கருப்புவில்லை
தாங்கியே மலர்க்கணை யொடு செல்லும் போதிலே
தான் கண்டான் அவசகுனமே

(அங்கஜன், அவசகுணங் கண்டு அறையும்)

இலாவணி

அரன் தவசழித்திட அடுத்து நான் போகும்போது
ஆகாச் சகுனம் காணுதே
அய்யய்யோ என்ன செய்வேன் மெய்யாக தேகமது
அனலாகும் போலே தோணுதே
ஏதுவிளையுமோ தான் மாதுரதி சொல்தட்டி
ஏனோ நானிங்கு வந்தேன்
ஏணியும் சாணுனும் எதிரில் வரவே கண்டு
ஏங்கி மனது நொந்தேன்
பாம்பு குறுக்காகுது பனைமரத்திலோர் ஆந்தை
பதறுதே மிகச்சீறி
பயங்காமாக கோட்டான் கூவுதெதிரிலதோ
பார்ப்பான் வாரானேமீறி
காடை பறக்குதுடன் கம்மாளனெதிர்வாரான்
கண்டு என் செய்வேனையோ
கட்டுச் சுருளோலைகள் கணக்கனெடுத்துக்கொண்டு
கலங்கியே வாரானையோ (அர)

வசந்தன் சொல் விருத்தம்

அய்யரே மன்மதரே தேவலோகம்
அடைந்து விட்டோம் அருகிலிதோகைலை கண்
மெய்யனே நீர் கலங்கி இருப்பதென்ன (டோம்)
மேன்மையுடனே புகல்வீர் இரதி மணாளா
பய்யவே எழுந்திருந்து பரிவதாக
பசிதணிந்து தாங்களிங்கு வந்த செய்தி
துய்யவே வெற்றிபெற முடித்துக்கொண்டு
துரிதமுடன் வருவீரெனத் துதித்திட்டேனே

விருத்தம்

இவ்விதமாய் வசந்தன் இயம்பிய வாக்கியத்தை
ஒவ்வவே கேட்டமாரன் ஓடியே கைலைமீதில்
செவ்வையாய் நந்திதேவர் செய்திடக் காவல் கண்டு
எவ்விதம் போவதென்று ஏக்கமுற் றறைகுவானே

நந்திதேவனுக்கும் மன்மதனுக்கும் தர்க்கம்.

ஆநந்தக் களிப்பு மெட்டு.

மன்--தேவதேவாதிபா நந்தி--நான்
தேவர்குறை நீக்கவந்தேனே முந்தி
காவலாய் நீ நிற்கப்பிந்தி—போகக்
கலங்கித் தவித்து அலையுதே புந்தி (தே)

நந்—ஐயையோ யீதென்ன மோசம்—நீர்
அனலா யெரிந்திடக் கொண்ட உத்தேசம்
எய்யுமா உன்கணை பாசம்—உல
கெங்கும் நிறைந்த சுயம்பிரகாசம் (ஐ)

மன்—இந்திரன் அழைத்தென்னைக் கூவி—உடன்
இப்படி செய்திட சொன்னானே பாவி
எந்தவிதம் நானும் மேவி—வில்லை
எடுத்து வளைப்பதென் றலையுதென்னாவி (தே)

நந்—சுயநலங் கொண்டவர்சொன்னால்—அந்த
சூக்ஷமறியாமல் வரலாமோ முன்னால்
பயமென்பதில்லாமல் பின்னால்—கஷ்டப்
படுவாய் சுகம் பெறக்கூடுமோ உன்னால் (ஐ)

மன்—மறுத்து நான் கூறினேன் கோபம்—கொண்டு
மனம்போலே தூஷித்து இடுவதாய் சாபம்
வெறுத்தவர் பேசின தாபம்—பொறாமல்
வெந்துநீராகிட வந்ததே லாபம் (தே)

நந்—ஈசன் எழுதின விதியோ—பாவம்
இப்போதே மாண்டிட போவதென் சதியோ
மாசற்ற இரதியவள் கெதியோ—திரு
மாங்கல்ய மிழந்திடச் செய்பவன் கதியோ (ஐ)

மன்—அந்தகாளமைப்பது போலே—இப்போது
ஆவது ஆகட்டும் வழிவிடும் மேலே
சிந்தை குளிர்ந்து யிக்காலே—சென்று
சீக்கிரம் பாணத்தை எய்குவேன் மேலே (தே)

நந்—உன்னைவிடும்படி யீசன்—எனக்கு
உரைசெய்து தவமதைக் கொண்டாருல்லாசன்
நன்னயமாகிய நேசன்—தமிழ்
நவிலும் இராஜகோபால் நாயகவாசன் (ஐ)

மன்மதன் உட்சென்று ஈசன் தவநிலையைக்கண்டு மயங்கித் துதித்தல்.

முத்திநெறி யறியாத என்ற மெட்டு.

ஆறுமுகன் தனையருளும் அருட்கடலே ஆண்டவனே
நீறுபுனைநின்மலனே நின்மகிமை யாரறிவார்
வேறுதுணை உனையல்லால் வினைதீர்க்க காணேனே
பேருபெரும் பெம்மானே பிழைபொறுப்பாய் கணை
[தொடுப்பேன்

வசனம் :—அம்பலத்தரசே ; அமரர்க்கதிபன் ஆக்கினைக்கஞ்சி ஐங்கணையை தங்கள் அரிய மேனியில் வீசினேன் ஆட்கொள் ஜெகதீசா—

விருத்தம்.

விட்டவெம் பகழியைந்தும் வியத்தகு விமலன்மீது
பட்டலும் சிறிதேவேளைப் பார்த்தனன் பார்த்தலோடு

கட்டழற் பொதிந்தநெற்றிக் கண்ணினுற் கடிதிற்காம
சுட்டதும் கைலேமுற்றும் சூழ்புகை பரவிற்றன்றே.

அங்கஜன் அனலானதை அப்சர ஸ்திரீகளால் அறிந்த

இரதி புலம்பும் ஒப்பாரி.

தோ—தாயோதிதேவி
மாயன் மகனும் மடிந்தானே உந்தன்
தந்தை நெற்றிக் கண்ணாலேபற்றியேநீராய்எரிந்தானே

இர—ஐயோசாதிகளா
வையமெல்லாம்புகழும் நாதன்—என்
அங்கம்பதறயிப்போ பொங்கி யெரிந்திட்டானேநீதன்

தோ—ஆச்சியே என்ன சொல்வோம்
போச்சுதே ஆவியது ஓடி—எங்கள்
அன்னக் குயிலழகி கன்னியே மேலுலகம் தேடி

இர—சொப்பனங்கண்டேனடி
இப்போது அவர்வரநானும்—அந்த
சோக்கந்தெளிவதெப்போ பாக்கியவானைவிட்டேதானும்

தோ—நீராகப்போனமதன்
நேரில் இனி வருவதேது—அந்த
நீதமற்ற இந்திரன் சாதனையாலே வந்ததீது (இந்த)

இர—மருமகனை தகிக்க
மனமது கொண்டாரே என் தந்தை—
மாநிலமுள்ளவரைபோகாது அவர் பெற்ற நிந்தை

தோ—பக்குவமுனியோடு
மிக்க வேசத்தியவள் சாபம் இது
பாரில் எரிந்தழிய தந்தை அறியாமல் கோபம்

இரா—ஆனுல் என் மன்னவரை
அப்பன் எழுப்பிவிடக்கேட்டு—இனி
ஆநந்தம்நானடையக் கூடுமென்றுலே மொழிகுட்டு.

வேறு ஒப்பாரி.

திருமாலின் புத்திரனே—என்—இராஜாவே ரத்தினமே
அந்த—திருமகளின் சித்திரமே
என்னை திரும்பிவந்து பாராமல் நீதியாகப் போகலாமா

பாவிக்கு நான் பிறந்து என் இராஜாவே ரத்தினமே
உன்னைப் பறிகொடுத்து தான் துறந்து
அந்தப் பாவியுடன் நானும் பெரும்பாவி நின்று வாழலாமா

தேவராழிந்தாலென்ன என் இராஜாவே ரத்தினமே
அந்த திருமூர்த்திகள் கெட்டாலென்ன
அந்த தேவருக்காய் உன்னுடலை தியாய் கொடுக்கலாமா

மீனக்கொடியெடுத்து என் இராஜாவே ரத்தினமே
நீ மீசைமுறுக்கிவந்தாய்
அந்தமீனக்கொடி தன்னுடனே மீண்டும்வாக் காணலையே

பச்சைக்கிளியிலேறி என் இராஜாவே ரத்தினமே
நீ பட்டணத்தை சுற்றிவந்தால் [டுமே
அந்த பச்சைக்கிளி தான்மறைந்துன் பஞ்சவர்ணம்தோற்றி

தென்றல் ரதத்திலேறி என் இராஜாவே ரத்தினமே
நீ தெருவழியே வந்தையானுல் [வேன்
அந்த தென்றல் சுகம்மங்கிவிட உன்தேகசுகம்கண்டிடு

மங்கையர் படையைக்கூட்டி என் இராஜாவே ரத்தினமே
நீ மண்டலத்தை சுற்றிவந்தால் [பேன்
அந்த மங்கையைப்பாரா துன்மத ஒளியைப் பார்த்திருப்

திங்கட்குடையணிந்து என்இராஜாவே ரத்தினமே
நீ திரிபுரமும் சுற்றிவந்தால் [றிடுமே
அந்த திங்களும் மங்கிவிடும் உன்திருவொளிதான் தோற்
கன்னற்கரம்பிடித்து என் இராஜாவே ரத்தினமே
நீ காசினியை சுற்றிவந்தால் [கும்
அந்த கன்னல்ரசங்கசக்கும் உன்கனியிதழ் ரசஞ்சுவைக்
அஞ்சுமலர்க்கணையை என் இராஜாவே ரத்தினமே
நீ அரிவையர் மேல்விட்டையானல்
அந்த அஞ்சுமலர்நஞ்சாகும் உன்அழகுமலர்கொஞ்சிடுமே

பரமனிடஞ்சென்று இரதிதேவி பரதவித்தல்.

விருத்தம்.

உலகெலாம் தான்புகழு மென்தகப்பா
உம்பர்கோ னிந்திரனின் வார்த்தைகேட்டு
கலவரமாய் என்னிடத்தில் வந்துமாரன்
கணரினர் யான்தடுத்துங் கவனியாமல்
தலமிதுவாம் கைலையதில் வந்துமேவி
தாக்கினிதால் பஞ்சமலர்க் கணையினுலே
சலனமுற நீரெரித்தீர் நெற்றிக்கண்ணுல்
சஞ்சலம்நான் கொண்டழுக சரியிதாமோ

ஈஸ்வரன் சொல் விருத்தம்.

என்மகளே இரதிதேவி கலங்கவேண்டாம்
என்றும்நீ சுமங்கலியாய் வாழ்வாயம்மா
மன்மதனுன் கண்ணுக்கே ரூபியாவான்
மற்றோர்க்கு அரூபியாய் மாறிப்போவான்
நன்மனதாய் பிரணவத்தை உச்சரித்து
நலமாயிச் சாம்பலின்மேல் ஜலந்தெளித்து
வன்மையாய் பிரம்பினுல் தட்டியிப்போ
வாவழைத்தேன் களிப்புடனே வாழ்குவீரே.

மன்மத தகன மறுப்பு.

துதி விருத்தம்.

அறிவெனும் ஆதாரப் பொருளே போற்றி
அருந்தமிழ்க் காதியாம் அரியே போற்றி
நெறியாக யெனையின்றோர் பாதம்போற்றி
நேர்மைபெறு குருநாதன் அடியைப் போற்றி
உரியதாயிம் மதன்சரிதை வாழ்கப் போற்றி
உரைத்துவைத்த நாதாக்கள் அருளைப் போற்றி
எரியாத கஷியிதை ஏற்றிப் போற்றி [ற்றி
எழிலாயென் கவிமழையைப் பொழிவேன் போ

இலாவணி.

1. அரிஓம்நமாவென்றுமுதல் ஆதியிலெழுந்த
அக்ஷரந்தனைப்போற்றி
அகரமென்றயெழுத்தை உச்சியிலேற்றி
துரியமதனில் ஸ்ரீயும்கிலியுமதாய்வாய்ந்த
* துய்ச்சிதந்தனை சாற்றி
† துரோபயம் அணுகிடாதினிதூற்றி
விரிவாகச்சொல்லும் வாசிதரையிலோடிய
விரிகலைகளைமாற்றி
விளங்கும் சுழிமுனையினிலதையாற்றி
(உத்) பரியனுனல்ரேசக மதியொடுக்கி
பாயாமல்கயிரெட்டு கொண்டுயிறுக்கி
அறிவினுல்வங்கென்ற சொல்லைமுடுக்கி
அமைத்துமெள்ள ஊதவேசொல்லக்கடுகி
குறியாகப் பூரககும்பகமோடெழும்
குண்டெழுத்தினைப் போற்றி. (அக)

---

* துய்ச்சிதம்—அனுபவம். † துரோபவம்—மயக்கம்.

(2) ஆதாரமான ஆறுதாரமதினில் மூல்
ஆதாரமதைக் கண்டு
அங்குள்ள திரிகோண மதைக்கொண்டு
சாதாரணமாய் மூன்று எழுத்தை ஜடலத்துள்ளே
சரியாயறிந்து விண்டு
சதாகாலம் செய்குவேன் நான் தொண்டு
(உத்) வாதாடுங் கவிகளதனைத் தூற்றி
வழங்கும் எங்கள் மதத்தையே போற்றி
நாதாக்களடியை யென்சிரமேற்றி
நாசிநுனிதன்னை யறிந்து சாற்றி
பாதகமெனும் பசுபாசமதனைத்தூற்றி
பரம்பொருளதைப் போற்றி (அக)

(3) நேசித்துப் பூரித்து எங்கும் நிறைந்த சுய
நேமகமதைத் தேடி
நேரே நாசிப்புருவ மய்யத்தை நாடி
வாசித்துப் பதினெண்பேர் சித்தரடியையெந்தன்
வழங்கும் முடியில் சூடி
வசியநமவென்றுமே கவிபாடி
(உத்) காசினியில் துற்குணமதை தடுத்து
காலாகாலம் கடந்தவர்தனை துதித்து
ஆசிரியரடியிலென் சிரங்குவித்து
ஆங்காரமுட்கட்டியே ஆரம்பித்து
வீசியே வழங்கும் நல்மகர வக்ஷரமதை
விரும்பியே பணிந்தேற்றி (அக)

(4) குண்டலி வட்டமதி லமர்ந்த பீதாக்ஷர
குறிப்பை யறிந்து யானே
குவித்துக்கரம்போற்றி செய்வித்தேனே
அண்டர்கள் புகழ் சென்னை மண்டலமதிலிதை

அறிவாலறிந்துத் தானே
அருமறைப் படியதில் குதித்தேனே
(உத்) எண்டிசை புகழ்வண்ணை யம்பதிவாசன்
எழில்பெறும் இயற்றமிழ் புகல்தாசன்
தண்டதிபர் மகிழ் பெற்ற உல்லாசன்
தாசன் இராஜகோபால் நல் பிரகாசன்
விண்டலமுணர்ந்திட விளங்கும் பஞ்சாக்ஷர
விருதை கரத்தால் போற்றி (அக)

இலாவணி

(1) தந்தேன் வந்தனம் யாவர்க்கும்
தாரணியாளும் மன்னர்க்கும்
அந்தமா யமர்ந்திருக்கும்
அரிய சபை யோருக்கும் (த)

(2) வாசியோக சாதனே
குரு—வைதிலிங்க நாதனே
தேசிகன் திரு முத்தமிழ்ச்
சுவை—தேனொழுகும் போதனே (த)

(3) தோகை மயிலாடுது
குயில்—தோத்திரங்கள் பாடுது
நாகை கோவிந்தசாமி கவியை
நானிலங் கொண்டாடுது (த)

(4) கிஞ்சுக சுக வாக்கியம்
அருள்—கிருஷ்ணசாமி போக்கியம்
அஞ்சுகம்போல் சிங்காரவேல்
அறைவதே சிலாக்கியம் (த)

வினு விருத்தம்.

(1) சுந்திரஞ்சேர் சபையதனில் வந்தமர்ந்த
சுகிர்த குணமுள்ளகவி யோரேநீவீர்
கந்தப்பன் அரன்கண்ணால் எரிந்ததாக
கதையெடுத்து ஓதினதும் நேர்த்திநேர்த்தி
விநோதயதாய் அதனில்பல சந்தேகங்கள்
விளம்புகிறேன் பின்பதனை விபரமாக
முந்தியுங்கள் க்ஷேமசுகம் தனையுரைத்து
முனிவின்றியெனக்குவிடை தருவீர்மாதோ

இலாவணி.

வந்தனமையா உம்மை சந்திக்க வெகுநாளாய்
சிந்தைகொண்டிருந்தேன் சபைநேரே
வாரும் உட்காரும் சந்தன தாம்பூலம்
வாங்கியணிந்துக்கொள்ளும் கவியோரே
சந்ததம் மும்மாரிகள் பொழிந்துங்கள் தேசந்தன்னில்
* சசியமுப்போகமுடன் பெரியோரே
சகலாலய பூஜைகள் அறுகாலம் தவராமல்
சரியாய் நடைபெறுதா புகல்வீரே
(உத்) அந்தமுடனே உங்கள் பள்ளிக்கூடம் சுகமா
அதிலுள்ள பாலர்முதல் அனேவோரும் க்ஷேமமா
சுந்திரமாயுரையும் என்னேரே (வா)

(2) பாரின்னம் தங்களிட ஆசிரியர் முதலாக
பந்துக்கள் நண்பர்களும் கனவானே
பக்ஷமாயுனக்கிந்த கக்ஷியை ஓதிவைத்த
பாவலர் நாவலரும் சுகந்தானே

---

* சசியம்—பயிர்.

ஆரியர்காவலர்கள் தளகர்த்தர் புரோகிதர்
அமைச்சரவர்களுமே தனவானே
அன்புள்ள தொழிலாளர் உழவர்கள் குடிமக்கள்
அணிகள் ரதகஜங்கள் சீமானே
(உத்) * துரிதமுட னஸ்வபந்திகள் சுகமா
துரைத்தன உத்யோகஸ்தர் அனைவோரும்க்ஷேமமா
கூறி வருவீரய்யா என் நேரே (வா)

(3) சித்திரமாக உன்னைப் பெற்றதாய் தந்தையுடன்
சீராட்டிவளர்த்தவர் தான்சுகமா
சிறப்புள்ள பாட்டன்பாட்டி மாமனும் அத்தையவர்
சிறியதாய் தந்தையரும் சொல்சுகமா
உத்தமமாக ஒன்றாய் உதித்த சகோதரர்கள்
உரியபெண் பிள்ளைகளும் நற்சுகமா
உன்னிதமான அண்ணி மைத்துனரானோர்களும்
உற்றாருறவினரும் மிகசுகமா
(உத்) நன்னயமாக இந்த நாட்டிலே கற்றவர்கள்
நற்குண சாம்பரதாய நாதாக்கள் மற்றவர்கள்
சொன்னயமாய்சுகமா என்னேரே (வா)

(4) சிங்காரமாக உம்மை கேட்டநல்யோகக்ஷேம
சீரதை அவைதனில் நீரெடுத்து
சித்திரமாயுரைத்தால் வித்தகரென்றுமக்கு
சிலதுவினைகொடுப்பேன் பின்தொடுத்து
திங்கள் மும்மாரி பெய்யும் சென்னை நகரில்வளர்
தீரனியற்றமிழை முன்தடுத்து [கோல்
திருட்டுக்கவிகள் சொன்னால் விரட்டுவேன் ஞானக்
தீண்டியே கரமதினலெடுத்து

* துரிதம்—எருது.

(உத்) எங்கும்புகழும் சிங்கடாலதை நாட்டுந்தீரன் [பீரன்
எழிலுறும் இராஜகோபால் என்னும்நற் கெம்
மங்களமிதைக்கேட்டு என்னேரே (வா)

காமதகனக் கக்ஷி.

விடை விருத்தம்.

கதிரவனைக் கார்மேகம் மூடினாற்போல்
கவிபாடி மதனெரியா கக்ஷிசெய்ய
சதிரதனில் வந்தவரே விபரமாக
சாற்றுவேன் க்ஷேமசுக லாபமெல்லாம்
பதிபுகழ ஓதுமெங்கள் கலாசாலை
பாலர்முத லாசான்தாய் தந்தைசுற்றம்
நிதியெனவே ஓங்கிதிரு நேசரோடு
நீணிலத்தில் வாழ்கின்றார் நீடூழிமாதோ.

இலாவணி.

(1) சந்தோஷமய்யா இப்போ வந்தேனுந்தனெதிரில்
சந்தண தாம்பூல புஷ்பம் அதைத்தாரும்
சர்ச்சனர்கள்புகழ உச்சிதமாகப்பின்னே
சாற்றிவருகும் க்ஷேமம் இதைப்பாரும்
அந்தரமாரியது சுந்தரமாய்ப் பொழிந்து
அவனிமுழுதும் பயிர் மிக க்ஷேமம்
ஆலய பூஜைகளும் காலந்தவராமலே
அனுதினம் நடக்குது அறுகாலம்
(உத்) பைந்தமிழோதுமெங்கள் பள்ளிக்கூடத்தின் கீர்த்தி
பகலவன்போலொளியாய் ஜொலிப்பதே நேர்த்தி
சிந்தைமகிழ்ந்து புஷ்பம் அதைத்தாரும் (சர்)

(2) மங்களமாக யின்னம் யெங்கள் பந்துக்களுடன்
மாதாபிதாக்களுமே சுகக்ஷேமம்
மைத்துனர் சகோதரர் அன்னியவர் குழந்தை
மாமன்மனைவி அத்தை மிகக்ஷேமம்
சிங்கம்போல் கீர்த்தியுடன் தங்கத்தையொத்துவாழும்
சிநேகிதானைவோரும் தான்க்ஷேமம்
சிரியர்தளகர்த்தர் காரியர் கணக்கர்கள்
சிறந்திடக்கால் நடைகளது க்ஷேமம்
(உத்) அங்கம் நடுங்கவெற்றி அணிபெரும் படைகள்
அதிரதர் கஜதுஜ அன்பர்கள் குடிகள்
எங்கும் மகிழ சுகம் எனக்கூறும் (சர்)

(3) கண்டுக்கொள்ளுங்காணிந்த மண்டலந்தனில்காமன்
கக்ஷிபதைப்படிப்போரவர் க்ஷேமம்
கற்றவர் மற்றவர் உற்றவர் நற்றமிழ்
கல்விக்கதிபரெல்லாம் ஜெயக்ஷேமம்
பண்டுநாள் கொண்டுயிதை விண்டு எழுதிவைத்த
பாவலர் நாவலரும் சுகக்ஷேமம்
பக்தர்கள் முக்தர்கள் சித்தர்கள் நூலுமெங்கள்
பதினெண் புராணங்களும் மிகக்ஷேமம்
(உத்) மண்டலமெங்கும் ஜீவராசிகள்வாழ
மறையுடன் ஆகமசாஸ்திரம் சூழ
தொண்டுசெய்து புஷ்பம் அதைத்தாரும் (சர்)

(4) ஆதிமுதலிலெனக் கோதியே வைத்த குரு
அனைவோரும் வெற்றியுடன் சுகக்ஷேமம்
அம்பிகை பாதந்தன்னை நம்பி தினந்துதித்து
அருள்மழை பொழிபவர் மிகக்ஷேமம்
வாதிகள் மகிழ்ந்திட நீதியதாயிபற்றும்
வல்லவன் நூல்களெலாம் சுகக்ஷேமம்

வய்யம் துதிக்கஜெப அய்யனும் இராஜகோபால்
வளமாயுரைத்த கக்ஷிமிகக்ஷேமம்
(உத்) பாதிமதியணிந்த பரமனின் காக்ஷி
பகருதே புராணசாரம் எரிந்ததாய் சாக்ஷி
நீதியதாகப் புட்பம் அதைத்தாரும் (சா)

மன்மத தகன மறுப்பு

விநாயகர் வினுவிருத்தம்.

ஆதியிலே விநாயகரென் றுரைத்தவாறும்
அதுசென்று யானைமுகம் வந்தவாறும்
நீதியதாய் ஒத்தைக் கொம்பொடிந்தவாறும்
நீடுலகில் அவர்பிறந்த நாளின்பேரும்
மேதினியில் மஞ்சளதி லுதித்தவாறும்
மேன்மைபெற வாண்டுவந்த நகரும் ஊரும்
ஓதியதன் பின்மதனும் எரிந்தகக்ஷி
ஒழுங்கு பெறநீரெடுப்பீர் சபையில்மாதோ

இலாவணி

(1) அண்டமெல்லாம் அதிரப்பாடிடும்புலவா
ஐங்கரனை முதலில் துதித்தீர்பலவா
கண்டு உம்மைக் கேள்விகேட்பே நானல்லவா
காட்டாதின்றோடிப்போகாதே மறைவா
ஜண்டாவை முன்காட்ட வந்தீரே விரிவா
சபையில் சாயம் வெளுக்கப்போகுதே தெளிவா
(உத்) விண்டுசபைநேரே விரிவாய் அவர்பேரே
பண்பாய்வரலாரே பார்த்துமுன்கூறே
கொண்டாயெந்தயுகத்தில் ஜெனித்தார்பொதுவா (ஐ)

வசனம்:—கேளும் அறிஞரே; இவ்வுலகத்தின்கண் சகல மதஸ்தர்களுக்கும் பொதுவாகிய அகண்டா

கார பிர்மம் ஒன்றிருக்க அதையும் நீக்கி பிர்மா விஷ்ணு ருத்திரன் மயேஸ்வரன் சதாசிவனென ஆகமத்தில் சொல்லியபடி ஐந்து பஞ்ச கர்த்தாக்களிருக்க அவர்களையும் நீக்கி தாங்கள் முதலில் விநாயகரைத் துதிசெய்த காரணம் யாது? அவர் எந்த யுகத்தில் அவதரித்தவர்? எத்தனை திருநாமங்கள்? அவைகள் எப்படி அமைந்தது? ஓதிவாரும் புலவீர்.

பாட்டு.

(2) சுந்திரமாய் சொல்லி வருவீர் சுருக்க
சுத்த மெஞ்ஞான நூலில் பெருக்க
எந்தப்புவி கடவுள் தனக்கும் சிறக்க
எழிலுடைய முகமது தானிருக்க
(உத்) அந்தமுடன் தானே ஆனைமுகம் யேனே
வந்தது சீமானே வகையா யிருப்பானே
முந்தியிதை மொழியவேணுமே புலவா (ஐ)

வசனம்:—தென்புடன் பாடவந்த புலவீர்! உலகத்தின் கண் சகல விக்கினங்களுக்கும் நம்மைப் போன்ற முக மிருக்க விநாயகருக்கு மட்டும் யானைமுகம் அமைந்தவிதமென்ன? இன்னும்

பாட்டு.

(3) ஒத்தைக் கொம்பொடிந்த வரலாறெடுத்து
ஒழுங்காயிந்த பெரியோரடியிற் தொடுத்து
இத்தரையில் பச்சை மஞ்சளை யரைத்து
இறுக்கி உருண்டையாக்கிக் கையினால் பிடித்து
(உத்) அத்திமுக னென்று அதன் சிரத்திலன்று
வைத்து புல்லைக்கொண்டு வணங்கியதேன் விண்டு
சுத்தப்பட சொல்லி வருவீர் புலவா (ஐ)

வசனம்

ஆதியில் உம்மைக் கல்விச் சாலையில் வைக்கும்பொழுது அரிச்சுவடி துவக்கஞ் செய்தாரல்லவா? அக்கால் பச்சை மஞ்சளை யரைத்து உண்டையாகச் சேர்த்து அதன் சிரசில் அருகம்புல்லைச் சொருகி தூபதீபங்காண்பித்து உம்மை சரணஞ்செய்யச் சொன்னபோது அதை என்னவென உமது உபாத்தியாயரிடம் கேட்டிருப்பீரன்றோ? அவர் என்ன சொன்னார்? ஒத்தைக்கொம் பொடித்திருக்கும் வரலாறையும் உரையும் புலவீர்.

பாட்டு.

(4) ஆவணியில் பூர்வபக்ஷம் பார்த்து
அம்புவியோர் விரதம் ஒன்றுமே ஏர்த்து
பாவமற இருப்புதென்ன ஆர்த்து
பதுங்காம லோதிவா கவி கோர்த்து
(உத்) கோவமின்றி ஓடி கொண்டா நூலைத்தேடி
நாவலரேபாடி நவின்று முன்கூடி
மேவி கிருஷ்ணசாமி கவி யீதறிவாய் (ஜ)

காம தகனக் கக்ஷி

விநாயகர் விடை விருத்தம்

உலகமதிற் சிறந்தவித்வா னென்று உம்மை
உரைக்கலாம் சபையோர்கள் முன்னதாக
நலமுடைய மதன்கக்ஷி யதனைவிட்டு
நவிலென்றீர் விநாயகரின் வரலார்தன்னை
பலரறிய புராண மெலாம் திறந்துயிங்கே
பகருகிறேன் ஒவ்வொன்றும் விபரமாக
தலமதனில் அவர் பிறந்து ஒற்றைக்கொம்பு
தந்திமுகமான தொரு விந்தைதானே.

இலாவணி

(1) ஐங்கரன் வரலாற்றை இங்கெடுத் துரைக்குரேன்
அவைதனிற் கேட்டோரே
அறிந்துக்கொள்ளுங் காணந்த அத்திமுகன் பிறப்பை
அன்புடன் சபை நேரே
சிங்காரமான தக்கன்தனை ஜெயித்திடவன்று
சிவனருள் தான் பாரே
சிந்தையை யடக்கியே அஷ்டாங்க யோகமதில்
சிலநேர மிருந்தாரே
எங்கு மமர்ந்தசோதி சின்மயப் பொழுது
என்னங்கொண் டொருவாரே
எழுந்துருவாகியே யிருந்திடப் பார்வதி கண்டேதெ
[னப் பெரியோரே

(கவி) பெரியோரே ஆதிபரஞ்சோதி யீசன்
பெட்புலவு மடியதனிற் குழந்தையாக
அரியதொரு பிர்மமது உதித்தபோது
அம்பிகையும் கண்டதனை யேதென்றாளே

வசனம்.

கவனம்வை கவியோரே! தக்கனுடைய யாகத்தை அழிக்க எண்ணிய சிவபெருமான் அஷ்டாங்கயோகத்தில் அமர்ந்திருக்குங்கால், எங்கும் நிறைந்த பரபிர்ம்மமானது சிறுகுழவி வடிவமாய் சிவனது மடியில் வந்தமரக் கண்ட பார்வதி தேவியானவள் இப்பிள்ளை யாரென்று ஈசனைக்கேட்டதால், நாளது வரையில் அந்த பெயரால் பிள்ளையாரென வழங்குவது மன்றி, ஷை தக்கனுடைய யாகத்தை அழிக்கச்சென்று சிரமறுபட்டதால் அத்தியின் சிரத்தை அமைத்து ஆனைமுகமாக்கினதும் மார்கண்டேயர் புராணம் மகிழ்ந்துரைக்கக் காணும் மகிபரே.

பாட்டு.

(2) சுந்திரமான திருகந்தப் புராண மென்னும்
சுருதியை யானெடுத்து
சுத்தமதாகச் சொல்வேன் அத்திமுகன் பிறப்பை
சுணங்காமற் கேளடுத்து
அந்திவண்ண னுமை தானுமாய்க் கூடியே
அருள்வனம் தனைவிடுத்து
அண்டர்கள் மகிழ்ந்திட சென்றிடக் கானகத்தில்
அதிசயமதைத் தொடுத்து
(கவி) அதிசயமாம் வனத்திலுற்ற சிங்காரத்தை
அம்பிகைக்கு எடுத்துரைத்து யேகும்போது
புதியதாய் மண்டபமொன் றதனைக்காண
புகழாக உள் சென்று நோக்கினரே

வசனம்:—சிவனும் உமையவளும் ஓர்நாள் கானகத்திற் சென்று அங்கு புதியதாய்த் தோற்றிய ஓர் இரத்தின கசித மண்டபத்தில் நுழைகையில் அதன் சுவற்றில் ஆண் பெண்ணாகிய இரண்டு யானை சித்திரம் எழுதப்பட்டிருப்பதைக் கண்ட அம்பிகை ஆவலாய் நோக்கவும், அய்யனனவர் பிரணவத்தை உச்சிரித்தவுடன் இரண்டு யானைகளும் உயிர் பெற்றுக்கலந்து ஷை பிரணவ சொரூபமாகிய பிள்ளையை ஈன்றளிக்க அதைப் பார்வதி கணங்களுக்குத் தலைவனாய் நியமித்துக் கணபதியெனப் பெயரிட்டதை கந்தப் புராணத்திலும் காணும் கவிவல்லோரே.

பாட்டு.

(3) சித்திரமானநல் அருணாஜலப் புராண
சிறப்பதை அறிவீரா
சிந்தித்து கயமுகா சூரனை ஜெயித்திட
சின்மயமது நேரா

இத்தலமதனில் உற்பவமான தாய்
இயம்பிட ஒருவாரா
இன்ன வழிகளென்று நன்னய முணராமல்
இப்போது கேட்டீரா
கேட்டீரா ஐங்கரனுர் பிறந்த மார்க்கம்
கேதாரன் பிள்ளையென உலகந்தன்னில்
நாட்டியந்த மஞ்சளிலே அமைத்தவாறு
நாவலரே மங்கலமாய் நவிலலாமே

வசனம்:—கயமுகா சூரனை சம்மாரஞ் செயவதற்காக பரம்பொருளானது வக்ரதுண்ட விநாயகரா யவதரித்து கஜமுக சொரூபமாய் வலது கொம்பை யொடித்து பிரயோகம் செய்ததும் உலகத்தார் ஷை முதற் கடவுளாகிய விநாயகரை மங்கள காரியங்களுக்கு மஞ்சளிலமைத்துத் துதிப்பதும் விநாயகப் புராணம் விளம்பக்காணும் விற்பன்னரே.

பாட்டு.

(4) மருமலர்க் கவிபொழி சென்னை நகரதில்வாழ்
மகிபனின் முன்னுலே
மங்களமாக மதன் பங்கபடாத நூலை
மகிழ்பெற சொல் மேலே
திருமகளருளதால் தேன்கவி பொழிந்திடும்
தீரனென் றறிவாலே [சொல்லை
திடமாயுணர்ந்துக் கொள்ளும் இராஜகோபாலன்
தியங்காமல் மனதாலே

மன்மத தகன மறுப்பு

டேப்பு துந்தினு வினு விருத்தம்.

அந்தமுடனைங்கரனின் வரலார்தன்னை
அறிவித்தீர் புனிதரேயிவ் வவனி தன்னில்

விந்தையதாய் மதனெ ரிந்த கக்ஷிபாட
விருதெனவே நீரெடுத்து தட்டுகின்ற
துந்திடு டேப்பமைந்த மார்க்கமென்ன
துய்யபெரியோரடியை தொழுதுக் கூறி
எந்தனெதிர் கவிபாடும் இல்லாவிட்டால்
எழுந்து தங்கள் மனையதற்கு ஏகுவீரே.

இலாவணி.

(1) மறைவழி யறியாமல் தரணியில் கவிபாடும்
மாபுலவீரே ஐயா நில்லும் நில்லும்
மாரன் பண்டிகைக்கிந்த டேப்பு துந்திடுவந்த
மார்க்கமதனை முதல் புல்லும் புல்லும்
குறையாமல் டேப்பதின் கட்டை அகலத்தை
கூறியெழுந்து பின்னால் செல்லும் செல்லும்
குற்றமில்லாம லெந்த மிருகத்தின் தோலதை
குணமாய மைத்தீரென சொல்லும் சொல்லும்
(கவி) இறைகின்ற தொனியெங்கே பிறந்ததை
இச்சபையிலேடுத் தெனக்கு கூறுவீரே.

(2) எந்தமரத்தி லிந்த துந்திடுபடி செய்தீர்
என்ன கணக்கு அதைக்கூறும் கூறும்
எழிலுள்ள அகலமும் நீளமும் சபையதில்
எடுத்து சொல்லியப்பாலே பேரும் பேரும்
விந்தையாய் மூங்கிலதற் கெத்தனை யடியென
விபரமா யளந்துமே பாரும் பாரும்
வீம்பு செய்யாமலின்னம் பிரீடை யமைந்த விதம்
விளங்கத் தெளிந்து சங்கை தீரும் தீரும்
(கவி) சுந்திரமாய் தந்தியதின் நாதங்கண்டு
சுகிர்த குணமுட னெனக்குக் கூறுவீரே.

(3) சிங்காரமானயிந்த டேப்பு துந்தினுவதில்
சிறந்த ஆண்பெண்ணது கூறே கூறே
சிந்தைமகிழ அதைவாசிக்கும் விரலதில்
சீலமுடையதெது பாரே பாரே
மங்களமாகவே துந்தினுவடிக்கிற
மகிமையதனையும் நீரே நீரே
மனமதிற்கிசைவானசுதி யெங்கே உதிக்குது
மன்மதன் கதைபாடும் பேரே பேரே
(கவி) எங்கிது ஆதியிலே விர்த்தியாகி
எடுத்துவந்தீர் சொல்லுமதை கியானயோகி

(4) நன்னயமொழிசொல்லும் நாகை கோவிந்தசாமி
நாவலர்முன்பாக நின்று நின்று
நாடதில் இலாவணிபாடவந்தீரே அதன்
நற்பத உரையென்ன என்று என்று
கன்னற்குயிலைப்போலே சென்னை கிருஷ்ணசாமி
களறும் கவியதனை யின்று யின்று
கருத்தினிலமைத்துமே அருத்தங்கள்பாருமையா
காமன் எரியானெனச் சென்று சென்று

காமதகனக் கக்ஷி.

டேப்பு துந்தினுவிடை விருத்தம்.

ஆவலொடு இலாவணிகள் பாடுதற்கு
அமைந்தமேதன் விருதுக்க ளென்றுபேசி
பாவலரே கேள்வியது கேட்டதாலே
பகருகிறேன் ஸ்மிருதியுத்தி அநுபவத்தால்
கேவலமாய் நினையாதீர் யிதனை ஐயா
கேலியதாய் போனதந்த ஒலிக்ககூவி
நாவலரே சபையோர்க ளடியைப்போற்றி
நானுரைப்பேன் விபரமதாய் நவின்றுமாதோ.

இலாவணி.

(1) அந்தமுடைய டேப்புதுந்தினு வந்தவிதம்
அவையதிற் சொல்லிவாரேன் புலவீரே
அற்புதமான தப்பை குப்புறப்போட்டு ஓடி
ஆசானையழைத்துவா என்றேரே
சுந்திரமாய்த் திருச்சங்கு நல்மகா ராஜன்
சுவர்க்கத்திற்கேகிட கவியோரே
சுகமுடன் தனதுகுரு விஸ்வாமித்திரரை
சுயேச்சையளிக்கக்கேட்டான் அறிவீரே
விந்தையுடனே அவர் அப்படியாகவே
விரைவினிலளிப்பதாய் புகன்ருரே
வித்தகரேயதை தேவர்களறிந்துமே
விடமாட்டோம் வழியெனமறித்தாரே
(உத்) இந்ததேவர்களின் தயவெதற்கென்று
இயற்றினர் அந்தரசொர்க்கமதொன்று
சந்தேகமின்றி யிதைகவியோரே (அ)

வசனம்.

கேளும் புலவீர்! தனது சிஷ்யனுகிய திருச் சங்கு மகாராஜன் சொர்க்கலோகம் போவதற்கு தேவர்கள் வழி விட மறுத்ததின் நிமித்தம், விஸ்வாமித்திரர் கோபம் மூண்டு, அந்தர சொற்கமொன்று ஏற்படுத்தி அவனை அதி லிருக்கச் செய்ததுமன்றி பிராமணருக்கு எதிர் நடையாய் குஜிலாத்தாரை ஏவி இலாவணி டப்பா முதலிய பாடல்களை போதித்து அதற்குரிய கருவிகளாய் டேப்பு துந்தினுவை அளித்ததை, விஸ்வாமித்திரர் ஆகமதிறவுகோலினும், நாரதரின் பாரதசாதித்திய சிந்தாமணியிலும் பகரக்காணும் பாவலரே.

பாட்டு.

(2) சிஞ்சினிபூட்டுந் திருதஞ்சாவூர் மகாராஜன்
சிவாஜி அரண்மனையதில்தானே
சித்திரசேவகராம் குஜிலாத்தியார்களெல்லாம்
சிறப்பாய் பண்டிகையொன்றை கனவானே
வஞ்சமில்லாமல்செய்து ஒலியெரிந்ததாக
வழக்குப்புரிவதுண்டு சீமானே
வாணரே அதிலிரு கக்ஷிகள்பாடினற்போல்
வளமாயிதை யெடுத்தார் பூமானே
(உத்) அஞ்சாமல்அவ்விடத்தில் கலிக்கித்துராவென்று
அடித்துக்கொள்வதுபோல வழக்கமாகவே யின்று
மிஞ்சிவரவே செய்தார்கவியோரே. (அ)

வசனம்:—ஆதியில் தஞ்சாவூர் மகாராஜனுகிய சிவாஜி அரண்மனையில் சேவகம் புரியும் குஜிலாத்தியார் ஆண்டுகள் தோறும் ஒலிப்பண்டிகையென்னும் ஓர் ஐதீகத்தைக் கொண்டு வாது புரிவதைக்கண்ட நம் தமிழரும் புராண ஆராய்ச்சிசெய்து இக்கக்ஷியை இபற்றிஇன்றுவரை நடத்துகின்றனர். இன்னும் ஓதுகின்றேன் சாதுவா யமரும்புலவீர்.

(3) திட்டமுடைய டேப்புகட்டை பெரிதோ அல்லால்
தீரரேதோல் பெரிதோவெனவிண்டு
திண்டாட்டமாகக் கேட்டுமுண்டா திருப்பாமற்பார்
திக்கெங்கும் புகழ்பெற உரைகொண்டு
சட்டமுடைய டேப்புகட்டை யில்லாவிடிலே
சப்தம் உண்டாமோ தோலில் நீகண்டு
சந்தேகந்தெளிந்துக்கொள் எந்தவிதமெனவே
சபையோர்கள் முன்னதாக ஏன்முண்டு
(உத்) கட்டியமழாதே சப்தம்யிரண்டிற்கும் பெரிது

களறுவேன் துந்திஞவின் கணக்கதுஅரிது
அட்டகாசஞ்செய்யாமல் கவியோரே. (அ)

வசனம்:—இன்னும் உம்மது அனுவசியமாகிய வினு விற்கு விடை வேணதுண்டு. ஆயினும் காமன் கக்ஷியை முடிப்பதற்காக இதைக் கடைகட்டும் கவியோரே.

பாட்டு.

(4) உச்சிதமாகிய இலாவணி என்பதற்கு
உரைஅழகெனவே நீ அறியாயா
உண்மையாய்நமதுநல் தமிழ்ராகமதற்கு
உபராகமிதுவெனக் கொள்நேயா
மெச்சினே னுந்தனைநான் பின்னுமோர் விடையதை
மேலோர்கள் அருளால் பெறுவாயா
மெல்லடியதைப்போற்றி வல்லபமா யளிக்கும்
மெய்யுரைதனக் கெதிர்வருவாயா
(உத்) கச்சித இயற்றமிழ் கவியருள்சிலன்
காசினியெங்கும்புகழ் இராஜகோபாலன்
இக்ஷணம்வினவிய கவியோரே (அ)

டேப்பு துந்திஞவிடை.

வேறு இலாவணி.

இந்தக்கேள்விதனை யெங்குவைத்திருந்தீர்
இத்தனைநாளாய் கனவானே
இப்போதுகேட்டீர் தப்பிதமில்லாமல்
இன்னமுஞ்சொல்லுவேன் கேள்தானே
விந்தையதாகபிர்மன் ஜடத்தைப் படைக்கும்போது
விளங்கியஅல்லியை முதல்காணே
விரும்பியே அதன்மேல் தோலதைமூடிய
விசித்திரம்பாரிது சீமானே

அந்தமாக அதைப்போலடேப்பது
அமைந்ததை அறியாமல் கேட்பானே
ஆரணமுற்றிலும் உணராமற்தாங்கள்
அவையதில் பாடிடவருவானே (இ)

(2) சிங்காரமாகியதுந் தினவந்த
சிறப்பிதைக்கேட்டு வாபெரியோரே
சீருற்றகண்டமே படியதுவாகும்
சிந்தையமைந்ததொண்டை கழிபாரே
எங்கும்புகழ் திருநாவின்கீழ்நரம்பு
எழிலான தந்தி யென்றெண்வீரே
ஒத்திமுடுக்கும்நற் பிரிடையேசெவிபாம்
எண்ணிப்பாருங்கா ணிதன்சீரே. (இ)

(3) இலாவணிடப்பாகெஜல் டோமரிக்கு
இதுநல்லவாத்தியம் யெனவறிந்து
இயற்றியேவைத்தார் நந்திகேஸ்வரரும்
இன்பமாய்ப் பாடுவோமெனத்தெரிந்து
சௌாவணியாக இரண்டினிலாண்பெண்
செப்பிவருகிறேன் கேள்நிமிர்ந்து
செந்தமிழ்ப்புலவீரே டேப்பதுபெண்ணும்
சேருமேதுந்தின ஆண்கனிந்து (இ)

(4) வாத்திய சிந்தாமணி வழாங் கவிதை
வாணரே நீ பார்த்துணராமல்
வழுத்திய கேள்விக்கு பதிலிரு வகையாய்
வரைந்தேன் மனமதில் ஒளியாமல்
நாத்திசையினும் புகழ் இயற்றமிழ் இராஜகோபால்
நானுமே யென்தனை மறவாமல்
நல்லமனதாகவே டேப்பைக் கொடுத்தென்னை
நாடி ஜெயிக்கச் சொன்னுரிகழாமல் (இ)

மன்மத தகன மறுப்பு.

அரிச்சுவடி வினு விருத்தம்.

வடமலையை வேரோடு பிடுங்கிவீசி
　　வானமதில் தாக்குகின்ற வன்மைபோல
கடல்மடையை திறந்துமுதல் காமனவன்
　　கக்ஷியது உதித்தவிதம் இவ்வாறென்றும்
திடமுடைய டேப்பினேடு துந்தினுவும்
　　திருவுலகில் அமைந்தவகை கூறினற்போல்
படபடப்பாய் அரிச்சுவடி வரலார்தன்னை
　　பலரறிய ஓதியபின் பாடுவீரே

இலாவணி

(1) ஆதி அரிச்சுவடி படித்தபேரே
　　அவையிலதன் கணக்கெடுத்துரைப்பீரே.
ஓதிநீர் ஓலைகள் வந்தவாரே
　　ஒழுங்காயதைவாரும் அகலம்கூறே.
நீதியாய் நறுக்கும் நீளம்பாரே
　　நிலையாய்த்துளை யிடுவதெங்விடம் நீரே
(உத்) மேதினியில்பார்த்து மேன்மைபெறதீர்ந்து
　　வாதியெனிலெதிர்த்து வழுத்துவிதைபொருத்து
சோதித்து சொல்லு மிச்சபைநேரே. (ஓ)

(2) முந்தியொரு சுழியெழுத்தை காட்டி
　　முனையாய் ஓங்காரமதனைதீட்டி
பிந்தி அரியெழுதுவதேன் நீட்டி
　　பிரித்து அதன்பயனைச் சொல்லுங்காண் காட்டி
(உத்) சுந்திரமாய்க்கூறு சுருதிகளைப்பாரு
　　விந்தையாயென்நேரு விரித்துரைத்துச் சேரு
பந்தமாயப் பாடிடவந்தோரே. (ஓ)

(3) அரிச்சுவடிமுழுதும் யெத்தனை யெழுத்து
அதிலும் ஆண்பெண்ணெது அதைவழுத்து
தெரிந்து உயிர்மெய்யும் அமைத்தகருத்து
தெளிவாகச்சொல்லி அப்பாலே நிறுத்து
(உத்) பெரியவர்போல்பாரும் பேசுகிறீர் நீரும்
மரியாதையாக்கூறும் மகிழாயெந்தன் நேரும்
பரிகாசமல்ல காணிதுபாரே. (ஓ)

(4) பச்சரிசிபயறும் எள்ளும்பார்த்து
பண்புடைய சர்க்கரை யதில்சேர்த்து
இச்சையாகித் தேங்காயதனையுடைத்து
இன்பமான தூபதீபமுங்கொடுத்து
(உத்) அச்சமில்லாதன்று அரிச்சுவடியென்று
மெச்சிடவேநன்று மேலோர்களேன் நவின்று
உச்சிதமாய் வைத்தார்களொருவாரே. (ஓ)

(5) மண்டலம்புகழ்ந்திடும் கவிராஜன்
மதுர நல்கவிபொழியும் போஜன்
அண்டர்புகழ் கிருஷ்ணசாமிதாசன்
அவையிலிதை வினவிய அருள்நேசன்
(உத்) விண்டுபதில்கூறு விளங்காவிடில்பேரு [ரு
தொண்டுசெய்தேன்நேரு தொடுத்துரைக்கப் பா
சண்டையிங்குகூடாது புலவீரே. (ஓ)

காமதகனக் ககூஷி.

அரிச்சுவடி விடை விருத்தம்.

ஆதியிலே சமஸ்கிருத மதிலிருந்து
அழகாக தெலுங்கதும் பிறந்து அப்பால்
நீதிபதாய் நாகரத்ன மெனவளர்ந்து
நீடுலகில் பரவியதன் பின்னலோங்கி

ஓதிவரும் தமிழதுதான் அகஸ்தியற்கு
ஒழுங்குபெற சுப்ரமண்யர் உரைத்தவாறு
மேதினியில் விளங்கிவர எழுதிவைத்தார்
மேலான அரிச்சுவடி யாகவையா.

இலாவணி

(1) அலைகடல் சூழ்புவியில் புலவர்நானென்று வந்த
அற்புத சிரோன்மணியே
அறிவிப்பேனுன் கேள்விக்குபதிலினியே
கலைவழியறியாதகவிஞரே ஆதியில்
காசியினில் கும்பமுனியே
கருதியிதை செய்துவைத்தார் தனியே
நிலையாகப்பனையோலை அகலமதனை சொல்வேன்
நிச்சயமிதை யறியே
நிமிராதே மூன்றணிவிரல்சரியே
(உத்) சிலைமதன்கதை பாடும்பேரே
அதன்சிரதை கேட்டுவருவீரே
அலையாதே இருபத்து ஆறணிவிரல்நீளம்
அற்புத் சிரோன்மணியே. (அறி)

(2) சுந்திரத்துளையிடும் சுத்தளவதையுமே
சுகிர்தமாய்க் கேட்பீரே
சுருங்கிமுகம் வாடாதே பெரியோரே
உந்தன் குருவைக்கேள் யெட்டரையணிவிரல்
உகந்துமேபார் நேரே
உண்டதற்கும் சுருதிப்ரமாணசிரே
(உத்) இந்த வரலாறிதைப்போலே
எவர்—இயம்புவார் உனக்கினிமேலே
முந்திமுப்புரிகயர் மூன்றுமுழம் பிர்ம
முடியடிரெண்டு முடியே. (அறி)

(3) செப்பமுடனே முதலரியது மகாவிஷ்ணு
செந்தமிழ்க் கொருவாறு
செழிக்கமஞ்சள் லக்ஷ்மியாகத்தேரு
தப்பிதமின்றியிதை சிற்பன நூலதில்
தாமறியாமல்வேறு
தடுத்துசொல்லநூலுண்டா அதைக்கூறு
(உத்) இப்புவியதில் எங்கள் முன்னே
இனி—இதுவென்ன கேள்விகள்பின்னே
எப்போபார்த்தாலுமிதை ஏனென்னைக்கேட்குறீர்
எழுந்துநில் சிரோன்மணியே. (அறி)

(4) பரம ரகசியத்தில் யிருந்த சுழியெழுத்தை
பாரினில் கும்ப முனிக்கே
பகர்ந்தார் சுப்ரமண்யரன்று களிக்க
திரமாயதிலிருந்து ஒங்காரம் பிறந்தது
திருவருளதால் சிறக்க
திங்களைப்போல்தெரிவிப்பேன் ஜோதியொளிக்க
(உத்) மரம்போல் நின்ற தப்பாலறியே
அதில்—மலர்ந்த மூன்றக்ஷரம் தெரியே
தாமுடனய னரிமாலவர்க் குகந்தது
தத்துவ வாதமணியே (அறி)

(5) இருநூற்றிப் பதினாறு எழுத்தினிலாணெழுத்து
ஈரைம்ப திருபத்தேழு
இருக்கும் பெண் எண்பத்தாறிமேலு
திருவருள்ளுவ ருரைத்த ஞானம் நூறினில்
திடமாய் மூன்றலி கேளு
திருத்தமாக உரைப்பதைப் பார்மேலு
(உத்) விருதா கேள்விகளை விட்டு

மதன்—விர்த்தாந்தமதை கடை கட்டு
கருதியே இயற்றமிழ் இராஜகோபாலன் முன்
களறியே சிரோன்மணியே (அறி)

வேறு இலாவணி.

(1) என்னக் கேள்வியிதை இத்தனை நாளாய்
எனக்கெதிர் தானுக
சபை விட்டேக
எடுத்துரைப்பேன் கேட்டுவா தெளிவாக
நன்னயமுடன் தமிழ்பாஷை யெழுத்தது
நாலுவகைகள் பாரும்
அதனை நீரும்
நவிலுமுயிர் யெழுத்துமே யீராறும்
இன்னமும் மெய்யெழுத் திதுவுமே பதினெட்டு
இயம்பிடும் நெடில் தானே
ஏழாங்கோனே
இருக்கும் குறில் ஐந்தாக தனவானே
(கவி) தன்மையாய் சுட்டெழுத்து மூன்று மல்லால்
தாணிதனில் வல்லினமும் யிருமூன்றுமே

(2) மெல்லினம் யிருமூன் றிடையினம் ஆறினி
மேலுமே தெரிவீரே
குறிலும் சேரே
மேதையரே தொண்ணூரா மிதைப்பாரே
வல்லவுயிர் மெய்நெடில் நூற்றியிருபத்தார்
வரியும் உயிர் மெய்யெழுத்து
இரண்டுங் குறித்து
வழுத்துவேன் சுருதி வழியாய் விரித்து
(கவி) விள்ளுகிறேன் மெய்யெழுத்து பதினெட்டின் மேல்
விளங்குமுயிர் தனித்தனி யீராலும் பாரே

(3) எழிலாய் யேறிட இருநூற்றிப் பதினாறு
எழுத்தாமதில் நின்று
ஆயுதமொன்று
எடுத்துரைக்க இன்னமுங் கேள் நன்று
பழிக்காதே குறிலுக்கு மாத்திரை ஒன்றதாம்
பார்நெடில் தனக்குரைக்க
இரண்டாம் களிக்க
பகராயுதம் தனக்கே அரையுமிருக்க
(கவி) வழுத்தும் திருபதை யெழுத்தது வென்ன
வறிந்து சொல்பரை யெழுத்தின் பேர்மன்ன

(4) அஞ்சாமல் பிஞ்செழுத்ததில் முதிர்ந்த
அக்ஷரம் குழியென்ன
சொல்லுவீர் நன்ன
அவையில் வேறே பாடுவதென்றால் மன்ன
தஞ்சமென் றுந்தன் டேப்பைக் கீழேவையும்
தகாது நீ யண்ணே
பாடவு மண்ணே
தர்க்கம் செய்ய இராஜகோபாலன் முன்னே
(கவி) வஞ்சகரே கேட்பதற்கு மட்டும் சொல்லும்
வாயில் வந்தபடி பாடி ஓடாதீரே

மன்மத தகன மறுப்பு

வேதாகம சாஸ்திர புராண வினா விருத்தம்

கருந்தமிழ்க் கடலதனில் மூழ்கி வந்தோர்
கால்வாயாம் செந்தமிழை அள்ளியுண்டு
அருந்தமிழை எடுத்திங்கு பேசவந்தீர்
ஆதியிலே வேதமொடு ஆகமங்கள்

பெரும்புவியில் வந்தவகை கூறிப்பின்னல்
பெட்புலவு சபையோர்க ளறியத்தானும்
விரும்பியிதை வெண்தமிழாய் மதனெரிந்த
விருதைவிட்டு வித்தகரே எகுவீரே

இலாவணி

(1) வேதாகமம் வந்த வழியே
வேண்டும் தமிழ்க் கடலையுண்ட மணியே
காதலாக ஆதியில் வேதம் தனையே
கருதியாருண்டு செய்தாரினியே
மேதயரே கூறும் யெத்தனையதையே
மேலு மதன் பெயரென்ன உண்டு தெரியே
(உத்) வாதனை செய்யாதே வழுத்து மிப்போதே
ஏதய்யா நீதீதே எடுத்தோதத் தகாதே
கோதறவே பார்த்து யிதனின் வழியே (வே)

(2) அங்கஜன் பிறந்ததில் யெரிந்ததாக
அறையுதா பார்த்துமே சொல்லனேக
சங்கையாகக் கூறும் யெத்தனையாக
சாஸ்திரம் உண்டதைத் தெளிவாக
(உத்) மங்களமா யெதிர்க்க மதனை சிவன் தகிக்க
எங்கேயதில் பெருக்க எழுநிபுண்டா களிக்க
உங்களையான் கேட்பதிந்த வழியே (வே)

(3) சாஸ்திரத்தில் பிறந்த ஆகமம்பாரு
சாற்றவேணும் சுத்தமாயதன் பேரு
சூஸ்திரமாய் பாடினு லென்சேரு
ஸ்மிருதிகள் ஒவ்வொன்றதையும் கூறு
(உத்) நாஸ்திகரே முன்னே
நவிலுமதன் தன்னே

வாஸ்தவமாய் அண்ணே
வழுத்துமதிற் பின்னே
ஈஸ்வரன் எரித்த தாய் அவ்வழியே (வே)

(4) ஜெகமதில் புராண மென்று
செய்ததை அமைத்தவா ரன்று
பகவானைக்கண்ட பனி போலின்று
பதுங்காமலோடி வந்தெதிர் நின்று
(உத்) சகலருமே அறிய
சாக்ஷியெனத் தெரிய
புகலுமிதை அறிய
புலவரே நீர் பெரிய
தகமையொடு கிருஷ்ணசாமி சொல்வழியே (வே)

காமதகனக் கக்ஷி.

வேதகம சாஸ்திர புராண விடை விருத்தம்

ஆரணங்க ளுணர்ந்த புண்யவானே நீவிர்
அவைதனிலே யென்னைகேட்ட தற்குஆன்சர்
வாரணத்தைக் கண்டெழுந்த ஆண்சிங்கம் போல்
வருஷிப்பேன் கவிமழையுன் ஆவல் நீங்க
காரணமாய் யோசியாதீர் சபையிலின்று
காட்டினுல் கையிருப்பு கந்தலாக
ஜீரணமாய்ப்போக ஒரு ஏப்பம்விட்டு
சிதறடிப்பேன் வெற்றிபெற்ற சிஷன் யானே

இலாவணி.

(1) வீராதி வீரரென ஆரவாரமாய்வந்த
வித்வசிரோன்மணியே முன்பாக
விற்பனர்மகிழ வேதப்புராணவழி
விளம்புவேன் கேள்விக்கு பதிலாக

தாரணிதனிலிந்த மானிடர்க்காக பிர்மன்
தானளித்திடவேதம் தென்பாக
தன்னில் நினைக்கருக்கு யஜுர்சாம அதர்வணம்
தலைமையாய்ப் பிறந்தது நான்காக
சோரம்போகாதே பின்னே அதிலிருந்துபவேதம்
சொல்வது போலீரிரண்டாக
சோதியாய் ஆயுள் அர்த்தம்தனுகாந்தர்வம்
ஜொலித்ததுகாண் அங்கமதுவாக
(உத்) பாரய்யா மந்திரசோதிஷ் வியாகரணம்
பண்புடன் நிருத்தசந்தோபிசதகுணம்
சூரர்போலவந்தீர் முன்பாக (வி)

(2) சுந்திரமான உபநிடதம் நாலெட்டாம்
சுகிர்தமுடனறியா புலவீரே
சுவேதா ஸ்ரீருத்ரம் பிரகதாரண்யம்
சுவதரம் கைவல்ய மொடுபாரே
அந்தமாய்க்கடவல்லி கார்த்திவாயனம்
அன்பரே காலாக்கினி தெரிவீரே
அழகாகப் பார்கரம் பரமாங்கி சம்பிர்மம்
அங்கிசநாராயண மதுசிரே
(உத்) முந்திஆருணி அமுர்தபந்து பிர்மபந்து
மூலபகுவபஞ்சம் பிர்மசாபாலவந்து
இந்த ஈதேரோபிந்திப்படியாக (வி)

(3) ஆதியில் அமைந்தது இருபத்தெட்டாய்
ஆகமமதைப்பாரக்க தெளிவாகும
அன்பரே யிதிலுப ஆகமம் ஒன்பது
அதனையும் உரைத்திடில் விரிவாகும்
வேதியன் பொய்யிதல்ல சாஸ்திரம் ஆறு
வேதாந்த வைசேஷிக முடனாகும்

வேறிதுதான்காண்மீ மாஞ்சை பிரபாகர
வேணபாட்டமிது ஒன்ருகும்
(உத்) வாதியே பூர்வமீமாஞ்சையைக் கேட்டு
வணங்கியே டேப்பதை கீழினிபோட்டு
ஓதியே புராணங்களை முன்பாக (வி)

(4) வாமன சைவசிங்க கூர்மவராகஸ் காந்தம்
வாகாக மார்கண்டேயமிதுபாரு
வாணரேமாச்சர்யம் பிர்மபதும அக்னி
வைணவ பிர்மாண்டமுடன்சேரு
நேமமாய் காருட பௌஷிக நாரதீக
நேசரே ஆக்னேய மெனக்கூறு
நேர்மையாய் பாகவத பதினெட்டதனிலரன்
நெற்றிக்கண்ணுலெரித்ததென வேறு
(உத்) பூமனின் கதையெலாம் புகலுதே மேலும்
புலவனியற்றமிழ் கவியிதைப்போலும்
தாமதம் செய்யாமற் கேளன்பாக (வி)

மன்மத தகன மறுப்பு

விரு விருத்தம்.

செங்கண்மால் தவமதனில் மதன் பிறந்து
செல்வரதி மாதரசை மணம்புரிந்து
மங்களமாய் வாழ்க்கையிலே முனிவனுலே
மாசாபம் பெற்றுபின் இந்திரன் சொல்லால்
சங்கரனுர் தவமதனை அழித்ததாலே
சாம்பலதாய் எரிந்துமே போனதாக
இங்குரைத்திர் அதனில்பல சந்தேகங்கள்
இருப்பதால் வினவுகிறேன் இயம்புவீரே

காவடிச்சிந்து மெட்டு.

தத்துவக் கடலைவாரி
　　மெத்தவும் குடித்தமிழ்ந்த
தரணிபுகழும் ஞானசங்கமே
　　தக்க கேள்வி கேட்குறேன் வித்வசிங்கமே
தாங்கள் விடையின்றளிக்காவிடில் பங்கமே
(முடு) இங்கே—தண்டுமுண்டாய் கண்டுகாமன்
　　பண்டிகையென விண்டவரே
புகலும் மதனுக்கன்னைபேருமே
　　புகழ், ஜாதகம்வரைந்தவர் யாருமே
சத்தியமாய் வருட மாதம்
　　உத்ததேதி நாள்மணியை
சாற்றியென்னை ஜெயித்தால் வீரமே
　　ஷாகீர், கழுத்தில் போடுவேன் தங்கஹாரமே
சற்று, கலகம் செய்திடில் வரும் கோரமே
　　ஐயா—சட்டைகெட்டு ஒட்டுக்கவியை
கொட்டவேண்டாம் திட்டமாக
　　ஆயுதப் பயிர்ச்சிசெய்த தாருமே
அதை, அறிவிக்கவேணுமினி நீருமே
　　வித்தையிற் றெளிந்தவரே
சித்தஜனெரிந்ததிரு
　　விளம்பும் வருடம் மாதம் தேதியே
விருதா, பாட்டைப் பாடுவதென்ன நீதியே
　　விடுத்துக் காட்டினல் போதுமெந்தன் வாதியே
(முடு) இனி—விந்தையாகவே வந்துநேரினில்
　　குந்தியேனே சந்ததமும்
எடுத்துச் செய்குறீர் வீணய் வாதமே
　　எல்லாம், கேட்டு சிரிக்க உந்தன் கீதமே

இத்தரையில் வெற்றி பெற்ற
உத்தமப்புலவோரென்று
மெத்தவும் குடித்துவந்த சங்கமே (தந்)

(2) ஆதியிலவர்க்கு வித்தை
ஓதிவைத்த வேதியரார்
அறியபதிலெனக்குக்கூறுவீர்
ஆன்சர் இருந்தால் கலையெதோ கொண்டாருவீர்
அல்லால் ஒழுங்கல்ல நீர்பேருவீர்
(முடி) அன்று—அங்கஜனும் சங்கரனல்
பங்கமாகியே பொங்கினதாய்
பாரில் பலரறியப் பாடியே
பார்த்து பதுங்காதிரெனைக் கண்டாலோடியே
நீதியாய் அவனுக்கெந்த
தேதியதில் கலியாணம்
நிலையாய் நடந்ததெதிர் நில்லுமே
நீட்டிக்காட்டி யெனையெதிர்த்து வெல்லுமே
நீரும் கண்டவிபரமெல்லாம் புல்லுமே
(முடி) அப்போ—நீலமேகனும் காலகாலனும்
வேலன் கணபதி மாலவருமே
கூடியே வரிசைவைத்த தேதுமே
குறித்துஅதை யுரைப்பிப்போதுமே
மேதினியில் நாமறிய
சாதிக்கின்ற நூலெதுமுன்
வாதியென்றோடியே வந்த சங்கமே (தமி)

(3) அங்கஜனுக்கன்னல் வில்லும்
துங்கமாய் சுரும்புகாணும்
அரும்புக்கணை விபரம் தந்தயா
அது கலியாணமானதற்கு முந்தியா

ஆழிமுரசு வந்ததுடன் பிந்தியா
(முடு) சொல்லும் அஞ்சுகந்தனில் வஞ்சியருடன்
பஞ்சபாணனும் கொஞ்சி செல்கையில்
வழியில் எத்தனை பெண்கள் பாரய்யா
வந்துபின் படையானவந் பேர் கூறய்யா
பங்கப்பட்டவ னெரியும்போது
அங்கு வயதென்ன
பலபேர் நிறை சபையில் சொல்லிவா
பாரில் கொட்டை முட்டையை நடவல்லவா
பகரும் சாஸ்திர மிருந்தாலோதி வெல்லுவா
(முடு) இன்று—பக்ஷமுடன் இச்சபையில்
உச்சிதமாய் கக்ஷி செய்யும்
பாவலோரே இதற்கென்ன சொல்வீரே
பாட்டைக் கேட்டு பின்டேப்பைக் கிழேவைப்பீரே
மங்கையர் புகழும் கவி
எங்களெதிர் பாடவேண்டாம்
மனதில் கவனம் வையும் சங்கமே (தக்)

(4) கல்லாலின் கீழான் தவம்
வல்லவா செய்தா ரென்றீரே
கடவுளர்க்கு மேலே தேடுவீர்
கண்டு பதிலென்று சொல்லி அப்பால் பாடுவீர்
கலேவழியில்லா விடிலெழுந் தோடுவீர்
(முடு) அன்று—கனமதாகவே ஜனகாதியர்
மனமகிழ சினமெழுந்து
நெற்றி விழிதிறந்த போதுமே
நேரில் அவர்களிருந்த தெங்கே ஓதுமே
சொல்லத் தெருதனில் ஊசியதனை
நல்லவிலே கூறினுற் போல்

கோதையர் சிரிக்கவுந்தான் வாச்சுதே
கோலி யாகஉன் கக்ஷியது போச்சுதே
கொஞ்சும் கிருஷ்ணசாமிக் கவியிதாச்சுதே
(முடு) ஐயா—கொண்டு நிதமும் மண்டலந்தனில்
தொண்டு செய்திதை உண்டு வாழும்
கொத்தவரை வித்தை யெல்லாம் சூட்டுறீர்
கொல்லை காட்டுநரி போலே பல்லைக் காட்டுறீர்
இல்லறத்தில் வல்லமோக
அல்லலிலிருந்துக் காம
தொல்லையி லழுந்தும் ஞானசங்கமே (தக)

காம தகனக் கக்ஷி

விடை விருத்தம்.

திரிபுறத்தை சிரித்தெரித்து திங்கள் கங்கை
திகழுமலர் அயன்சிரசை கொய்தநாதன்
உரியகடல் நஞ்சதனை உண்டமூர்த்தி
உமையவளுக் குடல்பாதி யீய்ந்தமெய்யன்
நரியைப்பரி யாக்கிதம தடியார்க்காக
நமனையுமே மண்ணில்விழ நாடிச்சாய்த்தோன்
சொரியுமலர் மன்மதனை சுட்டதுண்மை
சொல்லுகிறேன் அவன்வரலார் சோதிப்பீரே

காவடிச்சிந்து மெட்டு.

(1) கற்பகக்கோடி காலமாய்
உற்பவத்திலகிடும் நல்
கருணைப்பிரகாசவள்ளல் நீருமே
அன்னக்—காவடிகேள்வியை கேட்டதாருமே
(முடு) முந்தி—கந்தப்பனும் எந்தநாளில்
வந்து பிறந்து வெந்தானென்று

கவத்தகங் கொண்டவரே பேருமே
அந்தக்—கருத்தை எடுத்துரைப்பேன் பாருமே
அற்பரோ டிணங்காமலென்
சொற்பொழிவை தானறிவீர்
அறையும் கிரேதாயுகம்மீதுமே
புகழும்—ஆண்டு பிரபவ தப்பாதுமே
(முடு) அதில்—ஐங்கணையோன் செங்கண்மாலின்
அங்கந்தன்னில் மங்களமாய்
அவதரித்த மாதம்மாசி யோதுமே
தேதி—அதுவும் இருபத்தேழென் வாதுமே
சிற்பிநூற்படியே பாரும்
அற்புதக் கிழமையுமே
சிறந்திடும் வெள்ளியென நாட்டியே
யோகம்-சித்தியர்க உத்தமமாய் கூட்டியே
(முடு) நீ—சின்னப்படவே இன்னுமுரைப்பேன்
நன்னயமாய் பன்னிபன்னி
சீற்றம்வர கேட்காமலே காட்டியே
திதி-சீராய் பஞ்சமியென நீருமே. (அன்)

விருத்தம்.

மதன்பிறந்த வருடமாதம் தேதிகிழமை
மங்களமாய் யோகம்திதி நாழிசொன்னேன்
சதமாயவன் கொடிபடைவில் கணைகளெல்லாம்
சத்தியருள் தன்னாலே மாலெடுத்து
உதவிசெய்து பங்கயனல் கலைகளெல்லாம்
உரைத்துவைத்தார் ஜாதகத்தை யீசன்கண்டு
அதன்படியே திருத்தேவி வளர்த்துவந்து
அரிவைரதி தனைவதுவை முடித்தாரய்யா.

பாட்டு.

(2) அந்தரத்தோர்கூடி யொன்றும்
சுந்தரக்கடல்கடைய
அமிர்தம் உதித்ததுபோல் தேவியே
வந்து-அழகாய் பிறந்தாளப்போ மேவியே
(முடி) அதை-அண்டி உமையும் கண்டெடுத்து
கொண்டுவளர்த்து மண்டலத்தினில்
அங்கஜன் தனக்குத்தூது ஏவியே
பெண்ணை-அழகாயளிக்கப்பெற்றான் தாவியே
விந்தையாய் மன்மதவாண்டு
சிந்தை மகிழாடியிலே
விவாகம்நடந்த தைந்தாந்தேதியே
இன்னும்-விளம்பக்கேள் குருவாரமோதியே
(முடி) ஐயா-விற்பனரே அற்புதமாய்
தற்பரன்மால் சொற்படியே
விக்கினர் முருகருடன் நீதியே
லக்னம்—விடியற்கால் மீனமென நீருமே. (அன்)

விருத்தம்.

காரிகை யிலக்கணநன் னூல் தொன் னூல்
காப்பியங்க ளுணர்ந்த பெரியோர்கள் முன்னே
வீரியமாய் மதனெரிய வில்லையென்று
விளம்பிசில கேள்வியைநீர் கேட்டதாலே
ஆரியர்கள் பெரியோர்கள் தேவர்முதல்
அன்புடைய சிநேகிதர்க ளனைவோருந்தான்
பாரியநல் மதனுக்கு வரிசைவைத்த
பண்பதனை நீரறிய பகருவேனே.

பாட்டு.

(3) முத்துக்கோர்வை சித்ரவேலை
சுத்திசரிகை ரத்னப்பட்டு
முழுமஞ்சள்சேலை வேஷ்டியோடுமே
வரிசை-முகமன் கூறியளித்தார் தோடுமே
(முடு) பலர்—* முதிரமாகவே நிதிகளெல்லாம்
பதியும்படியாய் துதிகள்செய்து
முகுந்தன் மகனுக் கினியீடுமே
அந்த—† முச்சத்தியுமே தெனவுங்கூடுமே
வித்தகனே ஒத்துக்கொள்ளும்
பத்துவயதாகுமப்போ
விளம்புவேன் எரிந்தநாட் காட்டியே
ஜெய—விருதைஎடுத்து முன்னால் சூட்டியே
(முடு) அந்த—‡ விலாசிமகனும் விலாசியிவனும்
விலாசிகண்ணால் § இலாசடியாய்
வீழ்ந்தான்கைலைமீதில் நாட்டியே
இனிவிஸ்தாரமாய் ஓதிவாரேன் நீருமே (அன்)

விருத்தம்.

பங்குனியில் மூன்றாந் தேதியிலே
பஞ்சமியாம் திதிமரண யோகமையா
அங்கஜனும் பிர்மனிட வாக்கைக்கொண்டு
அரன் தவசை யழித்திடவே சென்றகாலம்
இங்கறிவீர் சனிவாரம் வசந்தமாலை
இயன்புவேன் மணிபொன்ப தாகுமப்போ
மங்களமாய் யிதையுணர திடமில்லாமல்
மதனெரியா கக்ஷியென மறக்கலாமோ

---

* முதிரம்—மேகம். † முச்சத்தி—சிருட்டி, திதி, சங்காரம்.
‡ விலாசி—விஷ்ணு, மன்மதன், சிவன். § இலாசடி—துன்பம்.

பாட்டு.

(4) உலகம் அதிலே நண்பர்
நலமா யெடுத்தருந்த
உழுதுவிளக்கும் கவிசிங்கமே
பதில்—உனக்குரைத்தேன் வித்வதங்கமே
(முடு) இதை—உத்துப்பார்த்து ஒத்துக்கொள்ளும்
சித்தமதில் மித்தையாய் நீ
உளறினல்தானடைவாய் பங்கமே
எந்தன்—உறுதிமொழி யுதுபோல் அங்கமே
கலகம்செய்யாதே யினி
தலமெங்கும் சவால்செய்து
காமன்பெரியானெனக் காட்டியே
தோடா—கடககங்கண கொடிநாட்டியே
(முடு) மிக்க—கருத்துரைகள் பொருத்தமாக
திருத்திப்பின்பு மறுத்துக்கொடுத்த
கனவானடியில் முடிசூட்டியே
ஜெய—காலன் இராஜகோபால் நீருமே. (அன்)

மன்மத தகன மறுப்பு.

விருத்தம்.

காமனவன் சரித்திரத்தை கண்டவாறு
களருகிற புலவோரே காட்டுவீரா
நேமமுட னிதையுரைக்கும் புராணமுண்டா
நேரிலதை கொண்டுவந்தால் ஜெயமுனக்கே
பூமணக்கும் சபையதனில் விருதைத்தந்து
புகழுவேன் இல்லையெனில் புவியிலந்த
தாமதமே காமமென ஓதுகின்ற
தத்துவத்தை ஒத்துக்கொள் தருணமாதோ.

இலாவணி.

(1) எங்கினும் அதிகப்ர
சங்கமாத்தாதே யிரங்கி
மதன்—எரியான் அரன்விழியால்
எனவேபோடுவேன் பிரங்கி
அங்கஜனரமுர
ஹரியால் ஜெனித்தபின்புதானே
ஈசன்—அழித்தானென்றவை யதில்
வழுத்தவந்தீரே புலவோனே
சிங்காரமாக விஷ்ணு
சித்தஜனையும் யீன்றபோது
முந்தி—சிவனரி அயன் மூவர்
எவரால் ஜெனித்தார் காணும்ஒது
மங்களமாகக்காம
மாய்கைசக்திக்கு முந்தியாச்சே
உந்தன்—வார்த்தையதுகளெல்லாம்
பார்த்தோர் சிரிக்கக்காலமாச்சே
தங்கத்துண்டொன்று பூமி
தனிலேகிடந்து நன்றாய் ஜொலிக்க
அதில்—சத்தில்லை யெனச்சொல்லி
புத்திசாலிபோல் வந்தாய்கெலிக்க
(முடு) புங்கவன்விழியால் பங்கப்படானே
துங்கமாரனும்
பொதுவாமெதுவா அதுவாசங்கதி
புகலுதாரணம்
புத்தியுள்ளோரே மெத்தவும் நீரே
கத்துகின்றீரே செத்தானுக்கூறே
போகமதுசாகரத்தில் பாகமதாய்வேகுமோகாண் (எங்)

தில்லாலே.

அருளும் ஞானவெட்டியான்
ஆயிரத்தி நூற்றிப்பதினென்று
பொருளும் ஒன்பதானசெய்யுள்
போட்டகூடும் போதாதோ
இருளிலே கிடந்துலவும் நீ
இன்பமான பக்கங்கேள்
உருளும்நூற்றி தொண்ணூற்றஞ்சி
உண்மைகாணும் வல்லவரே.

பாட்டு.

(2) நீலகண்டனுலந்த
நிர்மலன் தகித்தானென்றீரே
வெகு—லக்ஷணமாயிருக்கு
மொச்சைபிஞ்சி புலவீரே
ஓலமிட்டழுகாதே
உள்ளதைச் சொல்லுகிறேனென்று
ஒரு—ஊமையனுக்கு ஞானம்
ஆமையுரைத்த கதையொன்று
சிலமுடனேமோகம்
செத்தாலுமக்கு யேதுகாமம்
இந்த—ஜெகத்தோரறிய உந்தன்
முகத்தில்போடுவேன் கோபிநாமம்
ஏலம்போடுறூர் தேவர்
இதோபார் வானத்திலேமீனு
என—எடுத்தான் வாயில்வாரூபா
கொடுத்துவாங்குச்சு மச்சம்பேனு
(முடு) காலம்சென்றபின் மூலம்வந்துமே
வேலைப்பழிக்குதே

கதையும்விதையும் புதையுமென்றாலே
காதைப்புளிக்குதே
கட்டு உன்கடையை வெட்டுவேன் படையை
சுட்டானென்றிடையே தட்டாதேதுடையை
காமமில்லா பாமரமே ஏமாராதே ஜாமத்திலே (எங்)

தாண்டவக்கோன் பாடல்.

மனமெனும் மாடடங்கி தாண்டவக்கோனே
முத்தி—வாய்த்ததென்று நினையடா தாண்டவக்கோனே
சினமெனும் பாம்பிருந்தால் தாண்டவக்கோனே
யாவும்—சித்தியென்றே நினையடா தாண்டவக்கோனே
ஆசையெனும் பாசமலர் தாண்டவக்கோனே
இந்த—அங்கமெல்லாம் கண்டறி நீ தாண்டவக்கோனே
ஓசையுள்ளடங்குமுன்னே தாண்டவக்கோனே
மூல—ஓங்கோரங் கண்டறி நீ தாண்டவக்கோனே.

அகவல்.

இடைக்காட்டு சித்தர்
இயம்பிவைத்த பாடலிது—தாங்கள்
கடைக்காண்டம் மட்டுமிதை
கவனித்துப் பார்ப்பீரே
படைக்கின்றமாரன்
பத்தினனென்றால்—அவள்
துடைகண்ட போதே நீர்
துடிப்பதுவுமெப்படி காண்.

பாட்டு.

(3) சாம்பசிவன் விதியால்
தனலான்மாரனென்றவாலே

நீட்டி—சல்லிப் புராணம் வந்து
சொல்லிவிட்டதா உன்முன்னாலே
கேம்பொத்த ஐவேலிக்குள்
கெஞ்சியொளித்தோ ரெரிப்பாரா
உனக்—கிருக்கும் வருடந்தோறும்
முறுக்காய் பிடிப்பதுண்டோ நேரா
வீம்புக்குக் கக்ஷிதொட்டு
விருதா ஆவதேனோ அய்யா
சும்மா—வித்தில்லா சாம்பரதாயம்
சுத்தமாய்த்தோணுது பார்மெய்யா
நேம்புவேன் முறமதில்
நிறையப்போட்டு உன்னையானே
அரை—நிமிஷநேரத்திலினி
தும்ஸம் செய்வேநான்காணே
(முடு) ஆண்பிள்ளையானால் போம்போமெழுந்துபின்
தாம்பூலம் வாங்கியே
ஆரியம் காரியம் வீரியம் செல்லாது
அடக்குன் ராங்கியே
ஆகாதுமோசம் போகாது ரோஷம்
வேகாதுபாசம் தாகாது வேஷம்
அண்டமதில் கண்டறியா தொண்டர்களே
கொண்டுவாரும். (எங்)

ஏலப்பாட்டு.

பிரணவமே உருவிதமாய்
தத்தய்யா உருவிதமாய்
பிடரிவழி திமிர்ந்தொழுக
தத்தய்யா திமிர்ந்தொழுக

தாணமதில் சரயுநதி
தத்தய்யா சரயுநதி
தளும்பிடவே பிராணவாய்வு
தத்தய்யா பிராணவாய்வு
(முடு) கருவிகரணங்களும் கண்மூடிப்போக
காலைமுதலேழுவரை ஏறிவிளையாட
திருவுருவமும்மூர்த்தி ஏணையிலேதூங்க
தேவிபராசத்தியருள் நாதமதைவாங்க
பொரிபுலன்கள்மாறி பொங்கிவழிந்தோட
பொன்றினதொன்றுமில்லை அன்றனலில்மாரன் (பி)

அகவல்.

சவுனகாதி முப்பத்தாறு
தத்துவ ஏலப்பாட்டு
கவனம்வை உன்மனதில்
கற்பூர ஜோதியைப்போல்
தவணைபேசாதேயினி
தர்க்கிக்க ஞாயமுண்டோ
எவரெனை எதிர்க்கவல்லார்
எரியாதகக்ஷி உண்மை

பாட்டு.

(4) இதுவரையில் சொன்ன
சுருதிப் புராணங்களைப் பேர்த்து
இப்போ—இரக்குன் கொடியதை
பறக்கவிடாதே யென்னைப் பார்த்து
மதுபயிடபனுக்கு
மதன்மகனென்றதுவும் பொய்யே
அந்த—மாய்கையிலே உலகம்
மாட்டிக்கொண்டிருக்குது அய்யே

கதவுதிறக்க முடியாதுன்
கவியினலிப்போது
உந்தன்—கருத்திற்கே தெரியும்
கவனித்துப்பார் தப்பாது
பதம்பொருளா யுனக்கு
பகாதிருஷ்டாந்திரங்களுண்டு
இன்னும்—பலவிதம் தபோதனர்
பாதம்பணிந்து வழிகண்டு
(முடு) இத்தனைநாளாய் மெத்தாடுதின்ன
தத்துவப்புலவீரே
எதிர்க்க பதுக்க ஒதுக்க உன்னலே
ஏலாதொளிவீரே
என்னளும் ஜாலம் பண்ணுதேகோலம்
கின்னாரமேளம் பொன்னலேதாளம்
இந்தசபை எந்தனிலேஉந்தனுக்கு பந்தயங்கான்(எங்

விருத்தம்.

சுத்தமாய் பிர்மந்தன்னில் தோன்றும் மாய்கையின் குணத்
பற்றாரா யிசன்ஜீவன் பஞ்சபூதங்களுண்டாய் [தால்
மற்றுமோர்பூதந்தானே மருவிசூக்குமங்களாகி
நிற்றலும் தூலபஞ்சி கரணமாய் நிகழ்த்துந்தானே.

பாட்டு.

(5) நல்ல சங்குநதி
உள்ளத்திலிருந்து நாவிலூறி
தினம்—நினையச் செய்யுதே அதை
நினையாவிட்டாலே ஜெயபேரி
சொல்லவா வைகுந்தத்தை
சுழுப்திமணி பூரகமாச்சே

மது—சூதனன் ஆலிலைமேல்
　　துயின்றதும் அவ்விடத்தின் பேச்சே
அல்லல் மிக்காதேலைய்
　　ஐம்பூதமடங்கும் செயலறிவே
அங்கே—ஆறஞ்சியிசழ்ரெண்டு
　　அனுகத வட்டத்தொடு பிறிவே
தள்ளமுடியாதிந்தா
　　சாஸ்திரப் பூட்டாரகச்சாவி
இதோ—தந்தேன் திறந்துபார்த்து
　　சகலரிருக்கக் கண்டுசேவி
(முடு) இல்லறந்தனிலே வல்லவனுகிலும்
　　சொல்லாதே கோபமா
இந்திர தந்திர மந்திர ஜாலமும்
　　இட்டவர் சாபுமா
எங்காமல்வாரும் தூங்காமல்கூறும்
　　பாங்காக நீரும் மேங்காவலோரும் [யிரு (எங்)
சமையமிது நிமையில்விழி அவையில்பெறு செவையா

சங்காாச்சாரியார் விருத்தம்.

பாரப்பா யின்னமொரு சூக்ஷங்கேளு
　　பாதைவிட்டுப் போகாதே வாமதேவா
கூறப்பாயென்மகனே வெளியிடாதே
　　கூச்சலிட்டுத் திரியாதே வாய்பேசாதே
ஆரப்பா அறிவார்கள் மண்ணும்விண்ணும்
　　அடங்காத மன்மதனே அழிந்தானென்றால்
ஊரப்பா பேய்குரங்கு கூடிக்கொண்டு
　　உள்ளதெல்லாம் மறைத்து பொய்யை உளரிற்றுமே.

பாட்டு.

(6) கொள்ளிவிரால் கெளுத்தி
உள்ளமடவா கொக்கிமீனே
ஒரு—கொடுவா முழுங்க அதோ
குறவைபதுங்க அதின்சேனே
வெள்ளிபோலவே துள்ளி
விளையாடும் காவேரிநதியில்
வேத—வேதியர் தவம்புரி
விமோசன திரிசையம்பதியில்
சொல்லிவருவேன் பட்டா
ராமர் அருள் பெற்ற பாட்டு
சுத்த—வேத வேதாந்திகள்
சுவைக்கும் அமுர்தரசச்சீட்டு
கிள்ளுக்கிரையல்லகாண்
கெலித்துப்பாட என்னைத்தானே
அவர்—கிருபாகடாக்ஷத்தினால்
விரிவாய்ப் பாடுமே சிடன் நானே
(முடு) பல்லைத்திறக்காதே கல்லுக்கேதுவாய்
பில்லத்தனமாக
பத்தியாய் சித்தியாய் முத்தியை நாடுவாய்
சத்தியாய் நீயேக
பாவத்தைத் தேடி கோபத்தால் பாடி
சாபத்தைநாடி ஆபத்தாயோடி
பக்குவமாய் நிற்கையிலே சொக்குவதார் விற்பனரே
(சங்கினும்)

காமதகனக் கக்ஷி.

விடை விருத்தம்.

அறிவிற்கு அநுபவமே முதன்மையாகி
    அதிலிருந்து யுக்தியது அமைந்துபின்பு
நெறியாக முத்தமிழில் நூல்களெல்லாம்
    நேர்மையுற முன்னோர்கள் செய்திருக்க
* கிறியெனவே தடுத்தனை சபையின்மீது
    கிட்டாத தத்துவத்தை கொட்டினாலும்
வெறிபடநீ புராணகலை சரிதானென்று
    வேளெரிந்த உண்மையினை விளம்புவேனே.

இலாவணி.

(1) தேசம்புகழும் வித்வ்
    தாசனெனவே கவிகொண்டு
வந்து—தேங்காதே சபையதில்
    வாங்கிவிடுவேன் ஜெயகுண்டு
மோசம்போகாதே காமன்
    நாசமடைந்த நூலைக்கண்டு
இனி—மோடிசெய்தாலே பல
    கோடி ஆதாரமெனக்குண்டு
பாசமகற்றியப்ர
    காசசித்தர்கள் மொழிவிண்டு
இந்த—பாரில்யெனை ஜெயிக்க
    தேரிவிட்டாயோ கல்பமுண்டு
வாசம் நிறைந்தமந்த
    காசமாய்கை மதன்கொண்டு

---

* கிறி—பொய்.

மலர்—வாளிதொடுப்பதாலிந்
நாளிலேகாமவிர்த்தி உண்டு
(முடு) வாசமலரோன் ஈசன்கண்ணுல்
நாசமுற்றதும்
ரதி—வாடியோடிதேடி யரனுர்
வாக்குப்பெற்றதும்
வல்லவர்நேரே—சொல்லுவேன்பாரே
இல்லையாவேறே—புல்லுவீர் நீரே
வாசிசிவதேசிகரே யோசியுங்காண் மாசில் ாத (தே)

(2) சிங்கத்தை யெதிர்க்குமா
அங்கம்பெருத்த கஜமென்று
உன்—சித்தத்தில் கொள்ளாமல்
வித்தகரெனவே நீரின்று
பங்கப்பட்டானே மாரன்
சங்கரன்கண்ணினுலே அன்று
என—பந்தயம் போடவந்தீர்
எந்த நூலாதாரத்தில்நின்று
எங்கும்நிறைந்த பிர்மம்
தங்கி முச்சத்தியாகச்சென்று
முன்—எண்ணியவுடன் சிவன்
மண்ணிலுதித்ததாக நன்று
மங்களமா யுரைத்தேன்
சங்கைகொள்ளாமல் முதலின்று
அதை—மறந்துவிட்டீரே அய்யா
துறந்தஞானியரே நன்று
(முடு) கங்குல்போல உங்கள்முகங்கள்
மங்கிப்போகுதே

அது—கருத்துசிறந்தது வெறுத்துவியர்வை
கசிந்து வேகுதே
கண்டவர்நீரே உண்டெனில்வேறே
கொண்டுவாநேரே பண்டுநூல்பாரே [(தே)
கச்சிதமோ கொச்சைமொழி இச்சபையில் அச்சமற

(3) ஆலமதனையுண்டு
ஞாலமதனை காத்தோன் பாரு
அன்று—அய்வேலிகாயதற்குள்
உய்த்தானெனவே ஒருவாறு
சிலருடனே தாங்கள்
ஓலமிட்டீரே எந்தன்நேரு
அந்த—சிற்பரன்தன்னருளின்
அற்புதங் கண்டவர்கள்யாரு
பாலன் மார்க்கண்டனுக்காய
காலனையுதைத்தவர் சீரு
இந்த—பாரிலறியாதோர்க்கு
கூறினுலென்ன பெறும்பேரு
மாலவர் அங்கந்தன்னில்
பாலனுயுதித்ததுபாரு
சத்தி—மாய்கையென் றுணராமல்
வாய்மதம்பேசாதே காண்வேறு
(முடு) வாலவஞ்சியர்போலக் கொஞ்சிபே
ஜாலஞ்செய்குறீர்
வாரிமீறிகூறி கவியை
வானில் எய்குறீர்
வாட்டுவேன்பாரே நாட்டியேநேரே
பூட்டகம்நீரே காட்டாமற்போரே
வங்கனரே இங்கிதமாய் சங்கமதில் பங்கமுற (தே)

(4) மஞ்சலர் சோலை சூழும்
தஞ்சைக்காந்தை பதிவாசன்
காம—மகுத்துவமதையெங்கும்
வகித்துவைத்தரே வித்வநேசன்
கஞ்சமலர்வதன
ரஞ்சித ராமசாமி தாசன்
அவர்—கருத்தை யெடுத்துக்கவி
பொருத்தும் இயற்றமிழ் உல்லாசன்
கிஞ்சுககீதமென
செஞ்சொல் பொழியும் பிரகாசன்
அருள்—கிருபா கடாக்ஷமது
பெருகமொழியும் விஸ்வாசன்
அஞ்சுக உரையென
நெஞ்சகந் தனில்கொண்டுன் நேசன்
இப்போ—அறிவித்த கருத்தினை
தெரிவித்தேன் இராஜகோபால் சிஷன்
(முடு) சஞ்சலமடைவாய் வஞ்சக மொழியை
மிஞ்சியே பேசாதே
சரியா தெரியா அறியா புத்தியால்
சபையில் யேசாதே
சங்கையைவிடுத்து எங்களையடுத்து
தங்கத்தைக் கொடுத்து
சாதியுமே நீதியுடன்மேதினியில் வாதிகளே(தே)

மன்மத தகன மறுப்பு

விருத்தம்.

மாயனுக்கு மன்மதனும் குழந்தையல்ல
மங்கையென்ற லஷ்மிக்கு மகனுமல்ல
நேயர்களே அனங்கையர்கள் படையுமல்ல
நேர்மையுறும் ஆழியது முரசேயல்ல

காயமுள்ள தென்றலது தேருமல்ல
　கானகத்துக் கிளிகள் வாகனமேயல்ல
சாயநிற கன்னலது வில்லுமல்ல
　சரந்தொடுக்கும் கணைகளுமே புட்பமல்ல
நாயகியாள் அழகுடைய ரதியுமல்ல
　நாண்சுரும்பு மகரமீன் கொடியுமல்ல
வாயமுடன் சிவனெரிக்க ரூபமில்லை
　வகையறிய திரேகமதில் வழுத்துவேனே

இலாவணி.

(1) பக்ஷிக்கூட்ட மொருகோடி நடுவில் சிறு
　　பகிரியைப்போல் துணிந்து
பறந்துவந்தேனிந்த சபையிலுன் கக்ஷியிதை
　　பங்கஞ்செய்யவே புகுந்து
கக்ஷிசெய்யாதே உஷார் மாயன் தனக்கு மகன்
　　காமனெனவே முனைந்து
கண்டுப்பாரனுதினம் உண்ட அறுசுவையே
　　காமமதாகப் படர்ந்து
(உத்) நிச்சயமாயுடலில் நிறைந்து
　　மோக—நினைவதைக் கொண்டபோதேவிறைந்து
அக்ஷணம் மாதர்களைக் கூடிபணையச்செய்யும்
　　ஆசையெனவே துணிந்து (பற)

(2) மாமதமல்லால்வேறு மன்மதனென்றொருவன்
　　மாநிலந்தனிலேது
மார்க்கமுணராமல் துன்மார்க்க மதையடுத்து
　　மாற்றிப்பேசாதே சாது
பாமரமே கன்னல்வில்கணை சுரும்புநாண்
　　பாருன் திரேகமீது

பாரில்சந்திரன் குடைதென்றல் தேரென்பது வீண்
பாவம் வரும் தப்பாது
(உத்) நேமமுடனே உயிரோடு
எந்த—நேரமும் பிரியாத ஜோடு
தாமதகுணமென்ற தன்மையிதுவாமென
தந்தே பதிலைத் துணிந்து (பற)

(3) ஆவியுடனே காமம் மேவியிருந்து என்றும்
அரசுபுரிவதாச்சே
அறிவாய் ஐம்பூதமதில் ஓர்பூதம் பிரிந்தாலும்
அகிலம் அழியும் சேச்சே
பூவில்தங்கியமணம் போலே மாமதச்செயல்
புவியில் உதிப்பதாச்சே
புத்தியில்லாமல் விஷ்ணுசித்தமதனில் பெற்ற
புதல்வன் யென்பதும் யேச்சே
(உத்) ஓவியமென்றதற்கு ரூபம்
கூறி—ஒழுங்குத்தவறினாலே சாபம்
பாவிகளா பெறுவீர் பாசக்கடலதனை
பார்த்துப் பணிந்து துணிந்து (பற)

(4) அத்தன் யெரித்தானு உன் அங்கந்தனிலிப்போதும்
அனங்கனிருக்கப்பாரும்
அம்புலிகுடையுடன் பவனிவருவானென்ற
அதிசயமென்னக்கூறும்
இத்தலந்தனில்ரதி இப்போதிருக்கின்றுளா
இயம்பிவருவீர் நீரும்
இச்சையுண்டானல் மாது உச்சிதமாயணைப
இலகும் யிடத்தின் சீரும்
(உத்) உத்தமன் கோவிந்தசாமி
எடுத்—துரைத்த கவிக்கு பதில் காமி

பத்தர் புகழும் அவர் சீடன் இராஜகோபால்
பகரவே யான் துணிந்து (பற)

கவி.

காமமென்று சொல்லுவது ரூபமல்ல
கவிராயா தேவனல்ல மனிதனல்ல
நேமமுள்ள யிச்சையதை நினைவிற்கொண்டு
நேர்மையுடன் கூட்டிவைக்குங் குணந்தானைய

வேறு இலாவணி.

(1) உண்மைப்பொருளாகிய சின்மயமான மதம்
உடலழிந்த தென்பது பாவம் பாவம் பாவம்
கன்மனத்திருள்வெளி திறந்து ஞானப்ரவாக [கோபம்
கப்பல்விட் டிறங்கென்றால் கோபம் கோபம்
எண்ணிலா தவமுனி அம்பரர் தும்பராதி
எவர்யோனி படாதவர் சொல் சொல் சொல்
மண்ணப்பு தேய்வாகாயம் மலினமாம் பிரவர்த்தி
மதபிர்மமன்றி வேறு புல் புல் புல்
(உத்) திண்புயத்தோரே திகிலே விடுவீரே
பெண்ணென்பதாரே பேசவந்தீர் நேரே
(முடி) பெருத்தமனத்தாலுணி வருத்தப்பயிர்முளையா
கருத்திலிருத்திப் பாரும் வெறுத்தவாரார்
[மோகத்தை (உண்)

(2) எழுவகை தோற்றமாய் ஏகி நால் யோனியதில்
எங்கும் உதிக்கும் மதம் அறி அறி அறி
மழுகினை யேந்தியன்று மயானக்கூத்தாடி அய்யன்
மதனையும் யெரித்தாரா சரி சரி சரி
அழுகாதே உன் அன்னைபிதா முழுமனத்தோடுங்கூடி
சுகிக்கச் செய்ததே காமம் யெண் யெண் யெண்

உழுதமாட்டை முகத்தில் உதைத்ததுபோலுன்வாத்தி
உரைசெய்தளித்தகவி மண் மண் மண்
(உத்) தழுவிணைமீதே தனைமறந்தபோதே
பழுதுபடாதே பகர்வெனில் வாதே
(முடு) உள்ளபடியில்லறத்தார் கள்ளனெனவேவுனையே
தள்ளிவிட்டாரோ ஐயா துள்ளுகிறீர் மெள்ள
[மெள்ள (உன்)

(3) சத்தப்பரிசரூப ரசகந்தத்தினுதாரம்
சாட்சி மூவாசையிதில் வரும் வரும் வரும்
தத்துவம் தொண்ணூற்றாறில் சுத்தப்பிரகாச மோனம்
தணலாச்சு தென்றீ ரதேபோரும் போரும்
[போரும்
செத்துபின் அரூபியாய் செனித்ததென்றுலப்போது
செப்பும் சிபசுபாகம் பொய் பொய் பொய்
மத்தவம் உள்ளங் கவிழ்ந்தோடி சித்தாதி மோனம்
மகிமைகாண் யெரியாது மெய் மெய் மெய்
(உத்) எத்தனைபேரோ எனைஜெயித்திட்டாரோ
கத்தவர் நீரோ காமக்கவலை மறந்தோரோ
(முடு) கஞ்சமலர் பஞ்சபூதம் அஞ்சையும் கணை
[யெனவே
மஞ்சளைப் பூசியே மாதாய் கொஞ்சுகிறீர் ஐயோ
[பாவம் (உன்)

(4) பருசர் மைந்தர் வியாசர் விரித்த புராணம் பந்தம்
பட்டம்பகல் பித்தனை விடு விடு விடு [மணி
திராசுகோலொன்றே ஞானம் ஜெயம்பெற்ற கண்டா
தித்திப்பில்லா சரிதை தடு தடு தடு
இராஜராஜர்கள் போற்றும் திருநாகை கோவிந்தசாமி
யீசன் அருளைப்பெற்ற கவி கவி கவி

மொாசுபெற்றசிடன் ஜாாய்க்காதே கவனம் உஷார்
மெடல்பெற்ற வாக்குக்குக் கொடு செவி செவி
(உத்) சுராதிபன் மோகி சுடானே அவிவேகி [செவி
புராணமதாகி புலம்புரீர் தியாகி
(மூடு) புனல்கமிழச் சடையன் அனலாவநுதல்புட
மனம்வந்ததோ உமக்கு நுணலானதென்பதற்கு
(உண்)

காவடிச்சிந்து மெட்டு.

விருத்தம்.

மூளையினில்சேர்ந்து கொழுப்பது தடித்தால்
மூதறிவில் காமமென்ற நினைவைக் கூட்டும்
வேளையிதை மதன்கணையின் செயலாமென்றே
வேற்றுமையாய் சாற்றவந்தீர் ஐயோபாவம்
கோளைமொழி உனதாசான் கருத்துணரா
கொச்சைகவி பாடெனவே விடுத்திட்டாரோ
தாளையினி திறவாதே கிருஷ்ணசாமி
தவடையிலே அறைகொடுப்பார் தாக்கிதாமே

இலாவணி.

(1) சரிகைக்கிரிகையோக ஞானந்தெளிந்தவர்போல்
சபையிற் பாடிடவந்த அங்கமே
மனத்—துணிவதிக முனக்கான்சிங்கமே
(மு) சாதுவாய்க்கவி ஒதிடும்புவி
மீதினிலொரு சூதிலாமலே
சம்பரதாய பத்தரைமாத் தங்கமே
நில்லும்—பம்பரம்போலாடி வந்தரங்கமே [தால்
வருகையிலே ஜமாத்திரனும் முடுக்கைப் பார்த்
வாரம்பாடுவீர் போலத்தோணுதே
பலே—நேரம் பரவாயில்லே காணுதே

(மு) வய்யகந்தனில் பொய்யைத் தள்ளியே
மெய்யா உரைத்திடும் அய்யாவே சில
வாய்ப்பந்தல் போடாதீர் காண்வேணது
சர——மாரிப் பொழியுமுன்னுலானது
இருகைராவணரே உன்திறமைக் கண்டறியநான்
இடிபோல் இடிக்குமோ உன்பாட்டெல்லாம்
இல்லால்—பிடியென்றெழுந்து கம்பிநீட்டலாம்
(மு) இசைதழைமுனை அசை சீருகள்
மசமசவென பிசகாகில்
லகுவில்விடாது எங்கள் சீட்டெலாம் [லாம்
உம்மை—டகுலக்கொடுக்கும் பின்னல் கோட்டெல்
(உத்) எந்தன் சமுகம் பாடும் புலவீரே
பாட்டில்—எமுகம் பராசத்துடன் கூறே

(2) ஆனுலிருந்துக்கேளும் மாநாகம் போலேவந்து
தானுய்ப் பறையடித்த வாதியே
இப்போ—நானுய்ப் புகல்வேனொரு சேதியே
(மு) அன்னை தந்தையும் ஒன்ருய்க் கூடாமல்
தன்னுய்ப் பிறந்தாயா மண்ணுலகினில்
அப்படிக்கானுலும் நூலைப்போதியே
பாட்டில்—செப்பியே பாடிடும் பிரக்யாதியே
கொனு-இங்கன்னு-கானு-தானு-ந-மாவென்ன
வானு-இந்தன்னு-தூனு-கொழிக்குறீர்
அந்த—அங்கஜனையும் வீணுய் பழிக்குறீர்
(மு) கோடிபேர்மதன் வாடினுனென
பாடிஎன்முன் ஓடினுர்காண்
கொங்கறைப் பல்லையுமிங் கிளிக்குறீர்
வெகு—ஜம்பமாய்க் கண்ணையுருட்டி முழிக்குறீர்
(உத்) எந்தன்முகம் பாடும் புலவீரே
பாட்டில்—எமுகம் பராசத்துடன் கூறே.

(3) இரவுக்கலேயறிந்து மருவுக்கடவுளாரு
பரவைக் கடிதொழாமல் நில்லுமே
நான்கு—மறைகண்டெழுந்து யென்னே வெல்லுமே
(மு) ஈசனுல்மதன் நாசமென்றுமே
பேசிடும்விசு வாசரே அண்ணே
இந்தமெட்டாகவே பதில் பாடுமே
அன்று—கந்தப்பனெரிந்தபேச்சை தள்ளுமே
கருவுக்குணவளிக்கும் உருவைக் களேவதேதுன்
குருவைக் கொண்டுவா உன்னுலாகாது
செவியில்—விரிவாய்க்கேட்டுவா மோகம்சாகாது
(மு) காமனுல்படும் தீமையாவுமே
கண்டமிர்த ஜண்டமாமே
கக்ஷிக்கிசைந்தபடி ஏலாது
மனதில் அச்சங்கொள்ளுங் காண்சங்கம் வேகாது
(உத்) எந்தன்சமுகம் பாடும் புலவீரே
பாட்டில்—எமுகம் பாராசத்துடன்கூறே

(4) அகிலமதிலே ரோஜாமயிலும் வாயினுல் கவ்வி
ஒயிலாய் சிறகை விரித்தாடுமே
கண்டு—குயிலிந்துஸ்தான் ராகம் பாடுமே
(மு) ஆளிகாளிநிர் தூளிமேல்பட
காளியாவுமை வேளிவனென
அஞ்சலமாய்வளரும் நாகைவாசனே
சாலே—மஞ்சலர்ப்படர்ந்த பதிநேசனே [விர்த்தி
வெயிலேமறைத்திடுங்காண் முகில்போல் பிரசங்க
பயில்வான் கோவிந்தசாமிதாசனே
திரு—கையில்தோடாபெற்ற நேசனே
(மு) வெந்ததாகவே பந்தயமொடு
வந்தப்பேர்களே சிந்தைப்பட

வெட்டாலே தடுக்கும் பிரகாசனே
ஜெப—கட்டாரியாம் இராஜகோபால சேஷனே
(உத்) எந்தன்சமுகம் பாடும் புலவீரே
பாட்டில்—எமுகம் பராசத்துடன் கூறே

விருத்தம்.

சங்கரனர் நுதல்விழியால் அனங்கனென்றோன்
சாம்பலதாய் பெரியவில்லை யென்பதற்கு
உங்களுக்கு ஆதாரமான நூல்கள்
உண்டோயிவ் வையகத்தி லென்றுகேட்டீர்
மங்களமாய் யென தாசான் இராஜகோபால்
மகிமையுற்ற இயற்றமிழ் பாமாலையாக
சிங்காரம் பாடுகின்றேன் கவனம் உஷார்
சிந்தையினி கலங்காதே இமைதட்டாதே.

இலாவணி.

(1) நங்கோரம் நங்கோரம்
நங்கோரமதை யறிவால் நவின்றுபின்செய்யுள் நினைவாலே
என்—நாவைபோயாவாக நாட்டத்துணிந்தேன் சபைமேலே
மங்காததமிழ்க்கடல் மதியை சங்கிலியாகக் கோர்த்து [து
ஜெப—மாரன் யெரியானென்ற மாதவர் நூல்களையும் சேர்த்
சிங்காரமான சாக்ஷி சிறப்பாய் தருவேனிதோ சுருக்கா
மத—சித்தஜனெரிந்ததாய் கத்தியமுவதுங்கள் கிருக்கா
சங்காரம்செய்ய அதை சபையிலெடுத்தேன த் வீதம்
உன்—சரக்குவில்லையாகாது உறங்கங்கொள்ளேன்வீண்வாதம்
அங்கஜன் சிவன்கண்ணால் அனலாயெரிந்தானென்றதாலே
[(என்

கோங்கணர் பூரணம் 700ல் 18-வது பக்கம் 49-வது.

விருத்தம்.

காணாமலலைந்தவர்கள் கோடாகோடி
கலையுணரா நிலையறியா மாண்பரப்பா
வீணாககாயகற்பம் தின்றேமென்று
வீழ்ந்திறந்து மதிகலங்கி சாவாரப்பா
நாணாமல் சிவனெரித்தார் மதனையென்று
நாடதனில் நாதரிஷி நவின்ற உண்மை
தோணாது மதனென்றோர் மனிதனேது
தொல்லுலகோர் நம்பிகெட்டவாரிதாமே.

இடைக்காடர் ஒயிற்கும்மி.

விண்ணேது மண்ணேது பெண்ணேது ஆணேது
வெந்தாலே மாய்கையாம் வேளதுவே
வித்தானது செத்துதீானல் முத்தாகுமோ உத்தமரே
வேதாந்தம் சொன்னமொழியல்லவே

பாட்டு.

(2) அடங்காபாம்புக்கு ராஜா மூங்கற்றடி பென்றறிவாயே
உன்—அண்டப்புளுகையினி அறுத்துப்போடுவேன் தெரி
[வாயே
கொடங்கை கொள்ளாதேயின்னம் கொடுப்பேன் எரியா
[நூல்கள் சாக்ஷி
கொண்டகோரிக்கை கெட்டதென்று கோபப்படா தேவம்ரு
[ஆக்ஷி
துடங்கும்போதே கக்ஷிதுரிசாய் டேப்பில்சாப்கொடுத்து
இப்போ—தூங்கி விழுவதென்ன எங்கிவிருதை யென்முன்
[விடுத்து
நடங்காணும் யெழுந்துயின்னம் நாரிபாக னெரிக்காறாலே
[(என்)

காகப் பூஜண்டர் 90ல் 18-வது பக்கம் 51-வது.

விருத்தம்.

நாதவிந்திெனுடுக்கமதை அறிவால்கண்டு
நலமிகுந்த வாசிவழி உணரவேண்டும்
ஆதரவாய் மவுனத்தில் நின்று பின்பு
அக்ஷரத்தின் நிக்ஷயத்தை தெரிவாயப்பா
போதமிகும்மதனை சிவன் யெரித்ததாக
பொய்யுரைப்பார் சிவமிருக்கும் யிடத்தைக்காணூர்
பாதகற்கு யிம்மொழியை விளக்கிடாதே
பருவமறிந்தே அமிர்தப்பாலுண்பாயே.

காக்கையர் கும்மி.

பிர்மத்தில் தோன்றிய மாயாசத்திபதை
பித்தனெரித்தானே சித்தஜனே
கர்மத்துக்குள்ளாக்கி வைத்தவன் பேயனிக்
காரணந்தானறி காக்கையனே.
சத்துசித்தானந்த வித்துக்குமுத்தான
சத்தைத்தணலா யெரித்துவிட்டால்
எத்தைக்கண்டு வுயிர்வித்தாரமாமதை
எண்ணிப்பார் கண்மணி காக்கையனே.

பாட்டு.

(3) தேருக்கு அச்சில்லாமல் தெளிவாய் வடகயிரைப்பூட்டி
அதை—தெருவில் நடத்தச்சொன்ன குருவிடம் கற்றதை
[முன் நாட்டி
ஆருக்குக்கூறவந்தாய் அடிப்பேன்கவி சவுக்கால் கபர்தார்
யீசன்—அழிக்கவே யில்லையென்றால் முழிக்காதே நிமிர்ந்
[தெதிர் என்னைப்பார்
பேருக்குக்கூலியென பேசியழுகாதே நூல்கண்டா

இன்று—மீட்டாக்கி விட்டேனுன்னைகூட்டி உன் குருவை
[யும் கொண்டா
நேருக்கு நேர்கொடுப்பேன் க்ஷேமமாயெரியாதநூலே (என்)

உரோமரிஷி வைத்தியகாவியம் 800-ல் 48-வது பக்கம் 205-வது விருத்தம்.

வெண்சாரை கருநெல்லி யறியமாட்டார்
வேகாததலைகாணார் புவியோரப்பா
மண்ணாளும்மதனை சிவனெரித்தானென்று
மாரடித்து அழுவார்கள் மதிகெட்டோரே
உண்ணாவின் துவாரமதை அடைக்கமாட்டார்
உளறியேசித்தரெனத் திரிகுவார்கள்
கண்ணான வாசியதின் நோட்டங்காணார்
கல்லைவைத்துக் கும்பிட்டுக் கதறுவாரே.

ஊர்வ்சி கும்மி.

காமக்குரோதமோக ராஜாதி
கலந்துவளர்ந்த சரீரமிது
தாமதசாத்வீத முக்குணம் மூன்றிலே
தணலானதேதுசொல் ஊர்வசியே
இக்குணங்களெல்லாம் யீசன்பெரித்தாக்கால்
இவ்வுயிர்கார்ப்பதாற் எவ்வுயிரும்
வக்கணமானமடமயிலே இந்த
வய்யகமேதடி ஊர்வசியே.

பாட்டு.

(4) அந்தரங்கமாய்ஜமா அலக்காய்க்கூடி பேசினாலும்
இங்கு—அசைசீர்தளைமுனைகள் அணுவேனும் பிசகாது
[மேலும்
மந்தபுத்தியால்முன்னே மம்மதையடைந்தீரே புலவா

உன்னை—மரியாதையாய் விடுத்தேன்குறியாய் எழுந்து நட
[பலவா
சந்தணப்பொட்டுக் காரசாமி ஒண்ணுநம்பர் பிளாங்கி
இனி—சகாக்களோடு உந்தன் சற்குருவையும் அழைசோங்கி
நந்தவனத்தில்புட்பம் நலமாய்வீசும் மணம்போலே (என்)

போகர் ஜனனசாகரம்.

விருத்தம்.

முப்புரத்தை சிவனெரித்த கதைதானேது
மூர்க்கமதன் என்றொருவன் உலகிலேது
செப்புகின்ற மும்மலத்தை புரமேயென்பார்
சேர்ந்தசுவை காமமதை மதனைக்கொள்வார்
உப்பதனில் நின்றருசி அருமைகாணுர்
ஊரூராய்த் திரிந்துதினம் அலைவாரப்பா
இப்புவியில் ஞானவழி அறியமாட்டார்
இடும்பைமொழி பலவிதமாய் உளறுவாரே

(சாரங்கமுனிவர் திருப்புகழ் 37)

எள்ளிடம் மேவி யிருந்த வெண்ணெய் போல்
கள்ளி மயக்கத்தி லுள்ளொளிபாகி
துள்ளி விழுந்தெழு நாதமுந்தீபட—உரையாதே
மறை வழியாய் சில நூல்கள் வகுத்தனர்
குறைவது வென்று தலைகீழ் கொட்டினர்
புரைபுரை என்று மண்மேல் பொக்கினர்—விருதாவே

பாட்டு.

இன்னும் உமக்கெத்தனை எடுத்து உரைக்கவேணும் காட்டி
பார்—இருக்குதனேக கோடி இந்தா தருவேனெதிர்நீட்டி
நன்னய கும்பமுனிநவின்ற ஆயிரத்தெட்டும் உண்டு
அய்பா—நாரதீயமுடன் நளவெண்பா வதையுமே கண்டு

தன்னிகரில்லாத துருவாசர் அறுபத்தேழை நேசா
இதோ-தந்தேன் சட்டமுவி ஆயிரத்தை நூர் மலர்வாசா
உன்னித நைடதமும் உரைக்குதே மேலும் வெகுநூலே(எ)

(மதனநூல் வெண்பா)

எத்திசைக் குந்தானய் இலங்கும் சிவபெருமான்
நெத்தி விழியாலெரிந்து நீராக—சித்தஜனை
போன்றிலகு காளையதில் போர்புரி நாற்ஜாதியரை
தோன்றவுரை செய்திடுவேன் தோண்

(அகஸ்தியர் திருப்புகழ்)

ஏகபரா பரமானது தோன்றி பின்
மாய்கையிலோ ருருவானது மன்மதம்
சோகமதாகமும் மூர்த்தியும் தோன்றினர்-கேழ்ப்பீரே
ஆகையினலே யீச்னெரித்தது
வாய்மதமாக வழுத்திய கோளாம்
யூகையிலாத புராணப் புரட்டெலாம்—ஒப்பாது

பாட்டு.

காசினி யெங்கும் சவால் காமன் யெரியானெனச் செய்து
யாரும்—காணும் எதிரியென மாணக்கர் தமக்கிதைபெய்து
நேசித்தளிக்கத் தஞ்சை இராமசாமி யடியைப் போற்றி
மிக்க—நேர்மையுடனே பட்டாராம ரருளையுடன் சாற்றி
வாசியோக நாகை கோவிந்தசாமி பதம் துதித்து
சென்னை-வாழும்கிருஷ்ணசாமியோடு சிங்காரவேலைமதித்து
தேசிகன்இராஜகோபால் பூசித்துரைக்க வெகுநூலே (என்)

இராவணி

அய்யா நீர் சொன்னப் பாட்டு
எனக்—கான்சரில்லை அப்பாலே போதப்பை தூக்கி

(1) கொய்யாக்கா என்னவிலே கூறுமென்றுமேலே உம்மை
பய்யாக்குருவி யொரு பணமென்றுரைத்து என்னைப்
பார்க்கின்றீரே ஓய் பாவலரே
என்ன—மார்க்கங்கூறே இதை மாற்றி வேறே
இந்த—மண்டலத்தில் உண்டாபதில் (அய்)

(2) ஆன் ச ரீதில்லையென்றால் அது மனஸ்தாபமோ
கான்சல் செய்துன் குருவைக்காமன் எரிந்தானென்ற
கசூியைவிடு என் கவியிதைத் தொடு
பாடப்—பக்ஷமாயெடு பின் பரவசப்படு
நல்ல—பருவசு தன்—உருவ மதன் (அய்)

(3) தலையைக் கீழேபோடாதே தாமதமேனோ காம
வலையைத் தடுக்கப்பெரும் வல்லவர் நீர்தானோ ஓய்
வாயைமூடு கரி வளையல் போடு
சத்தி—மாயையோடு மத மானக்கேடு
அறி—மன்னுயிது சொன்னேன் போது (அய்)

(4) கொஞ்சிடும் தஞ்சை ராமசாமி யருளாலே
பஞ்சலக்ஷணங் கொஞ்ச பாலன் இராஜகோபாலே
பணிந்திப்போது கவி பாடேன் வாது
மனந்—துணிந்து ஓது—நீ—தூங்கொணாது
பெற—துதித்து வரம் பதித்து சிரம் (அய்)

வேறு இலாவணி

(1) மதனெரிந்தா னென்று வாய்மதங் கொண்டீர்
மாயா விகாரத்தை மதன் செயலென்றீர்
பதம் பொருளென்பதை பக்தர்கள் சொன்னாலும்
பழிக்குதீர் உமக்கென்னப் படுகாலம் வந்ததோ
(மத)

(2) கஞ்சா அபின் சிட்டா கள்ளைக்குடித்து
கண்மூடி சித்தறென் றங்கந்துடித்து
பிஞ்சித் தனமாகப் பிதற்றுதே அகஸ்தியர்
பிரித்துரைத்த அரிச்சுவடி யதைக் கொண்டே
(மத)

(3) ஆதியில் தமிழெழுத் தறைந்தவர்பாறு
அகஸ்தியரோ அல்லால் வியாசரோ கூறு
மேதினியிலுயிர் மெய் ஆயுதமில்லாமல்
மேதையரே கக்ஷி ஓதுவீ ராவாறே (மத)

(4) கைம்பெண்களைக் கூடி கற்பங் கொடுத்த
கய்வன் வேதவியாசன் சுயமதாய்த் தொடுத்த
ஐம்பூத மற்றதோர் அக்ஷரமதைக்கொண்டு
ஐயா நீர்பாடுவீர் செய்யாமல் வீண்வாதம் (மத)

(5) சித்தரின் பாஷையை சத்தியமாக
சிந்தையதிற் கொள்ளா தெந்தன் முன்பாக
வித்தக ரென்றுமேல வியாசனிடம் ஓடி
விடையதைக் கேட்டுவா தடையின்றி இனிவீ
ணில் (மத)

(6) சாமர வாத்தியார் சங்கீத மேளம்
சபையினில் கின்னரம் பொன்னுன தாளம்
பாமரம்போல் நின்று பல்லைத் திறக்காதே
பாலன் இராஜகோபால் பகர்மொழி தப்பாதே
(மத)

விருத்தம்.

கன்னல்ரச மடைபெருகக் கமுகதனில் தேன் சொரியக்
கதிர்கள் முத்தும்
சென்னெல்வளர் நாடிதுகாண் செழிப்புற்றநல் மயிலினங்
செந்தூள் பொங்க [கள்

பொன்னிறகாம் சிறகசைத்து நடனமிட குயிற்கீதம்
பொழிவதோடு
அன்னமது ஜாடைசெய்ய சுரும்பினம் ரீங்காரமதில்
அமைந்து நிற்கும்
வன்மையுறும் சென்னைநகர் வண்ணையம்பதி யதனில் திரு
வளங்கள் சூழ
நன்னயமாய் காளியங்காராய முதலிதெரு இருபதெனும்
நம்பர் தன்னில்
உன்னிதஞ்சேர் மாளிகையில் வாழ்ந்திலகும் எனதாசான்
உலகமெங்கும்
மன்னரெனக் கீர்த்தியுற்ற இயற்றமிழ்சொல் இராஜகோ
மகிபர் மாதோ [பால்

சிங்கார இலாவணி

(1) திரு—சென்னைவண்ணையம்பதி கியாதியே
பெண்ணே—சேர்ந்தோம் காளிங்கராயர் வீதியே
நேரில்—செந்தமிழ் கவிமழை சந்ததம் பொழிந்திடும்
எந்தன் குருதிரு சுந்திர மாளிகை
செல்வம் நிறைந்திலகும் சொன்னமே
வித்வ—செங்கோல் வெற்றி விருதோடன்னமே

(2) சிங்கா ரலங்கார உல்லாசமே
தேவ—சிற்பநூல் உற்பவப் பிரகாசமே
இங்கே—சித்திர உத்தம ரத்தினக் கற்கள்
சுத்தியே பொருத்தி தத்தக தகவென
* சிட்டர் தமக்காசனம் சூட்டியே
ஆசான்—† சிவிரம் புரியக் கொடி நாட்டியே

---

* சிட்டர்—நல்லோர்—பெரியோர் † சிவிரம்—அரசு

(3) சந்தோஷமாக சவால் போடுறூர்
எதிர்—சர்தார் களுண்டோ வெனத் தேடுறூர்
கல்வி—சங்கத் தலைவர் மங்களம் வாழ்த்தி
கங்கண கடக தங்கத்தோடா
சதுரில் அளிக்கப்பெற்ற வீரனே
அணி—‡ சகண்டை முழக்குஞ் ஜெயமாரனே

(4) சுகிர்த சல்லாப கீதம் பாடுவோம்
இன்ப—சுரதலீலைகள் செய்யக் கூடுவோம்
அடி—சுப்பிரயோகம் இப்புவி தனிலே
ஒப்புடன் புரிய தப்பாதனுதினம்
சுருதி வழியுரைத்தார் தாசனே
தமிழ்—சுவையாய் இராஜகோபா லுல்லாசனே.

மதுரைமாநகர் ஸ்ரீமான் கவிராஜ கந்தசாமிப் பிள்ளை, நெல்லிமாநகர் ஸ்ரீமான் M. N. முத்துக் குமாரஸ்வாமிபாவலர் ஆக இருவர்கள் இயற்றிய,

கலியுகத்துப் பெண்கள்—ஒப்பாரி.

விருத்தம்.

அன்பான தாய் தந்தை சகோதரர்க்கு
ஆவிபிறிந்தால் பெண்களெல்லாம் கூடி
துன்பத்திலைழுது துடித்தொப்பாரி
சொல்லுகின்ற வக்கணையாம் பாடல்தன்னை
நன்மையுடனே எழுதி, நாடோர் மதிக்க
நலமுடனே தாருமென் றுரைத்தவர்க்கு
வன்மை ஒப்பாரி புத்தகமாய் இதைசெய்தோம்
வல்லோர் இதன்கருத்தை கவனிப்பீரே.

---

‡ சகண்டை—முரசு

பெண்கள் தகப்பனுக்கு புலம்புதல்.

ஒப்பாரி

ஆசை மகளென்னையே அன்பாய் வளர்த்த ஐயா—உன்
ஆசையைப் போக்கடித்து அமரலோகம் போனையோ
ஆகாதபாவிக்கு அன்னையுடனே நீங்கள் அன்பாய்கொடுத்
[தென்னை நீங்கள்
அருமையுடன் பெற்றபெண் ஆதரவிலாதிருக்க—நீர்
அமரர்பதி சென்றீரே தமதுமக ளென்னசெய்வேன்-இனி
ஆரென்னை யாதரிப்பார் சீர்குலைந்து நின்றேனே

சோம னுடுத்தியே என்னைபெற்ற ஐயாவே—நீங்கள்
சொக்காய் தலைப்பாகையிட்டு சரிகை யுருமாலை
சொருசாக மேல்போட்டு ஐயா நீர் விசையாகவேநடந்தால்
சொக்கி மயங்கிடுவார் தேசத்தின் தாசியர்கள்
சொல்லால் வரைமயக்கும் பல்லழகா என்தகப்பா
சொல்லா வழிநடந்து நில்லாமற் போனீரே

ஆற்றில் தலைமுழுகி என்னைப்பெற்ற ஐயாவே
ஆடைபணி யணிந்து அன்னபதார்த்தம் புசித்து
அழகான கட்டிலிலே ஆளனும் நானுமாக
அயர்ந்து நித்திரை செய்கையிலே நான்
ஆகாகன வுகண்டு அலறித் துடித்தெழுந்து
அழுது புலம்புகையில் பொழுதும் விடிந்ததையோ

காலையிலே யானெழுந்து கங்கைக்கரையணுகி—என்னைப்
[பெற்ற ஐயாவே
கையில் குடமேந்திக்கொண்டு தையலர்கள் கூட்டமுடன்
கைவீசிவீட்டுக்கு கன்னியானும் போம்பொழுது கண்ட
[தபால்காரன்

கறுப்புமை போட்டதொரு கடிதத்தை கைகொடுத்தான்
கண்டு திகிலடைந்து கடிதத்தை வாசித்து நீர்
காலன்பதி சேர்ந்தீரென்று நான்கலங்கி புரண்டழுதேன்

என்னைப்பெற்ற ஐபாவே எங்கள் குலவிளக்கே—எழுதினவ
[னென்செய்வான் நீர்
என்னைத் தெருவில்விட்டு ஏகினீர் சொக்கபுரி
என்னவிதமாய்த் துணிவேன் பொன்னுன என்தகப்பா
எவரைச் சதமென்பேன் எவர்களையான் தஞ்சமென்பேன்
ஏந்திவளர்த்த தகப்பா எமலோகம் போனீரே

திருவிழா வென்றுசொல்லி தெருவிலே கேட்டுவிட்டால்-நீர்
திடீரென்று ஓடிவந்து திரவியத்தை மூட்டைகட்டி
திக்கில்லாப் பிள்ளைகளை வண்டிதனி லேற்றிக்கொண்டு
நேரமுடன் கோவிலுக்கு அழைத்துக்கொண்டு போனீரே
தினமெல்லா மெங்களுக்குப் பணமெல்லாங் கைகொடுத்து
மனதாறச் செய்ய கனமுடனே சொல்வீரே

மல்லிகைப்பூ தேவையென்று என்னைப்பெற்ற ஐபாவே
மக்களுனைக் கேட்டுவிட்டால் மறுநிமிஷம் தாரேனென்று
மல்லிகைப் பூந்தோட்டத்தில் வல்லமையாய் சென்று
மல்லிகை முல்லைகளும் மருவுந் தவனமுடன்
மக்களுக்கு வேணுமென்று மலர்களை பரித்துவந்து
மகிழ்வாய் கொடுப்பீரே மறக்கவும் முடியவில்லையே

பொங்கல் தீபாவளியும் எங்களுக்கு சொந்தமென்று
புதுப்புடவை வஸ்திரமும் விதவிதமாய் வாங்கினீரே
பொல்லாகாலமோ சொல்லாமல் போனீரே—நீர்
போனயிடந் தெரிந்தால் புத்திரியான் வந்திடுவேன்
பொன்னுன என் தகப்பா நன்மையுள்ள உன்முகத்தை
போய்பார்க்க கூடாமல் புத்திரியான் நின்றழுதேன்.

மாமனுருக்கு புலம்புதல்.

ஐய்யோ மாமாவே அமரலோகம் போனீரோ
அவனியில் மானிடர்கள் பெருந்தன்மை யாயிருந்து
அறிவுறுத்து முங்களுக்கு அந்தகனுர் ஓலைவர
அயர்ந்து நடக்கலாமா எனை—அலையவிட்டுப் போகலாமா

அன்பான மாமாவே அழகான உன்முகத்தை
ஆருக்கும் காட்டாமல் பாருக்குள் போயமர்ந்தீர்
சின்னஞ் சிறுவயதில் சித்திரம்போ லெந்தனையே
சிங்காரித்துன் புத்திரர்கு மங்களா னந்தமாக
சித்தம்மிக மகிழ்ந்து செல்வக்கலியாணஞ் செய்துவைத்து

சீராயிருப்பதற்கு செல்வ மணிபொன் பொருளும்—உன்
செல்வக் குமாரருக்கு கல்யாணஞ் செய்துவைத்து
சென்றீரே வானுலகம் என்னருமை மாமாவே
வண்டிமே லுட்கார்ந்து நீலவர்ண சவுக்கெடுத்து
வாகனத்தை தட்டினலே வாயுவேகமா யோடும்

வழியில்வரும் ஜனங்கள் மகிழா யருகில்நின்று
வணங்கி யுமைப்புகழ்ந்து மலரடிக்கு தெண்டனிட்டு
வந்து நமஸ்கரிப்பார் உந்தன்தயை வேணுமென்று-நீர்
அந்தகன் பதிசேர எந்தவிதமாய் துணிந்தீர்

மாமியும் நீரும் நாத்தியுமாய் வண்டியிலே
மகிழ்ந்து வரும்போது புகழ்ந்தந்த பந்துஜனம்
மாக்ஷியுடன் கண்டுங்களை காக்ஷியைக் காணவந்தார்
மாமாவே யுங்களையே மறலியுலகந்தனிலே
மனந்துணிந்தே எங்களின் இனத்தைவிட்டுச் சென்றீரோ

மண்ணுசை பெண்ணுசை மக்களாசையை விடுத்து
மானிலத்தி லெங்கள்மீதும் . பாசபந்த மில்லாமல்

மனமயங்கி யெல்லோரும் மண்மீதில் நின்றழவும்
மாளாத் துயரிட்டு காலனூர் சென்றீரோ-பாவி
மனதுந் துலிரியவில்லை நினைவு துடிக்குதையோ
மாமா யெமைப்பிரிந்து எமலோகம் போனதென்ன

அண்ணியாருக்குப் புலம்புதல்

அண்ணியரே அண்ணியரே அண்ணனிட தேவியரே
அண்ணனை நீ பிரிந்து அமரலோகம் போனதென்ன
அருமையான மக்களையும் அண்ணனையும் அலையவிட்டு
அந்தகன்பதி சேர உந்தனுக்கு ஞாயமாமோ

ஆடிப்பாடி யான்களைத்து அன்னமென்று நாடிவந்தால்
அன்ன பதார்த்தமிட்டு அன்பா யுபசரிப்பாய்
சின்னஞ் சிறுவயதில் சீராட்டி நீராட்டி—நீ
செல்வமாய் வளர்த்தநாத்தி என்னையலையவிட்டு
சிட்டுப் பறந்தாற்போல் விட்டுப் பிரிந்தாயோ

சித்தந் துடிக்குதண்ணி மெத்தத் துயராகுதண்ணி-என்
சிந்தை கலங்குவதுன் திருவுளத்தின் சம்மதமோ
செல்வமாய் வளர்த்த அண்ணி நீ சொல்லாமற்போனயே
எங்கள்குல விளக்கே எழிலான ரத்தினமே
எவதண்ணனுக் குயிரே மனமகிழ்ந்த கற்பகமே
எங்களை யலையவிட்டு எமலோகம் போனதென்ன

ஏங்கித் துடிக்கிறோமே தாங்கொணு துயரத்தால்
என்னருமை அண்ணியம்மா பொன்மணியே பூஷணமே
எமபுரிக்குஉனை யனுப்பி ஏங்கித் துடிக்கிறோமே
காக்கை சலித்ததானல் காதம்போய் காதம்வரும்
கழுகு சலித்ததானல் மலைகளிலே சஞ்சரிக்கும்
கன்னியான் மனஞ்சலித்தால் நிற்க நிழலுமில்லை
காதடைத்து வந்தாலும் ஆதரணை செய்வாரில்லை

கருத்துள்ள அண்ணியரே பொறுக்குமோ இது கடவுளுக்கு
கலங்கிமனஞ் சோர்ந்தழுது கன்னி புலம்புகிறேன்

முத்தா பரணமிட்டு முன்கைவளையலிட்டு-அண்ணன்
முன்னாலே நீவந்தால் என்மனம் மகிழ்ந்திடுவேன்
முச்சந்தி வாசலிலே இச்சமய மெந்தனேயே
முந்தாணியால் மறைத்து அந்தகன்பதி சேர்ந்தாய்
முகஞ்சலித்து யானழுது அகமெலிந்து நின்றழுதேன்
முத்தான உன்முகத்தை எத்தினத்தில் காண்பேனோ

ஆருமற்ற பாவியைப்போல் அழுது புலம்புமென்னை
ஆதரிப்பா ரில்லாமல் மாதாவும் நீபிரிந்தால்
ஆகாக் கினவுகண்டு அழுது துடித்தகொள்ளை
அழகுமக ளெந்தனுக்கு அனலாய் முடிந்ததம்மா
ஆறு குறுக்காச்சு அல்லல்மிக உண்டாச்சு
ஆசைமிகு அண்ணியரே உன்பாசத்தை மறப்பேனோ

அண்ணனுக்குத் தங்கை புலம்புதல்

அண்ணடா அண்ணடா என்பிறவி அண்ணடா
நீ ஆகாதநோயாலே அவதிப்பட்டிருக்கையிலே—அந்த
அண்ணியும் மெந்தனுக்கு அறிவிக்கவில்லை ஐயோ
அனியாயமாக உன்னை இக்கணத்திலே பிறிந்தேன்
அரும்பிறவி அண்ணாஉன்னை அடிக்கவந்த எமனுக்கு
ஆதரவு சொல்லிவிட்டு அனுப்பஉம்மா லாகாதோ

ஆச்சா வைரமே அருபதடிக் கம்பமோ
அண்ணிக்கு ஏற்றதொரு அழகான சுந்திரனே
அண்ணியை அலையவிட்டு அமரலோகம் போனாயோ
அதிகார வீராயுன் ஆண்மையெங்கே வைத்தாயோ
அம்மாள் வயிற்றில் அன்பாகவே பிறந்து
ஆசையாய் யென்னைவளர்த்த அழகு சகோதரனே

ஆற்றிலே ஸ்னனஞ்செய்து ஆண்டவனைப் பூசித்து
அரஹராவென்று சொல்லி திருநீறு மேலணிந்து—நீ
அன்பா யெழுந்திருந்து நன்மையுடனே போனல்
அரங்கத்தில் மேலேறி அன்புடனே பார்த்திருப்பேன்
அன்னை தந்தைக்குப் பதிலாய் அன்பா யெனைவளர்த்த
அண்ணுவே யெனைவிட்டு அமரலோகம் போனயோ

நம்முடைய பெற்றோர்கள் அன்பாய் தவமிருந்து
நலமுடனே பிள்ளைகளை சீலமுடன் பெற்றெடுத்தார்
நாளும் பிரியாமல் நன்மையுட னமிருந்து
நாதாரியாகவே தான் நடுத்தெருவில் நின்றழுதேன்
நம்பிய தங்கையை விடுத்து அன்பாய் மொழியாமல்
நமலோகம் போனீரே நானென்னமா யிருப்பேன்

தாயாருக்குப் பெண்கள் புலம்புதல்.

அம்மாடி என்னைப்பெற்ற ஆசையுள்ள அம்மாடி
அன்பான உன்வயிற்றில் ஐயிரண்டு மாதமாக—நீ
ஆசையுடன் வைத்திருந்து பாசமுடன் பெற்றாயே
ஆசைமகளெனை விட்டு அமரர்பதி சென்றாயே—நீ
அனுதினமும் பாலூட்டி சீராட்டியே வளர்த்து
அலையவிட்டு போனதினல் கலங்குதம்மா யென்மனது

தாயில்லா பெண்ணென்று வாய்விட்டெவரும் சொல்ல
தரணியில் எனைவிட்டு பராமுகமாய் போகலாமா
தங்கத் திருமுகத்தை தாயேயென்று காண்பேன்
தாயை யிழந்துவிட்டுத் தவித்துக் கலங்குறேனே
தன்னந்தனியா யிருந்து தரணியிலே நின்றழுதேன்—நான்
தயங்கி மனங்கலங்கி மயக்கமுற்று வாடுறனே

என்னை பெற்றாளே அம்மாடி ஆசையுள்ள அம்மாடி
ஏழைமகளென்று எனக்குபண்டம் செய்துவருவாய்

எங்களண்ணி மூதேவி என்னைக் கண்டாலேய தட்டி
எங்குவந்தாய் போடியென்று என்னைத் துரத்திவிட்டால்-நீ
என்பிறவி அண்ணனிடம் என்குறையை சொன்னயானல்
என்னருமை தங்கையென்று பொன்பணிகள் தான் தருவான்

அன்பாயன்னம் புசித்து வெற்றிலை பாக்குடனே
அம்மாடி வந்துட்கார்ந்து பள்ளாங்குழி யாடிருந்தேன்
அன்பான உன்மகளை அழைத்து தபால்காரன்
ஆர்போட்டார் நட்பேட்டு காயிதமென்றே கொடுத்தான்
அதற்கோரணு கொடுத்து ஆசையுடனே பிரித்து
அம்மாளிறந்தாளென்று படித்துவிட்டு யானழுதேன்.

மக்கள் பெருமையென்ன மருமக்கள் சீருமென்ன
மாநிலத்தில் பந்துஜனம் தானிருக்கும் கூட்டமென்ன
மாற்ருந்தாய் தன்னிடத்தில் மக்களை நீ ஒப்பித்து
மாண்டு மடிந்தாயோ மக்கள் மருமக்களழ—இந்த
மண்ணுலகெலாங் கலங்க விண்ணுலகஞ் சென்ருயோ
மறக்கமுடியுமோ தான் இறக்கவும் நீதியுண்டோ

மாமியாருக்குப் புலம்புதல்

மாளிகைக் கேற்ற மணிவிளக்கே அத்தையம்மா—உன்
மகனை மணம்புரிந்து சுகமுடனே யான் வாழ்ந்து
மக்களைப் பெற்றிருக்க உன் கண்ணல் பார்க்காமல்
மாண்டு மடிந்துவிட்டாய் ஆண்டவனர் தன்செயலோ
மருமகளெனை விட்டு நீ மறலி யுலகுக்கேக—உன்
மைந்தருடன் யானும் சிந்தை நொந்தழுகின்றேன்

குடும்பத்தின் ரக்ஷகியாய் கொண்டுவந்தா யெந்தனையே
கொற்றவனு ரென்மணளன் கொஞ்சம் பிராயமாச்சே
கூசாமலெங்களையே கூவியழச் செய்துவிட்டு
ஆசா பாசமகற்றி அந்தகனர் தூதர்கையில்

அகப்பட்டெமலோகம் அத்தையம்மா போனதென்ன
அநியாய காலமிது என்ன விதமாயிருப்பேன்
சின்னஞ்சிறு பாலரை திகைத்தழவே செய்துவிட்டு
சிந்தைமிகக் கலங்க அந்தகனுலகு போனயோ

பல்லக்கை ஜோடித்து உம்மை பயணம் அனுப்புகிறோம்
பாலகரெல்லாம் கூடி பலவிதமாய் வாடுகிறோம்
பயணத்தையே நிறுத்தி பதிலெனக்கோர் வார்த்தை
[சொல்லும்
பெற்றதாய் தந்தையைப்போல் பிரியமுடன் காப்பாற்றி
உற்றதுணையா யிருந்து உறுதிமொழி கூறிவந்து
ஆதரித்த மாமியுன்னை அந்தகலோகத்திற்குப் போக
ஆராத்துயரடைந்தேன் அத்தையம்மா என்னசெய்வேன்

எமலோகம் நீயேக என்மனது தாளாமல்
என்னசெய்வேன் அத்தையம்மா நின்றழவும் காலமாச்சே
காருண்ய நல்மனதாய் காப்பாற்று மாமியுன்னை
காலன் பதிக்கனுப்பி கலங்கி அழுகின்றேனே
கர்த்தன் செயலிதுவோ உற்றவினையாதோ
கதறிப் புலம்புவதை கண்ணாலே பார்க்காயோ
காலன்பதி போகாமல் கன்னி யென்முன் வந்துநின்று
கண்கலங்க வேண்டாமென்று நல்வார்த்தை சொல்லாயோ

புருஷனுக்குப் புலம்புதல்

ஆசைமணவாளா அழகுநவரத்தினமே
அன்பொழுகும் கண்ணாளா அறிவிற்கு ஆதாரா
ஆசைக்கிசைந்தவரே மாசிலாமணி விளக்கே
அறியாச் சிறுவயதில் அமங்கலியா யெனைவிட்டு
அகன்றிடவும் நீதியுண்டோ அருமை மணவாளா
அந்தகனுனை யழைக்க எந்தனைப் பிரியலாமோ

மலரணையை ஜோடித்து மங்களமா யாமிருக்க
மனது பொறுக்காமல் மறலியுமை யழைக்க
மங்கையெனை விடுத்து மண்பொன்னுசையை விடுத்து
மாண்டு மடிந்தீரோ ஆண்டவனர் சோதனையோ
மன்னு உனைப்பிரிந்து மனது துணிந்தழுதேன்
என்னவிதமா யிருப்பேன் என்மனது தாளலியே

கன்னி பிராயத்திலே கலந்துநாம் வாழ்கையிலே
கல்யாண வாசலிலே காக்ஷியின்னும் மாறலேயே
பந்தலவிழ்க்கவில்லை வந்தஜனம் போகவில்லை
கூறை கலையவில்லை குடவிளக்கும் நிற்கவில்லை
கொஞ்ச வயதிலேநான் சஞ்சலமாயிருக்க
கொடுமை நீர் செய்யலாமா கோனேஎன் மணவாளா

பள்ளிக்கூடந்தனிலே பந்தாடி செண்டாடி
பள்ளாங்குழலாடி பக்ஷமுடன் நாமிருந்து
பருவதிசையடைந்து திருமணமும் யாம்புரிந்து
பரிமளங்கமிழும்படி திருச்சந்தனம் பூசி
பஞ்சணை மேலமர்ந்து கொஞ்சி விளையாடாமல்
பாவிஎமனுலகம் மேவினயோ என்கணவா விட்டு—அந்த

தாய்தந்தை சுற்றமெல்லாம் தாணியிலே யான்விடுத்தேன்
தமது துணைபற்றியானே தைரியமாய் யானிருந்தேன்
ஆகாதகாலமிது ஐயையோ என்னசெய்வேன்
ஆருமற்ற பாவிபோல அலையவே என்னைவிட்டு
எமலோகம் போனீரே என்பிராண நாயகரே
மனது துணிவேனே மனங்கலங்கி யானழுதேன்
மகதேவன் சோதனையோ மாதுயானென் செய்வேன்

பூவும் மணமும்போல் பொறுத்தமாய் நாம்வாழ
பூலோகமுண்டவனுக் காகாமல் போனதய்யா

பூவும் கசப்பாச்சு பொட்டிட்டால் திட்டாச்சு
பூசும் மஞ்சள் வேம்பாச்சு பூமானே இதுசரியோ
புறப்பட்டால் எதிர்வர பொல்லா கம்மினாட்டியென்று
பூவுலகில் பேச்சுகேட்க வைத்துசென்றாய் மணவாளா

கழுத்தில் தாலியிருக்க கன்னியான் செத்திருந்தால்
கன்னிஎனப் பூசித்து கையெடுத்து கும்பிடுவார்
கட்டழகா நீ போனால் பட்டி இவளென்று எனை
கட்டாயம் சொல்லிடுவார் கணவனே என்புருடா
கரைகாணாதேசமதாய் துரையே நீ சென்றுவிட்டீர்
கன்னி மனங்கலங்க கடவுளின் சோதனையோ

முற்றிற்று.

இதன் தொடர்ச்சியாகிய இரண்டாம் பாகம் என்னால் எழுதப்பெற்ற
மன்மத சரித சல்லாப சவால் இலாவணியை
அவசியம் பார்க்கவும். விலை அணா 8.

பு. இராஜகோபாலன்.

PRINTED AT THE AMIRTHA GUNABODHINI PRESS,
302, MINT STREET, MADRAS.

எமது சொந்தப் பிரசுரங்கள்

அங்கயற்கண்ணி அலல்து அன்புள்ள மங்கை.

இது ஓர் அபூர்வமான துப்பறியும் நாவல். 346-பக்கங்கள் கொண்டது. இக்கதா நாயகியின் உயர் குணங்களும் காதற்றிறமும், கற்பின் உயர்வும், அவளை ஏமாற்றி மணமாட பிறர் செய்யும் சூழ்ச்சிகளும், கொடூரமான கொலைகளும், பயங்கரமான விஷயங்களும், கதாநாயகன்மீது சுமத்தும் அபாண்டமான பழிகளும், துப்பறிவோரின் சாமர்த்யமும், முடிவில் உண்மைக்காதல் வெற்றிகொள்ளும் அற்புதமும், வாசிக்க வாசிக்கத் தெவிட்டாத அமிர்தமாய் விளங்கும். 1 12 0

அம்பலத்தரசன் அல்லது அமிர்தபுரியின் இரகசியம்.

இஃது உலகில் பிரசித்திபெற்ற பிரபல ஆசிரியர் ஒருவரால் எழுதப்பட்டது. இதில் இரகசியங்கள் துப்பறியச் செய்யும் ஒவ்வொரு சாமார்த்திய சம்பவங்கள் பொதிந்தது. இந்நாவல் படிக்கப் படிக்க பேரவாக் கொடுக்கக்கூடியது. தேன்போல் தித்திப்பது. பொருள் நிரம்பியது. படிப்போர் மனதை திடுக்கிடச் செய்யும் ஓர் அருமையான நாவல். சித்திரப்படங்களுடன் கூடியது. 1 8 0

ஆயிரம் தலைவாங்கிய அதிசய சிந்தாமணி

3-ஆப்டோன் படங்களுடன் கூடியது.

பிரபஞ்ச அநுபவங்களும், இயற்கையின் உண்மைகளும், உலக அதிசயஙகளும், ஆழ்ந்த கற்பனைகளும், ஆநந்தரஸ ஊற்றுகளும் அடுக்கடுக்காய்த் ததும்பி அமிர்தம் போன்று இனிக்கும் விஸ்தாரமான சரித்திரமாய் 20-அத்தியாயங்களுடன் அமைந்துள்ள அற்புதமான இனிய தமிழ் நாவல். தலை வாங்கியதாய் எத்தனையோ கதைகள் இருப்பினும், அவ்வித புஸ்தகங்களிலெல்லாம் அதியுன்னதமாய்க் கொண்டாடத்தக்கது அதிசய சிந்தாமணியே என்பதை அதைப்படிப்பவர்கள் தாங்களே நிச்சயிக்கும்படி அத்தனை சொகுசாய், நவரஸங்களும் பொருந்தி வெகு அற்புதமாக இந்த நாவல் பரிமளிக்கின்றது. 330-பக்கங்களுள்ள பெரிய நாவல். 1 0 0

அம்பலவாணன் அல்லது
கற்பகவனத்தில் நடந்த கொலை

இது ஓர் உயர்தரத் துப்பறியும் நாவல். பெண்மணிகளின் மனதிற்குமாருய், அவர்கள் விரும்பாத ஆடவரைப் பலவந்தமாகக் கணவராக்குவதில் நேரும் விபரீதங்களையும் பூமான்களின் சித்தம் நிமிஷத்துக்கொருதரம் மாறி உரிய மனைவி அருகிலிருக்க, மற்ரேர் நங்கையை இச்சித்துப்படும் அவதிகளையும், இதன் பயனுக நேரும் கொலைகளையும், துப்பறிவோர் மயிர்ச்சுருளையும் மஞ்சள் கலந்த அரிசியையும் கொண்டு குற்றவாளியைத் தொடர்ந்து சென்று கண்டுகொள்ளும் வியப்பும், வாசிக்க வாசிக்க மிக்க ஸ்வாரஸ்யமா யிருக்கும். 1 4 0

அமிர்தகுமாரி அல்லது செஞ்சிப் புதையல்.

எஸ். எஸ். அருணகிரிநாதரால் இயற்றப்பெற்ற இந்தத் துப்பறியும் நாவல் ஆரம்பம் முதல் இறுதிவரையும் ஈடில்லாத இன்பப் பெருக்கை யளிக்கவல்லது. ஓர் ரூபவதி காணமற்போன தனது தந்தையைக் கண்டுபிடிக்கத் துப்பறிவோரின் உதவியை நாடுகின்ருள். அதிலிருந்து ஆச்சரியமான தொடர்பாய் அதிவிசித்திர சம்பவங்களுடனும் வியப்புகளுடனும் கதை தொடர்ந்து சென்று இறுதியில் புதையல் இருக்கும் இடத்திற்குக் கொண்டுபோகின்றது. இதன் சுவையை வாசித்தே தெரியவேண்டும். 1 4 0

மாணிக்கவல்லி அல்லது ஓர் மாதின் மர்மம்.

இது ஒரு புதுவிதமான அமைப்பில் எழுதப்பட்ட நாவல். கதாநாயகியான மாணிக்கவல்லி வறுமைக்கொடுமையால் நாடகசாலையிற் சேர்ந்து நாட்டிய நடன ரவிகையாகி, கண்டார் மனத்தை யெல்லாம் கவர்ந்து, தன் மட்டில் தான் கலங்காத கற்புடைய காரிகையாய் ஜ்வலித்து, நற்குணங்களே உருக்கொண்டு தோன்றிய ஒருவனிடத்துத் தன் காதலை ஸமர்ப்பிக்கின்ருள். அவனது உத்தம சித்தம் உணராத பிரபுக்கள் அவள்மீது காதல் மிகுந்து மயங்க, அக்கற்பலங்காரியோ அனைவரையும் வெறுத்துத்தள்ள, இங்ஙனம் தள்ளுண்டோரில் ஒருவன் சிறிச் சினந்து செய்யும் சூதுகளும், கதா நாயகியின் பாடுகளும், அவன் தப்புவிக்கும் சூழ்ச்சிகளும் நிறைந்த இந்த நாவல் ரத்நத்தைப் படித்து முடிக்குமளவும் கீழே வைக்கமனம் வராது. முந்துங்கள். 1 0 0

திருக்கழுக்குன்றத்துக் கொலை

இது ஓர் இனிய துப்பறியும் தமிழ் நாவல். பெண்களைப் பகைத்துக் கொண்டால், அவர்கள் எதற்கும் துணிந்து விடுவார்களென்பது இந்நாவலால் விளங்கும். துஷ் கிருதயங்களும், உயில் சம்பந்தமாய் நேரும் பாவங்களும், அவற்றைத் துப்பறிவோர் கண்டறியும் சூழ்ச்சிகளும், முடிவில் இத்தனை அவகேடுகளும் விளைத்த அக்கிரமிகள் எவ்வித பயனும் அடையாமல் சிக்கி அழியும் அலங்கோலங்களும், உலகுக்கு நல்லநல்ல புடிப்பினைகளாகும். நாவல் உலகில் இந்தத் துப்பறியும் நாவலை எவரும் முதல் தரமானதென்று போற்றுவாரென்பதற்கு ஐயமில்லை. அனைவரும் படித்து மகிழத்தக்கது.

விலை ரூபா 1—8—0

பதினெட்டாம் பாஷை என்னும் அபூர்வ தமிழ் இரகசிய பரிபாஷை

இதுகாறும் வெளிவராத தமிழ் நூதனம். அபூர்வ ரகசிய பாஷை. 15-நிமிஷங்களில் கற்றுக்கொண்டு பேச ஆரம்பித்து விடலாம். தந்தியும் அனுப்பலாம், கடிதங்களும் எழுதலாம், வியாபார ரகசியங்களும், விலை ரகசியங்களும் இந்தப் பாஷையில் குறித்துக் கொண்டால வெகு நன்றாக வர்த்தகம் நடத்தலாம். கற்றுக் கொள்வதும் சுலபம். பேசுவதும் சுலபம். பெண்மணிகள் இந்த பாஷையைக் கற்றுக்கொண்டு கணவருடன் பேசினல் குடும்ப ரகசிய சங்கதிகளை மற்றவர்கள் உற்றுக்கேட்டு பிறரிடம் சொல்விக் கோள் மூட்டவும் முடியாது. மஹா அபூர்வ பாஷை. 0 8 0

மன்மத சரித சல்லாப சவால் இலாவணி

(எரிந்த கக்ஷி எரியாத கக்ஷி)

வேதாகம சாஸ்திர புராண இதிகாஸ வேதாந்த தத்துவ சாரம் சிலம்பக்கூட சிங்காரம் மோகிப்பு வர்ணிப்பு அலங்கார வழிநடைப் பதங்கள் அநேக அரிய இராகதாள வர்ணமெட்டுகள் அமைந்தது.

0 8 0

மாமிகளின் துயரம் அல்லது மருமக்களின்- கொண்டாட்டம்

அ. ரா. மாதவராய முதலியார் அவர்கள் இயற்றிய இந்நூலை ஒவ்வொரு மாமியும், மாமியின் சாமியும், மருமக்களும் பெற்றுப் படித்து மகிழத்தக்கது. 0 2 0

கண்ணைக்கட்டி காலங்கழிக்கும் மிஸ்டர் திண்ணைத்தூங்கி தடிராமன்

கல்வி கற்காதவரும் இக்கதையைப் படிக்கக்கேட்டதும் உடனே கல்வி கற்க முயலுவர். தடிராமனின் இயற்கைக் குணங்கள் இதில் வெகு வேடிக்கைதரும். தடிராமன் செய்யும் ஒவ்வோர் அகட விகடங்களும் எவரையும் குலுங்க நகைக்க வைத்துவிடும். மஹா விகட விநோதக் களஞ்சியமாய் ஹாஸ்யரஸத்தின் முதற்கதையாய் விளங்கும். 0 6 0

நவீன நவரத்தின ஒப்பாரி என்னும் காம சரிதைக் கக்ஷி

இது ரதி மன்மதா காமதகன காட்சியின் விளக்கமாய், மனத்தை உருக்கும் மாட்சியதாய் விளங்குவது. இப்புத்தகம் வெகு புது மாதிரியாகவும், மெச்சத் தக்கதாகவும், காமன் பண்டிகைகளுக்கும்

(எரிந்த கக்ஷி—எரியாத கக்ஷி)

சவால் பாடுபவர்கட்கும், இன்னும் பலவும் நிறைந்த புது விதமான சோகரஸ பெண்கள் பாடும் ஒப்பாரிகளும் காணலாம். 0 6 0

எமகாதகன் அல்லது மாயாசித்தன்.

மு. பாவலர் இயற்றிய இந்நூலை எவரும் ஆவலாய்ப் படிப்பர். விநோதமான முறையில் வியப்பை விளைத்து விவேகத்தை விருத்தி செய்யும் விசித்திரமான கதை. எமகாதகன் செய்யும் தந்திரங்களும், மந்திரோபாயங்களும், கபடமாகச் செல்வவந்தர்களை வீழ்த்தி ஏழைகட்கு உதவும் தன்மையும், ஹிருதயானந்தத்தை யூட்டவல்லது. மஹா விகட விநோதக் களஞ்சியம். 0 8 0

கணவனின்கடமை அல்லது பெண்களின் நிலைமை

ஆடவர், மகளிர் இருபாலாரும் இந்நூலை அவசியம் வாசித்தறிந்து வாழ்க்கையைச் சுவைக்கும்படி பக்குவப்படுத்திக் கொள்வாராக. வேறு எவ்வளவோ புஸ்தகங்கள் வெளிவந்திருந்தபோதிலும் இந்தநூலில் உள்ளதுபோல் படித்துத் தெரிந்து கொள்ளவேண்டிய சங்கதிகள் இதுவரையில் வெளிவரவில்லை. 0 4 0

இவைகளில் எதுவேண்டும் ?

	ரூ.	அ.	பை
இல்வாழ்க்கையின் கிரம ரகசியம் ...	3	0	0
மணவாழ்க்கையின் மர்மங்கள் ...	2	4	0
சிற்றின்ப வெற்றி ...	2	4	0
இல்வாழ்க்கையின் இரகசியங்கள் ...	2	0	0
இன்பவாழ்க்கையின் ரகசியங்கள் ...	2	0	0
இல்லறவாழ்க்கையின் இன்ப ரகசியங்கள் ...	2	0	0
மதனுகம லீலை ...	2	0	0
வசீகரண தந்த்ரம் ...	2	0	0
மங்கையின் முத்தம் சாதா ராபர் பைண்டு ...	2	0	0
முத்தத்தின் மர்மம் ...	1	8	0
மனோவசிய ரகசிய சாஸ்திரம் ...	1	8	0
கர்ப்ப சாஸ்திரம் ...	1	8	0
கைத்தொழில் வணிகரகசியம் ...	1	8	0
ஸ்திரீ புருஷ ரகசியம் ...	1	4	0
மதனரதி ரகஸ்யம் ...	1	4	0
ரதி சாஸ்திரம் ...	1	4	0
சரீர மர்ம சாஸ்திரம் ...	1	0	0
புதிய கொக்கோக வசனம் ...	1	0	0
மானிட மர்ம ரகசியம் ...	1	0	0
சதிபதிகளின் மர்மம் ...	1	0	0
ருக்மணி ஸ்திரீ புருஷ மகத்துவம் ...	1	0	0
ரதிமதன சிங்கார ரகசியம் ...	0	12	0
சிற்றின்ப சாஸ்திர சிந்தாமணி ...	0	8	0

☞ எமது கம்பெனி பெரிய கேட்லாக் புஸ்தகம் தேவையுள்ளவர்கள் உடனே எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

தி. இராஜகோபால் முதலியார்,
302, தங்கசாலைத் தெரு, சென்னை.

இனிய செந்தமிழ் துப்பறியும் நாவல்கள்.

	ரூ.	அ.
ஆநந்த கதாகல்பகம் 1-2-3-4 வால்யங்கள்--		
ஷை வால்யம் ஒன்றுக்கு ...	3	0
விசித்ரா துப்பறியும் கண் ...	3	0
பன்னிரு மரகதங்களின் மர்மம் ...	3	0
அங்கயற்கண்ணி அல்லது அன்புள்ள மங்கை ...	1	12
அம்பலத்தரசன் அல்லது அமிர்தபுரியின் ரகசியம்	1	8
திருக்கழுக்குன்றத்து கொலை ...	1	8
அமிர்தகுமாரி அல்லது செஞ்சிப் புதையல் ...	1	4
அம்பலவாணன் அல்லது கற்பகவனத்தில் நடந்த கடுங்கொலை ...	1	4
ஜலஜாக்ஷி ...	1	0
தேவி சந்திரபிரபா ...	1	0
நிர்மலா ...	1	0
இரத்னாங்கி அல்லது இரதிவிலாச மர்மம் ...	1	0
பரிமளா ...	1	0
மாணிக்கவல்லி அல்லது ஓர் மாதின் மர்மம் ...	1	0
ஆயிரம் தலைவாங்கிய அதிசய சிந்தாமணி ...	1	0
உர்து டியூட்டர் 1-2 பாகங்கள்	0	14
எமகாதகன் அல்லது மாயாசித்தன் ...	0	8
அண்டப் புளுகன் அல்லது ஆகாயப் புளுகன் ...	0	8
மன்மதசரித சல்லாப இலாவணி எரிந்தகக்ஷி எரியாதகக்ஷி ...	0	8
கண்ணைக்கட்டிக் காலங்கழிக்கும் மிஸ்டர் திண்ணைத் தூங்கி தடிராமன் ...	0	6
நவீன நவரத்ன ஒப்பாரி ...	0	5
கணவனின் கடமை அல்லது பெண்களின் நிலைமை	0	4
மாமிகளின் துயரம் அல்லது மருமக்களின் கொண்டாட்டம் ...	0	2
காதலற்ற கல்யாணம் ...	0	1
தங்கசாலைத்தெரு ஒருதாசியின் ரகசியம் ...	0	1

எங்கள் கம்பெனியின் பெரிய கேட்லாக் தேவையானவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதி தருவித்துக் கொள்ளலாம்.

தி. இராஜகோபால முதலியார், 302, தங்கசாலை தெருவு, சென்னை

11-ம் பதிப்பு! வெளிவந்துவிட்டது 11-ம் பதிப்பு!

தமிழ் நாட்டில் சுமார் 5,75,000 ஐந்து லட்சத்தி **எழுபத்தய்யாயிரம்** ஜனங்களுக்கு சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக் கொடுத்ததும் உலகமெங்கும் புகழ்வாய்ந்ததும் சென்னை சட்டசபை வித்யா இலாகா கனம் மந்திரி அவர்களால் நன்கு மதிக்கப்பட்டு உயர்தர நற்சாக்ஷி பத்திரம் பெற்றதும் இன்னும் அனேக பெரியோர்களிடமிருந்து ஏராளமான நற் சாக்ஷிபத்திரம் வாங்கப்பட்டதுமான, எங்கள் ரிஜிஸ்டர்ட் லேடி டிரேட்மார்க் போட்டுள்ள உண்மையான

ஆங்கில ஆசான்

உபாத்தியாயர் இல்லாமல் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள உதவும் புத்தகம் இதுதான். இதில் ஒரு சொல்லை உச்சரிக்கும் விதமும் அதன் இங்கிலீஷ் அர்த்தமும், மிருகம், பட்சி, கிழமை, மாதம், வருடம், புஷ்பம், ஆயுதம், ஊர்கள் முதலியவற்றின் பெயர்களும், கடிதம், உயில் பத்திரங்கள், கல்யாண சிமந்த, கருமாதி நோட்டீஸ்கள் முதலியன இங்கிலீஷிலும், தமிழிலும் எழுதும் விதமும், சிறு கதைகளும், பழமொழிகளும் அவற்றின் இங்கிலீஷ் அர்த்தமும் வெகு சுளுவான நடையில் விளக்கப்பட்டிருக்கின்றன. மாதர்களுக்கும், சிறுவர் சிறுமியர்களுக்கும், வியாபாரிகளுக்கும், உபாத்தியாயர்களுக்கும், பட்ளர், உத்தியோகஸ்தர்களுக்கும், தொழிலாளர்களுக்கும், கங்காணிகளுக்கும், மிகவும் முக்கியமானது.

50 நாளில் சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக்கொள்ளலாம்

60-நாளில் உபாத்தியாயரில்லாமல் சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக்கொள்ளலாம்.

800-பக்கங்கள் கொண்ட காலிகோ பயிண்டு விலை	ரூபா	4	8	0
ஷை தெலுங்கு புத்தகம் விலை	ரூபா	4	8	0

தி. இராஜகோபால முதலியார், 302, தங்கசாலைவீதி சென்னை.